# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20

பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 50 தை 02ஆம் நாள் திங்கட்கிழமை 15 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049







## குதூகலப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 15

தமிழ்ப் புத்தாண்டு - தைப் பொங்கல் கொண்டாட்டம் நேற்றுப் பெரும் குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது. வீடுகள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்களில் நடைபெற்ற தித்திக்கும் பொங்கல் கொண்டாட்டத்தில் பெருமளவானோர் உற்சாகத்துடன் பங்கேற்றதை அவதானிக்க முடிந்தது. ஆலய வழிபாடுகளில் மக்கள் பெருமளவில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மாலை ஆரம்பித்த வெடி ஓசையின் சத்தம் நேற்று நள்ளிரவு வரையில் தொடர்ந்தது.

கடந்த சில ஆண்டுகளாக சோபையிழந்திருந்த தைப் பொங்கல் கொண்டாட்டம் இந்த ஆண்டு களைகட்டியது. பொங்கலுக்கான தயார்படுத்தல்களும் மக்களால் உற்சாகமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நல்லூர் கந்தன் ஆலயம் உள்ளிட்ட பல இந்து ஆலயங்களிலும், » 06



வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற பட்டம் விடும் போட்டியில் பலரையும் ஈர்த்த பட்டம்.

## மருத்துவச் சான்றிதழ் பெற சென்ற சிப்பாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.15

பதவி உயர்வுக்காக மருத்துவச் சான்றிதழ் பெறச் சென்ற இராணுவச் சிப்பாய் நோயால் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், காங்கேசன் துறை இராணுவ முகாமில் கடமையாற்றிய பிரேமரட்ண (வயது-43) என்ற சிப்பாயே உயிரிழந்துள்ளார். நீரிழிவு நோயே உயிரிழப்புக்குக் காரணம் என்று தெரி » 06

## புரட்சிப் பாடல் விவகாரம்: கபே அமைப்பு முறைப்பாடு

கொழும்பு, ஜன. 15

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் எழுச்சிப் பாடல்கள் பயன்படுத்தப்பட்ட விவகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

"வடக்கு மாகா » 06

## கிணற்றில் நீராடிய மூதாட்டி மயங்கிச் சாவு

சாவகச்சேரி, ஜன.15

தைப்பொங்கல் தினமான நேற்றுக் காலை கிணற்றில் நீராடிய மூதாட்டி திடீரென மயங்கி விழுந்தார். அவர் மருத்துவமனை » 06

### காணாமற் போனோர் பணியகத்துக்கான

# ஆணையாளர்களின் நியமனத்தில் மைத்திரிபால சிறிசேன தலையீடு

### அரசமைப்புச் சபையின் முன்மொழிவை மாற்றுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 15

அரசமைப்புச் சபையால், காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிப்பதற்கு 7 பேரின் பெயர்கள் முன்மொழியப்பட்ட நிலையில் அவற்றில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார் என்று உதயன் நம்பகரமாக அறிந்தான்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து செயற்படும் என்று கூறப்பட்டிருந்தது. எனினும் பணியகம் இன்னும் இயங்க ஆரம்பிக்கவில்லை. ஆணையாளர்கள் நியமிக்கப்படாமையாலேயே இந்தத் தாமதம் ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் ஏழு ஆணையாளர்களைத் தெரிவு செய்வதற்காக, அரசமைப்புச் சபை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. 95க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டோரைக் கொண்ட அரசமைப்புச் சபை, ஆணையாளர்களாக நியமிக்கத் தகுதி வாய்ந்த 7 பேரின் பெயர் » 06

## வவுனியா விபத்தில் இருவர் உயிரிழப்பு

### வீதியோரக் கற்குவியலுடன் மோதிப் புரண்டது கார்



வவுனியா, ஜன.15

வவுனியா, தொடருந்து நிலைய வீதியில் நேற்று அதிகாலை நடந்த கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.

தொடருந்து வீதி ஊடாகக் குருமன்காடு நோக்கிச் சென்ற கார் வீதியோரம் குவிக்கப்பட்டி » 06

## 3 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

### சந்தேகநபரும் கைது



மன்னார், ஜன.15

மன்னார், எருக்கலம்பிட்டி பேருந்து நிலையத்தில் 3 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைது செய்யப்பட்டார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். » 06

## வடக்கு - கிழக்கு இணைப்பில் இந்தியாவால் எதுவும் முடியாது

### இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தன்ஜித் சிங் சந்து தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைப்பதற்கான அழுத்தங்களை இந்தியாவால் வழங்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அது இலங்கையின் உள்நாட்டு விவகாரம்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தன்ஜித் சிங் சந்து திட்ட வட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு இந்தியா அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று இந்தியத் தூதுவர் தான் » 06

## மதுபான விற்பனை நேர அதிகரிப்பு: அரசிதழை நிறுத்த மைத்திரி முடிவு

கொழும்பு, ஜன. 15

பெண்கள் மதுபானம் வாங்குவதற்கு அனுமதி வழங்கும் அரசிதழையும், மதுபான விற்பனை நிலையங்களின் நேரத்தை நீடித்தும் வெளியிடப்பட்ட அரசிதழையும் இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றுஅரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் » 06

## மைத்திரி, ரணில் களவு செய்யார்

### சந்திரிகா நம்பிக்கை

» 06

## மிஹின் லங்கா மோசடியை விசாரிப்பதற்கு ஆணைக்குழு

### அடுத்தவாரம் அமைக்கப்படும் என அரச தலைவர் மைத்திரி தகவல்

கொழும்பு, ஜன. 15

மிஹின் லங்கா, சிறிலங்கன் வானூர்திச் சேவை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அடுத்தவாரம் அரச தலைவர் ஆணைக்குழுவொன்று அமைக் » 06

### சட்டமா அதிபர் திணைக்களத்தை

## மைத்திரியின் கீழ் கொண்டுவர ஆலோசனை

கொழும்பு, ஜன. 15

சட்டமா அதிபர் திணைக்களத்தைத் தற்காலிக ஏற்பாடாகவேனும் அரச தலைவரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் » 06



உதயன் குழுமத்தின் பொங்கல் நிகழ்வு, உதயன் பணிமனையில் அமைந்துள்ள ஆலயத்தின் முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றது. உதயன் குழுமத் தலைவரும், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பணியாளர்கள் பங்கேற்றனர்.




நேற்று வடக்கின் பல பாகங்களிலும் நடைபெற்ற பொங்கல் நிகழ்வுகள்

# சிறப்புற நடைபெற்ற யாழ். இந்துவின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம். ஜன.15

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கலாசார நடைபவனி நடைபெற்றது. பாடசாலை முன்றிலில் இருந்து ஆரம்பமான நடைபவனி கே.கே.எஸ் வீதியூடாக சத்திர சந்தியை அடைந்து கஸ்தூரியார் வீதியூடாக மீண்டும் பாடசாலை முன்றலை வந்தடைந்தது.

நடைபவனியின் போது கலாசார நிகழ்வுகளாக மாட்டு வண்டி வீதியுலா பொம்மலாட்டம், குதிரையாட்டம், பறை இசை, ஒயிலாட்டம் என்பன நடைபெற்றன.

மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களான கம்பு சுற்றல், தீப் பந்தம் சுத்தல், வீர விளையாட்டுகளான வாள் சண்டை என்பன நடைபெற்றன. மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள்,பழைய மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.கலாசார நிகழ்வுகளை நிகழ்திய கலைஞர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (ந-ரி)





பொங்கல் தினத்தை முன்னிட்டு மாபெரும் விசித்திர பட்டப் போட்டியும் கல்வியில் சாதனை படைத்த சாதனையாளர் மதிப்புறுத்தம் உதயசூரியன் கடற்கரையில் நேற்று மாலை நடைபெற்றன. நிலையத் தலைவர் சு.கெங்காரூபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட பட்டங்கள் வானில் பறந்தன. (ந-108)

# கடலில் மூழ்கி இளைஞர் மாயம்

## ஒந்தாச்சிடமத்தில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களுப்பு, ஜன.15
களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எருவிலைச் சேர்ந்த 17 வயது இளைஞரே காணாமற் போயுள்ளார்.
இவர் தனது உறவினர்களுடன் ஒந்தாச்சிமடம் கடற்கரைக்குச்சென்றிருந்தபோது கடலில் நீராடியுள்ளார். அப்போது கடல் அலையில் சிக்குண்டு அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## யாழ்ப்பாண இளைஞன் டுபாயில் உயிரிழப்பு

மாங்குளம், ஜன.15
யாழ்ப்பாணம், அல்லாரையைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை டுபாயில் உயிரிழந்தார். காய்ச்சலே இவரது உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. சுதந்திரலிங்கம் தினேஸ் (வயது28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். உயிரிழப்பதற்கு முந்தைய நாள் இவர்குடும்பத்தினருடன் தொலைபேசியில் உரையாடினார் என்றும், காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்று கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் அவரைக் குடும்பத்தினர் தொடர்புகொள்ள முயற்சித்த போது முடியவில்லை என்றும், இளைஞருடன் இருந்த நண்பர்கள் மூலம் அவர் உயிரிழந்தமை தெரிய வந்தது என்றும் கூறப்பட்டது.இளைஞரின் உடலை இலங்கைக்குக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-72)



## தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வு

வவுனியா,ஜன.15
வவுனியா நகரசபையின் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
வவுனியா மாவட்ட தமிழரசுக்கட்சியின் தலைவரும் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சருமான மருத்தவர் ப.சத்தியலிங்கத்தினால் நடைபெற்ற வெளியீட்டு நிகழ்வில் வவுனியா நகரசபை தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ற.ரி4)

## தமிழர் விடுதலை கூட்டணியின் பொங்கல் தின நிகழ்வு

கிளிநொச்சி.ஜன.15
கிளிநொச்சி தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தில் பொங்கல் நிகழ்வு செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நேற்று இடம்பெற்றது.
நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வீ.ஆனந்தசங்கரி,
போர் முடிவடைந்த உடன் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க கோரியும் , காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்துக்கு தீர்வு காணுமாறும் நான் பலதடவை வலியுறுத்தியும் தீர்வு எதுவும் கிடைக்கவில்லை. யாழில் காணி தேவையில்லை. இராணுவத்தினருக்கு காணிகள் தேவையில்லை. இராணுவம் தேவையில்லை. அதையும் மீறி அரசு அங்கு இராணுவத்தை தொடர்ந்தும் வைத்திருந்தால் அது கொடுமையிலும் கொடுமை. அதை பார்த்துக் கொண்டிருக்கும் பிரதிநிதிகள் அதிலும் பார்க்க கொடியவர்கள் என்றார்.

## வேட்பாளர்களை தெளிவூட்டும் செயலமர்வு

கிளிநொச்சி.ஜன.15
கபே அமைப்பினால் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர்களை தெளிவூட்டும் செயலமர்வு நேற்று கிளிநொச்சி சோலைவனம் விடுதியில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் தென்னிலங்கையில் அதிகளவில் சுவரொட்டிகள், அலங்காரங்கள் காணப்படுகின்ற போதிலும், வடக்கில் மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. வேட்பாளர்கள் வீடுகளுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடித் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார். கபே அமைப்பின் பொறுப்பதிகாரி கீர்த்தி தென்னகோன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ற-ரி5)

## விதிமுறை மீறல் தொடர்பில் முறைப்பாடு

கிளிநொச்சி,ஜன.15
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் பதினொரு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்தது.
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் ஒன்பது அரசியல் கட்சிகளும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் ஒரு சுயேச்சைக் குழுவும் போட்டியிடுகின்றன.
எனவே வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இன்று வரை பதினொரு தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் பிரமந்தனாறு பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்துக்குள் உள்நுழைந்து தாக்குவதற்கு முயற்சி செய்த சம்பவமே பெரிய தேர்தல் விதிமுறை மீறல் சம்பவமாக காணப்படுகிறது எனவும் மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்தது.
நாட்டின் ஏனைய பகுதிகளை விட வடக்கில் இந்த தேர்தலில் மிகமிக குறைந்தளவு தேர்தல் வன்முறைகளும், விதிமுறை மீறல்களும் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பும் தெரிவித்தது. (ற-ரி4)

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜன.15
கல்ஓயாவிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
விபத்து நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. படுகாயம் அடைந்தவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயன் இன்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் ரயில் கடவையை கடப்பதற்கு முற்பட்ட போதே ரயிலில் மோதுண்டுள்ளார். உயிரிழந்தவர் தம்பலகாமத்தைச் சேர்ந்த 64 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## யானை தாக்கி ஒருவர் சாவு

மட்டக்களப்பு.ஜன.15
கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கற்கிளாச்சோலைப் பகுதியில் நேற்றுக் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்தார். சம்பவத்தில் ஏறாவூர்ப்பற்று, சித்தாண்டி பிரதான வீதியை அண்டி வாழும் தம்பிமுத்து கந்தசாமி (வயது 57) என்பவரே தாக்குதலுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது. வயல் பகுதியின் ஊடாக வரும்போதே குறுக்கிட்ட காட்டு யானை தாக்கியது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## பிணைமுறி விசாரணையின் பிரதி என்னிடம் உள்ளது

### ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கையின் பிரதி தன்னிடம் உள்ளது என்று முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய அரச தலைவர் ஆணைக்குழு கடந்த 30 ஆம் திகதி இறுதி விசாரணை அறிக்கையை அரச தலைவரிடம் கையளித்தது. இந்த அறிக்கையின் பிரதியே தன்னிடமுள்ளது என்று ரவி கருணாநாயக்க கூறியுள்ளார். மேற்படி விசாரணை அறிக்கை இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அத்துடன், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் ரவி கருணாநாயக்க கோரியிருந்தாலும் அது இன்னும் கையளிக்கப்படவில்லை. இந்த நிலையில், விசாரணை அறிக்கை உள்ளது என்று அவர் கூறியுள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (5)

## எவராவது சவால் விடுத்தால் அதனை நிரூபிக்க ஐ.தே.க.தயார்

### பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு எவராவது சவால் விடுத்தால் அதனை நிரூபித்துக் காட்ட ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கின்றது என பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்தார். களுத்துறை, பண்டாரகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில்உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் தெரிவித்ததாவது,
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணக்க கூட்டணி அரசை வேண்டாம் எனக் கூறினால், ஐக்கிய தேசிய முன்னணியின் தனியான அரசை அமைக்க ஐக்கிய தேசியக்கட்சி தயாராக இருக்கின்றது என்றார். (ற-ரி5)

## மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு.ஜன.15
மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட ஒரு தொகுதி தேக்கு மரக்குற்றிகளை ஏறாவூர்ப் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றினர்.
6 மற்றும் 11 அடி நீளமாக அறுக்கப்பட்ட 40 தேக்கு மரக்குற்றிகளும் இரண்டு துவிச்சக்கர வண்டிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. வந்தாறுமூலை உப்போடை வயற்பிரதேச வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஏறாவூர் பொலிஸாரே இந்த மரக்குற்றிகளைக் கைப்பற்றினர்.
சந்தேக நபர்களைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெறுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

## மின்சாரம் தாக்கி யானை உயிரிழப்பு

புத்தளம்,ஜன.15
மின்சாரம் தாக்கி யானை ஒன்று உயிரிழந்தது. இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.
புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் பிரதேச மக்களால் யானையின் சடலம் மீட்கப்பட்டது.
பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சார காம்பியினூடாகவே தாக்குதலுக்கு உள்ளானது. இரண்டு வார கால பகுதியில் இரு காட்டு யானைகள் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டன. (ற-ரி5)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு விழிப்புணர்வு செயலமர்வு

மாங்குளம், ஜன.15
கர்ப்பிணித் தாய்மார்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்றுமுன்தினம் கச்சாயில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.
மீசாலை, கச்சாய், அல்லாரை, பாலாவி ஆகிய பகுதிகளில் உள்ள கர்ப்பிணிகளும், இந்தப் பிரதேசங்களை அண்டியுள்ள கர்ப்பிணிகளும் செயலமர்வில் கலந்து கொண்டனர்.
கருவுற்ற நாள்முதல் தாய் மற்றும் ஏனையோரின் சிறந்தக கவனிப்பின் ஊடாகவே புத்திகூர்மையுடைய, ஆரோக்கியமான குழந்தையைப் பிரசவிக்க முடியும் என்பது தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. திரிபோசா சத்துணவை குழந்தைகளுக்கு கட்டாயமாக வழங்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
கர்ப்ப காலத்தில் பின்பற்ற வேண்டிய உணவு நடைமுறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. (ற-72)

### வலி.தென்மேற்கு பிரதேச வீதிகளுக்கு

## 18 இலட்சம் செலவில் 500 மின்குமிழ்கள் பொருத்தம்

யாழ்ப்பாணம்.ஜன.15

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வலி. தென்மேற்குப்பிரதேசத்தில் ரூபா 18 இலட்சம் செலவில்; சுமார் 500 மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. தற்போது வெளிச்சத்தில் காணப்படுகின்றன இருளில் மூழ்கியிருந்த அனேக வீதிகள்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் 28 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 600க்கும் அதிகமான வீதிகள் உள்ளன. பெரும்பாலான வீதிகளுக்குப் பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் ஒளிராது இருந்தன. அதேநேரம் அனேக வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்தப்படாமலும் இருந்தன.

கடந்த இருவருடங்களுக்கு முன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் காலப்பகுதியில் வீதிகளுக்கு மினகுமிழ்களைப் பொருத்துமாறு மக்கள் கோரிவந்தனர். சபையில் நிதியின்மை காரணமாக மக்கள் கோரிக்கை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில் வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மின்குமிழ்களைப் பொருத்துவதற்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜீபன் தனது நிதியிலிருந்து ரூபா 10 இலட்சத்தை சபைக்கு வழங்கியிருந்தார். அதே போல் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தார்.

இந்த நிதியுடன் சபை நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாவை பிரதேச சபைச் செயலர் மின்குமிழ்கள் பொருத்துவதற்கு ஒதுக்கியிருந்தார். இந்த நிதிகள் மூலம் சுமார் 500 மின்குமிழ்கள் 28 கிராம அலுவலர் பிரிவு கள்தோறும் தேவையான இடங்களில் பொருத்தப்பட்டு வருகின்றன. (எ)

### முத்துஐயன்கட்டுக் குளத்தில்

## தடைசெய்யப்பட்ட முறையில் இராணுவத்தினர் மீன்பிடிப்பு

### நன்னீர்மீன்பிடியாளர்கூட்டுறவுச்சங்கம் கண்டனம்

முல்லைத்தீவு, ஜன.13

முத்துஐயன்கட்டுப்பகுதியில்நிலை கொண்டிருக்கும்இராணுவத்தினர் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதால் நன்னீர் மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குளத்துக்கு அருகாமையில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரே இவ்வாறு சங்கத்தின் அனுமதியின்றிச் சட்டவிரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று மீனவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நன்னீர்மீன்பிடியாளர்கூட்டுறவுச்சங்கத்தலைவர்சி.சகாதேவன்தெரிவித்ததாவது:

முத்துஐயன்கட்டு குளத்தில் நீண்டகாலமாக மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். பல குடும்பங்கள் இதனை நம்பி வாழ்ந்து வருகின்றன. இராணுவத்தினரும் குளத்தில் மீன்பிடிக்கின்றனர். தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளையே அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் குளத்தில் மீன்வளம் அருகிப்போகும். எமது மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

எனவே. இதனைத் தடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டோம். அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினோம். ஆனால் இதனையடுத்து அவர்கள் மீனவர்கள் மீது கெடுபிடிகளுடன் நடந்துகொள்கின்றனர். ஆற்றில்அனுமதியுடன்மணல்ஏற்றச்செல்வோர்மீதும். ஏனையதேவைகளுக்குச்செல்வோர்மீதும் வோர்கடுமையாக நடந்துகொள்கின்றனர். இதன் எதிரொலியாக ஒருநாள் மணல்ஏற்றச் சென்றவர்கள் இராணுவத்தினரால் தடுத்தும் வைக்கப்பட்டனர். இவ்வாறு இராணுவத்தினரின்கெடுபிடிகளால் நாங்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றோம்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் இராணுவத்தினரை அறிவுறுத்த வேண்டும். அவர்கள் தங்கூசி வலைகளைப் பாவிப்பதை தடைசெய்யவேண்டும். எமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டும் என்றார். (ய-500)

## கசிப்பை உடைமையில் வைத்திருந்த நபருக்கு தண்டம்

சாவகச்சேரி.ஜன.15

850 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த வெள்ளாம் போக்கட்டி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் ப.குக னேஸ்வரன் குறித்த நபருக்கு தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## ஜெர்மன் வாசி யாழில் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம் ஜன 15

ஜேர்மன் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்தவர்யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். அவர் உயிரிழந்ததற்கு மாரடைப்பே காரணம் என இறப்பு விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எக்கோன் சீபியேன்(வயது 63) என்ற ஜேர்மன் வாசி இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் 25 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்து சென்றுள்ளார். கடந்த 7 ஆம் திகதி மனைவியுடன் சுற்றுலாவின் பொருட்டு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். எக்கோன் சீபியேன் கடந்த 12 ஆம் திகதி சுவாசக் கோளாறு ஏற்பட்டது என்று தெரிவித்து தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினம் மாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (21-8)

## நீதிமன்றில் அலைபேசியை அலறவிட்டவருக்கு தண்டம்

சாவகச்சேரி.ஜன.15

திறந்த நீதிமன்றில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அலைபேசியை அலறவிட்ட சாவகச்சேரி வாசிக்கு 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது.நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

வழக்கைப் பார்வையிட வந்தவரின் அலைபேசி திடீரென அலறியது. அதையடுத்து பதில் நீதிவானின் பணிப்பின் பேரில் அந்த நபருக்கு எதிராக நீதிமன்றப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் நபரை எச்சரிக்கை செய்து 500 ரூபா தண்டம் விதித்தார்.நீதிமன்ற வளாகத்தினுள் கைபேசிகள் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது' என்ற அறிவித்தல் பலகை நீதிமன்ற வளாக முன்றலில் காணப்படுகிறது. அத்துடன் நீதி மன்ற வளாகத்தினுள் செல்பவர்கள் கைபேசியின் இயக்கத்தை நிறுத்தி வளாகப் பாதுகாப்பு அலுவலரின் அறையில் ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-9)

## சாலையில் சென்ற மாணவியை மோதிவிட்டு தப்பியோடியது மோட்டார் சைக்கிள்

சாவகச்சேரி ஜன.15

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற மாணவியை மோதிவிட்டு தப்பியோடியது மோட்டார் சைக்கிள். காயங்களுக்கு உள்ளான மாணவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மட்டுவில் ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சண்முகராசா திரிஷிகா (வயது 10) எனும் மாணவி மட்டுவில் புத்தூர் சாலையில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்புகையில் வழியே வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது.

காயமடைந்த மாணவியை அயலவூர்கள் காப்பாற்றி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது . (எ-9)

## புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.15

இலங்கையின் திருத்தூதர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டு நிறைவு நிகழ்வு சில்லாலையில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் பல பகுதியிலிருந்து வருகை தந்து மக்கள் சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒன்று கூடி பிற்பகல் 3 மணிக்கு புனித யோசவாஸ் திருத்தலம் அமையவுள்ள இடத்துக்கு மஞ்சள் வெள்ளைக் கொடிகளைப் பிடித்தவாறு பவனியாகச் சென்றனர்.

நிகழ்வில் யாழப்பாண ஆயர் பேர்ணாட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் கூட்டுத்திருப்பலி இடம்பெற்று பனித யோசவ்வாஸின் திருச்சொரூப ஆசி வழங்கப்பட்டது.

அதேவேளை திருத்தல கட்டுமானத்துக்கான நிதி சேகரிப்பு நிகழ்வு யாழ்ப்பாண ஆயரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் இந்த ஆண்டை இளையோர் ஆண்டாக பிரகடனப்படுத்தும் கொடியேற்றல் நிகழ்வும் இலச்சினை வெளியீடும் இடம்பெற்றது. நிகழ்வில் பெருமளவான குருக்கள், துறவிகள, அருட்சகோதர சகோதரிகள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (எ-135)

### சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த வருடம்

## 10,380 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன

சாவகச்சேரி.ஜன.15

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த வருடம் 10 ஆயிரத்து 380 வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது என அலுவலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தடுப்பூசி மருந்துகள், பிரிவில் உள்ள 7 பொது சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகளில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்பட்டன.

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றுவதில் தென்மராட்சி பிரதேச மக்கள் ஆர்வத்துடன் செயற்படுகின்றனர். (எ-9)

### அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில்

## 2017இல் வெளிநோயாளர் பிரிவில் 43,847 பேர் சிகிச்சை பெற்றனர்

அளவெட்டி. ஜன.15

அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் கடந்த வருடம் வெளி நோயாளர் பிரிவில் 43 ஆயிரத்து 847 பேர் பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளனர்.

அவர்களில் 156 பேர் விலங்குகளால் கடியுண்டனர் எனவும் அவர்களில் 133 பேர் நாய் கடிக்கும் 23 பேர் பூனைக் கடிக்கும் உள்ளாகி சிகிச்சை பெற்றனர்.

மேலும் பொது மருத்துவ சிகிச்சைப் பிரிவில் 6ஆயிரத்து 897 (கிளினிக்) பேர் சிகிச்சை பெற்றனர் எனவும் மொத்தமாக ஐம்பதாயிரத்து 900 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரி விக்கின்றன. (எ-36)

## சண்டையைத் தடுக்க முற்பட்டவர் தாக்கப்பட்டார்

மதிலுக்கு வெளியேயும் உள்ளேயும் நின்ற இரு பெண்கள் வாக்குவாதப்பட்டதைத் தடுக்க மதிலால் எட்டிப் பார்த்தவர் கொட்டனால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மிருசுவில் பாலாவியில் இடம்பெற்றது. அக்கா தங்கை இருவர் மதிலுக்கு உட்புறம் ஒருவரும் மதிலுக்கு வெளியே ஒருவரும் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். அதை அவதானித்த அக்காவின் கணவர் வாக்குவாதத்தை நிறுத்துமாறு மதிலால் எட்டிக் கூறியபோது கொட்டனால் தாக்கியதில் தலையில் காயமேற்பட்டது.

காயமடைந்த அதே இடத்தைச் இராசதுரை தெய்வேந்திரம் ( வயது 54 ) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# எவரும் எந்தச் செயலகத்திலும் பிறப்புச் சான்றிதழைப் பெறலாம்

## யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது

யாழ்ப்பாணம், ஜன.14

இலங்கையின் எப்பாகத்திலும் பிறந்த எந்தவொரு குடிமகனும் தனக்கு அருகிலுள்ள பிரதேச செயலகத்தில் பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.பிறப்புச் சான்றிதழ் ஒருவருக்கான அடிப்படை சட்ட ஆவணமாகும். ஒருவரின் பிறப்பை உறுதிப்படுத்தி அவர் எந்த நாட்டின் பிரஜை என்பதையும் நிரூபிப்பதுக்கு அதுதேவை.

அடையாள அட்டை எடுக்க, திருமணத்தைப் பதிவுசெய்ய, பாடசாலைகளில் குழந்தைகளைச் சேர்க்க, கடவுச்சீட்டு எடுக்க, குடும்ப அட்டையில் பெயர் சேர்க்க, வயதை நிரூபிக்கவென பல தேவைகளுக்கு இந்த ஆவணம் இன்றியமையாதது ஆகும். இவை மாத்திரமல்ல ஒருவர் இறந்தபின்னரும் அவருடைய சந்ததிகளின் பல தேவைகளுக்கும் இது தேவைப்படுகினறது.

முன்னர் மக்கள் தமது பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர். தாம் பிறந்த இடங்களுக்குச் சென்றே பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுவந்தனர். இதனால் அலைச்சலுக்கும், பணச்செலவுக்கும் முகம்கொடுத்து வந்தனர். தமது காரியங்களை நிறைவேற்றுவதில் தாமதங்களையும் எதிர்கொண்டனர்.

எனினும், மேற்படி அறிவிப்பானது மக்களுக்கு ஒரு இனிப்பான செய்தியாகும். இதுதொடர்பில் மாவட்டச் செயலகம் மேலும் தெரிவித்திருப்பதாவது:

எந்தமாவட்டத்தில்பிறந்தவர்களாயினும் தமக்கு அருகில் உள்ள பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பிறப்பு நிகழ்ந்த மாவட்டச் செயலகத்திலும், பின்னர் மாவட்டத்தின் குறித்த பிரதேசசெயலகங்களிலும் பெற்றுக்கொள்ளும் நடைமுறையே இருந்துவந்தது. தற்போது பிறப்பு நிகழ்ந்த மாகாணத்தின் எப்பகுதியிலும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை உள்ளது.

இருப்பினும், இனிமேல் நாட்டின் எப்பாகத்தில் பிறந்தவர்களும் நாட்டின் எந்தப் பிரதேச செயலகத்திலும் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-8)

## சிதம்பரத்துக்குச் செல்லவுள்ளோர் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம், ஜன.15

சிதம்பர தரிசனத்துக்கு தயாராகும் பக்தர்கள் யாழ்ப்பாண கச்சேரிக்கு முன்பாக உள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்தில் கடவுச்சீட்டுடன் வருகை தந்து விரைவாகப் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதல் உதவிச் சங்கமும், இந்து சமயத் தொண்டர் சபையும் இந்த அறிவிப்பை வழங்கியுள்ளன.

அத்துடன் சிதம்பரம் செல்ல அனுமதி மற்றும் ஏற்பாடு செய்தோருக்கும் நன்றி தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் உள்ளதாவது:

தமிழ்நாடு சிதம்பரம் நடராஜப்பெருமான்திருக்கோவில் தரிசனத்துக்கு இலங்கைத் திருநாட்டின் சைவப்பெருமக்கள் நாம் இலங்கை காங்கேசன்துறைமுகத்தில் இருந்து பயணத்தை மேற்கொள்ள அனுமதி அளித்து சகல ஏற்பாடுகளையும் செய்து தந்த இலங்கை அரசுக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் துணைத்தூதுவருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும், இந்து சமயக் கலாசாரத் திணைக்களத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றுள்ளது.

மேலதிக தொடர்புக்கு 0714402318 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். எ-4)

## வங்கிகளுக்கு சிறப்பு விடுமுறை

தென்மராட்சி,ஜன.15

தைப்பொங்கல் தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் இன்று திங்கட்கிழமை வங்கிகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இன்று திங்கட்கிழமை வங்கி நடவடிக்கைகள் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## திருவள்ளுவர் ஆண்டை வரவேற்கும் நிகழ்வு

கிளிநொச்சி ஜன. 15

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினரால், திருவள்ளுவர் ஆண்டை (2049) வரவேற்கும் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

அத்துடன் அண்மையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தினர் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வும் நடைபெறும் என சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தெரிவித்தார். (எ-9)

## பட்டி பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பட்டிப் பொங்கல் விழா இன்று மாலை 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கோபூசை, கோபவனி, பட்டிப்பொங்கல், கோமாதா கீர்த்தனங்கள் நிகழவுள்ளன.

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-21)

## வாள்வெட்டுக் குழு அடாவடி பொருள்கள் நொறுக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.14

ஏழாலை மேற்கு அளவோடையில் வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்த கும்பலொன்று அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி பொருள்களுக்குச் சேதம் விளைவித்துள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் தெரியவருவதாவது:

சம்பவத்தினம் இரவு மூன்று மோட்டார் சைக்கிளில் 9 பேர் வந்தனர். வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தினர். ஜன்னல் கண்ணாடிகளை அடித்துநொறுக்கினர். நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அந்தக் குழு அடித்து நொறுக்கியது. அவர்கள் வாள், கோடரி மற்றும் கத்தி போன்ற கூரிய ஆயுதங்களையும் கொண்டுவந்திருந்தனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ய-4)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொங்கல் விழா இன்று காலை 8.30 மணிக்கு சங்க வளாகத்தில் நடைபெறும். சங்கத்தின் தலைவர் என். எஸ்.சத்தியதாசன் தலைமையில் நடைபெறும் விழாவில் சிறப்பு சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (ய-17)

## கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ்ப்பாணம் கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் தரம் 1ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை மு.ப 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக கோண்டாவில் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை பிரதியதிபர் இ. அருணகிரிவாசன் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ய)

## கோபூசை

யாழ்ப்பாணம்.ஜன.15

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானத்தில் கோடிபுண்ணியம்தரும்கோபூஜை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பூஜையில் இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-21)

## டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.15

யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாட்டு சிறப்பு நடவடிக்கைகளை அடுத்த வாரங்களில் நடத்துவதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் நாவாந்துறை மற்றும் வண்ணார்பண்ணை பிரதேசங்களில் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதியில் நடத்தப்படவுள்ளன.

17ஆம் திகதி நாவாந்துறையில் கிராமசேவகர் 85 மற்றும் 87 பிரிவுகளிலும், 18ஆம் திகதி வண்ணார்பண்ணை 100 மற்றும் 102 கிராம சேவகர் பிரிவுகளிலும் இடம்பெறும் என்று மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்தது. (எ-17)

## பணியாளர்களுக்கு பொங்கல் பொருட்கள்

யாழ். குடாநாட்டில் உள்ள பனை, தென்னை அபிவிருத்திச் சங்கங்களின் பணியாளர்களுக்கு தைத்திருநாளுக்கான பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன என கூட்டுறவுச் சங்கங்கங்களின் சமாசம் தெரிவித்தது.

கடந்த சில வருடங்களாக சங்கப் பணியாளர்கள், அங்கத்தவர்களுக்கு பானை உட்பட பொங்கலுக்குத் தேவையான பொருள்கள் பொதி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. சங்கத்தின் பல்வேறுபட்ட உதவித் திட்டங்களின் கீழ் இந்த பொங்கல் பொருட்களும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-17)

## கெற்பேலி பாடசாலையில் கால்கோள் விழா

தென்மராட்சி, ஜன.15

கொடிகாமம் கெற்பேலி அ.த.க.பாடசாலையின் தைப்பொங்கல் விழாவும், தரம் ஒன்றில் மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழாவும், கற்றல் உபகரணங்கள் வழங்கலும் இன்று காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.ஜெயதேவனும், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திருமதி இ. யோகராசாவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் லண்டனில் வதியும் பாடசாலையின் நலன்விரும்பியான மருத்துவர் சு.சசிகுமாரினால் வழங்கப்பட்ட சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## சித்தன்கேணியில் கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறும். வகுப்பாசிரியர் தி.கௌசலா தலைமையில நடைபெறும் நிகழ்வுக்கு ஓய்வுநிலை அதிபர் க.நல்லையா முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ய-29)

## கால்கோள் விழாவும் தைப்பொங்கல் நிகழ்வும்

சாவகச்சேரி.ஜன.15

மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்றில் மாணவர்கள் இணைக்கும் கால்கோள் விழாவும் தைப்பொங்கல் நிகழ்வும் அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## திறப்புவிழா

புற்றளை மகாவித்தியாலயத்தில் பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பமும், சிறுவர் விளையாட்டு முற்றத்திறப்பு விழாவும் நாளை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக மூத்த விரிவுரையாளர் கே. சண்முகநாதன் (ஆங்கிலத்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) கலந்து கொள்ளவுள்ளார். (ய)

## கொண்டலடி விநாயகர் ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம்.ஜன.15

யாழ்ப்பாணம் வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ற-ரி5)

## பிணை முறி மோசடி தொடர்பில்

# நடவடிக்கை எடுக்காவிடில் கட்சியிலிருந்து விலகுவேன்

*ஹர்ச டி சில்வா கூறுகின்றார்*



கொழும்பு. ஜன. 15
பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறுவேன்.
இவ்வாறு பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.
ராஜகிரிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் பிணைமுறி விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பிணைமுறிமோசடி தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கமைய குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு எடுக்கப்படாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்க முடியாது. எமது கட்சியோ அல்லது தலைவரோ திருடர்களை ஒருபோதும் பாதுகாக்கமாட்டார்கள்- என்றார். (ற-5)

### குதூகல...

யன்னை பேராலயம், மன்னார் கத்தோலிக்க ஆலயங்களிலும் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றன. அவற்றில் மக்கள் பேரார்வத்துடன் கலந்து கொண்டனர்.
வீடுகளில் பொங்கல் பொங்கி படையல்களில் மக்கள் ஈடுபட்டனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமான போதும், வர்த்தக நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் திறக்கப்பட்டு பொங்கல் பொங்கி வழிபாடுகள் நடத்தப்பட்டன.
சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் உள்ளிட்ட பொதுஇடங்களிலும் பொங்கல் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.
கடந்த காலங்களைப் போலல்லாது, இந்த ஆண்டு பல இடங்களிலும் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு பொங்கல் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில், பொங்கல் விழாவை முன்னிட்டு கலாசாரப் பேரணியும் நேற்று இடம்பெற்றது.
பட்டாசுகள் சத்தமும் ஓய்வில்லாமல் கேட்டுக் கொண்டிருந்தது. சிறுவர்கள், இளையோர் வீதி வீதியாக வெடிகளைக் கொழுத்தினர். வீதிகள் எங்கும் பட்டாசுச் சிதறல்களே காணப்பட்டன.
அதேவேளை, முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டிலும் பொங்கல் விழா இடம்பெற்றது. (ற-5,ரி4,135,56)

### கிணற்றில்...

கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கைதடி, நவபுரத்தில் நடந்துள்ளது. புத்தூரைச் சேர்ந்த நாராயணி புதியாள் (வயது-66) என்பவரே உயிரிழந்தார்.
இவர் கணவர் மற்றும் பிள்ளைகள் இல்லாத நிலையில் கைதடி நவபுரத்தில் உள்ள பெறாமகளின் வீட்டில் தங்கியிருந்தார். நேற்றுக் காலை கிணற்றில் தொட்டிக்குள் தண்ணீர் அள்ளி நிரப்பி விட்டு அமர்ந்திருந்து நீராட்டிய வேளையில் மயங்கி சரிந்தார் . உடனடியாக அவரை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் ஏற்கனவே மூதாட்டி உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.
இவரது சாவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர். பதில் நீதிவான் பிரதேச திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ. இளங்கீரன் மூலம் இறப்பு விசாரணைகள் நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு பணித்தார். (ற-9)

### வவுனியா...

ருந்த கற்களுடன் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.
சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தார்.
விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)

### மிஹின்...

கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
குருநாகலைப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகையின்கீழ் 170 உள்ளூராட்சி சபைகள் இருந்தன. அவற்றில் தலைவர் பதவி வகித்தவர்களுள் சுமார் 100 பேர்வரை இந்த முறை தேர்தலில் போட்டியிடவில்லை. ஊழல், மோசடி, கொலை, கொள்ளை உள்ளிட்ட காரணங்களால் அவர்கள் குற்றவாளிகளாக இருக்கின்றனர். நாட்டை சுத்தப்படுத்த வேண்டுமென்றால் முதலில் கிராம மட்டத்திலிருந்து அதற்கான நடவடிக்கையை ஆரம்பிக்கவேண்டும்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இன்று உட்கட்சிமோதல் வலுத்துள்ளது. கூட்டணிக் கட்சிகளைக் கைவிட்டுச்செல்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திசாநாயக்க அதற்கான சிறந்த சான்றாக விளங்கு கிறார். ஐக்கிய தேசியக் கட்சியுன் இணைந்து ஆட்சி நடத்துகின்றோம் என்று எமக்கு எதிராக குற்றஞ்சாட்டுகின்றனர். அதற்கான ஆரம்பத்தை 2007ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவே வழங்கியிருந்தார் என்பதை மறந்துவிடக் கூடாது.
அடுத்துவரும் நாள்களில் அரசியல்மாற்றங்கள் ஏற்படவுள்ளன. சிறிலங்கன் வானூர்திச் சேவை, மிஹின் லங்கா ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள ஊழல்,மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் - என்றார். (ற-5)

### மதுபான...

அரச தலைவர் குறிப்பிட்டுள்ளார்.
மதுபான சாலைகளை முற்பகல் 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்க அனுமதி வழங்கியும், பெண்களுக்கு மதுபானங்களை கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவது தொடர்பாகவும் நிதி அமைச்சால் கடந்த வாரம் இரண்டு அரசிதழ்கள் வெளியிடப்பட்டன. இந்த நடவடிக்கைக்குப் பல தரப்புக்களிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது.
போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தை ஒரு புறத்தில் அரச தலைவர் மைத்திரி முன்னெடுத்துக் கொண்டு மறுபுறம் மதுபாவனையை ஊக்குவிக்கும் வகையில் செயற்படுகின்றனர் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.
அதனையடுத்தே அரச தலைவர் மைத்திரிபால, அரசிதழ்களை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். (ற-5)

### 3கிலோ...

அநுராதபுரம், தமுத்தே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 2 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.
மன்னார் பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் நவரத்தினவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் சிரந்த பீரிஸ் , உதவி பொலிஸ் அத்தியட்சகர் எதிரிசிங்க ஆகியோரின் வழிகாட்டலில் துரிதமாகச் செயற்பட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் 2 கிலோ 55 கிராம் எடை கொண்ட கஞ்சாப் பொதியை மீட்டனர்.
கைது செய்யப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விசாரணைகள் நடைபெறுகின்றன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,56)

### மைத்திரி...

கொழும்பு, ஜன. 15
கூட்டு அரசின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் களவு செய்ய மாட்டார்கள் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
வெயங்கோட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
சர்சைக்குரிய பிணைமுறி சம்பவத்தில் தவறு இடம்பெற்றிருக்குமாயின் அதன் பொருட்டு தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சர்களும் சில அதிகாரிகளும் தவறு செய்தவர்களாக இருக்கலாம். அவர்களை ஒன்றாக கொன்று ஒழித்து விட முடியாது. படிப்படியாகவே தவறிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க முடியும்.
மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடி தொடர்பில் அதன் முன்னாள் ஆளுநர் உடனே வீட்டுக்கு அனுப்பப்பட்டார். நிதி அமைச்சரும் பதிவியிலிருந்து நீக்கப்பட்டார். மகிந்த ராஜபக்ச காலத்தில் அவ்வாறு ஒரு தண்டனையும் வழங்கப்பட்டதில்லை. மகிந்த ராஜபக்சவும் பல பில்லியன் கணக்கில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார். அது தொடர்பில் தற்போது குற்றப் புலனாய்வு பிரிவினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. தற்போதைய அரசின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் களவு செய்ய மாட்டார்கள் - என்றார். (ற-5)

### மைத்திரியின்...

கோரிக்கை விடுத்துள்ளனர்.
அரச தலைவருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடலின்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மத்தியவங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குரிய பரிந்துரையை சட்டமா அதிபர் திணைக்களமே மேற்கொள்ளும். அந்தத் திணைக்களமானது ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள அமைச்சர் ஒருவருக்குக் கீழ் இருக்கின்றது.
பிணைமுறி விவகாரத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கி, இழப்பீட்டுத் தொகையை ஈடுசெய்யும் வரையிலாவது மேற்படி திணைக்களத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ற-5)

### வடக்கு...

ஜித் சிங் சந்துவிடம், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தியத் தூதுவர் தரன்ஜித் சந்துவை கடந்த வெள்ளிக்கிழமை இந்தியத் தூதரகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தும்போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.
"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரம். அத்துடன், அது நீதிமன்றத்துடன் தொடர்புடைய விடயம். இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் எவ்வாறாக அதனைக் கையாளலாம் என்பதை இந்திய நடுவண் அரசே தீர்மானிக்கவேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் நாங்கள் தலையிடப் போவதில்லை.
வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்தே ஆகவேண்டுமென நாங்கள் அழுத்தம் வழங்க முடியாது" என்று இந்தியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார் என்று அறிய முடிகின்றது. (ற-5)

### ஆணையாளர்களின்...

களை தெரிவு செய்து கடந்த டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி அரச தலைவருக்கு அனுப்பியிருந்தது.
அரசமைப்புச் சபையின் முன்மொழிவில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் அறிவுறுத்தியுள்ளார் என்று அறிய முடிகின்றது.
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கில் 330 நாள்களுக்கு மேலாக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அரசால் கூறப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் இன்னமும் செயற்பட ஆரம்பிக்கவில்லை.
இதேவேளை, அரசமைப்புச் சபை கடந்த டிசெம்பர் மாதம் ஆணையாளர்களாக முன்மொழிந்தவர்களில் ஒருவரான மனித உரிமைச் செயற்பாட்டாளரான சுனிலா அபேசேக்ரவுக்கு எதிராக இராவணா பலய போர்க்கொடி தூக்கியிருந்தது. சுனிலா அபேசேகர இராணுவத்தினருக்கு எதிரானவர் என்று இராவணா பலய குறிப்பிட்டிருந்தது.
இந்தப் பின்னணியிலேயே அரசமைப்புச் சபையின் முன்மொழிவில் மாற்றங்களை மேற்கொள்ள அரச தலைவர் பணித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற-5)

### புரட்சிப்...

ணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளுக்கு, விடுதலைப் புலிகளின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியப் பாடல்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தப் பாடல்களை தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துவது தேர்தல் விதிமீறலாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள தமது பணியகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல்வாதியான அங்கஜன் இராமநாதன் புலிகளின் பாடல்களை ஒலிக்கவிட்டிருந்தார்.
அங்கு அரச தலைவர் மைத்திரியின் படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை, புலிகளின் பாடல்களும் ஒலிக்க விடப்பட்டிருந்தன. இது தேர்தலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் இது சட்டமீறலாகும். இன, சாதி அடிப்படையிலான பரப்புரைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.
கிளிநொச்சி, முல்லைத்தீவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளின் அரசியல்வாதிகள் இதுபோன்று பாடல்களை ஒலிபரப்புகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமிழ்த் தேசியத்தை தூண்டும் இதுபோன்ற பாடல்களைப் பயன்படுத்தி சத்தமின்றி பரப்புரை செய்கின்றனர் - என்றார். (ற-5)

### மருத்துவ...

விக்கப்படுகின்றது.
இவர் கடந்த 11ஆம் திகதி மருத்துவச் சான்றிதழ் பெற பலாலி இராணுவ மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன. அவருக்கு நீரிழிவு நோய் இருப்பதும், அது அதிகளவில் இருப்பதும் கண்டறியப்பட்டது. மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்று மாற்றப்பட்டார். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சில மணி நேரத்தில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ற-21,8)

## தேர்தல் விதி மீறல்களால் 167பேர் இதுவரை கைது

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்களுக்காக இதுவரையில் 18 வேட்பாளர்கள் உள்பட 167 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

'167 பேரும் கடந்த 9ஆம் திகதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியிலேயே கைது செய்யப்பட்டனர். அவர்களில் பலர் பொலிஸ் பிணையிலும் சிலர் நீதிமன்றப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## பொங்கல் விழா

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தனியின் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் கொத்தணியின் தலைவர் செ.செல்வராசா தலைமையில் கொத்தணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. கொத்தணியின் பணிப்பாளர்கள் பணியாளர்களுக்கான பொங்கல் பொதிகளும் வழங்கப்பட்டன என கொத்தணியின் பொது முகாமையாளர் க.சுதாகரன் தெரிவித்தார். (ந-63)



## சுவிஸ் மலை உச்சியில் பொங்கல் கொண்டாட்டம்

கொழும்பு, ஜன. 15

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு பொங்கல் பொங்கினாலும், அதைச் சூரியனுக்கு படைப்பது சற்றுக் கடினமான விடயம்தான். இதற்குக் காரணம் தற்போது அங்கு நிலவும் கடும் குளிருடனான காலநிலை. இதனால் காலை வேளையில் சூரியனை காண்பதே அரிதான விடயம் தான்.

இதையும் தாண்டி சுவிற்சர்லாந்தில் வாழும் தமிழ் இளைஞர்கள் மலை உச்சிக்குச் சென்று பொங்கல் பொங்கி சூரியனுக்குப் படைத்துக் கொண்டாடியுள்ளார்கள். சுவிஸில் உள்ள ஆயிரத்து 797 மீற்றர் உயரமுடைய மலையில் நேற்றுக் காலை குளிருக்கு மத்தியிலும் பொங்கல் பொங்கியுள்ளார்கள். (5)

# மகிந்த மீது மைத்திரி மறைமுக தாக்குதல்

*கொழும்பு, ஜன. 15*

*புதிய கட்சியில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று ஊடகக் கலந்துரையாடலில் குறிப்பிடுகின்றவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியல்லாது வேறு கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களுக்குக் கூறுவது நகைப்புக்கிடமானதாகும். மனச்சாட்சிக்கேற்ப அரசியலில் ஈடுபடுமாறு அவர்களுக்கு நான் கூறுகின்றேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.*

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் தான் உறுப்புரிமை பெறவில்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். ஆனால் அந்தக் கட்சிக்காக உள்ளூராட்சித் தேர்தலில் பரப்புரை மேற்கொள்ளப்போவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்சியின் செயலரும், தலைவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் கடந்த அரசில் உயர்பதவிகளை வகித்தவர்களாகவும் உள்ளனர். அவர்கள், இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு மேற்கொண்டு வருகின்ற விடயம் இரண்டாவது பண்டாரநாயக்க படுகொலையாகும்.

இன்று தமது அரசியல் அலுவலகங்களுக்கு பண்டாரநாயக்கவினதும் அம்மையாரினதும் உருவப்படங்களை அவசியமாக கருதுகின்றவர்கள் அன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தின்போதும் ஏனைய நிகழ்ச்சிகளின்போதும் பண்டாரநாயக்கவை நினைவு கூருமாறு நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயத்தை கட்சியின் முன்னாள் தலைவர்களை நினைவு கூருதல் என்று மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கியவர்களாகும்.


ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டுவதிலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் நான் ஈடுபட்டுவருவது நாட்டு மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலாகும் - என்றார். (5)



## பிரிட்டன் தூதர் தமிழில் பொங்கல் வாழ்த்து

கொழும்பு, ஜன. 15

இலங்கை மற்றும் பிரிட்டனில் வாழும் அனைவருக்கும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டயூரிஸ் பொங்கல் வாழ்த்துக்களைத் தமிழ் மொழியில் தெரிவித்துள்ளார். தனது உத்தியோகபூர்வ கீச்சகத் தளத்தில் வாழ்த்துக்களைப் பதிவிட்டுள்ளார். (5)



## ரணிலின் பொங்கல்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கொச்சிக்கடை சிறி பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் நடைபெற்ற பூசை வழிபாடுகளில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். (5)

## 'மைக்ரோ சிப்' கடவுச்சீட்டு இந்த ஆண்டில் விநியோகம்

உயிரியல் அளவைகளை உள்ளடக்கிய விவரங்களைக் கொண்ட 'மைக்ரோ சிப்' பொருத்திய புதிய வகை கடவுச்சீட்டு இந்த ஆண்டு வழங்கப்படும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் அதிபதி எஸ்.ரணசிங்க தெரிவித்தார். (5)

## பிரிட்டன் நாடாளுமன்றில் பொங்கல் கொண்டாட்டம்

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் முதல் தடவையாக தைப் பொங்கல் கொண்டாட்டம் இடம்பெறவுள்ளதாக, பிரிட்டன் தமிழர் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை இரவு 8 மணியிலிருந்து 9 மணி வரையிலான நேரத்தில், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரிட்டன் தமிழர் பேரவையும் இணைந்து நாடாளுமன்றின் ஜூபிலி அரங்கில் பாரம்பரிய முறையில் தைப் பொங்கலை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## தமிழர்களால் நாங்கள் பெருமையடைகின்றோம்

### தைத்திருநாள் வாழ்த்தில் பிரி. தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

பிரிட்டனை வெற்றிகரமாகக் கொண்டுசெல்வதில் தமிழர்கள் சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்ச் சமூகத்தால் நாங்கள் பெருமையடைகின்றோம். இவ்வாறு பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரேசா மே தைப் பொங்கல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் மட்டுமல்லாது உலகம் முழுவதினும் உள்ள தமிழ்ச் சமூகத்தினருக்கு தலைமை அமைச்சர் தெரேசா மே தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். தனது வாழ்த்துச் செய்தியை காணொலியாக வெளியிட்டுள்ள அவர் கூறியுள்ளதாவது,

பிரிட்டன் பல்வேறு வழிகளில் வளர்ச்சியைப் பெறுவதற்குத் தமிழ்ச் சமூகத்தினர் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளனர். அவர்களால், நாங்கள் பெருமையடைகிறோம். உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் பழமையான இந்தப் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (5)



## நெருக்கம்

இலங்கையின் நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜுக்கும் இடையில் புதுடில்லியில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நேற்று முன்தினம் நடந்த இந்தச் சந்திப்பின் போது, அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான இருதரப்பு விவகாரங்கள் குறித்து, இரண்டு தலைவர்களும் பேச்சுக்களை நடத்தியதாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார். (5)

# ரணிலின் ஆட்டத்தால் மகிந்த கடும் சீற்றம்

கொழும்பு, ஜன. 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மூத்த நடிகை ஐராங்கனி சேரசிங்கவுடன் ஆடிய நடனம் தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.



ஒருசிலர் போற்றியும் மற்றும் சிலர் விமர்சித்தும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில், பிணைமுறி அறிக்கையுடன் இந்த நடனத்தை தொடர்புபடுத்தி கருத்து வெளியிட்டுள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

'தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மூத்த நடிகையுடன் அண்மையில் ஆட்டம்போட்டார். வளைந்து, வளைந்து ஆடினார். மத்தியவங்கி பிணைமுறி மோசடிவிவகாரத்தைமூடிமறைப்பதற்கான ஆட்டமாகவே அது அமைந்தது. அறிக்கைக்குப் பதிலாக தற்போது ஆட்டம் பற்றியே பேசுகின்றனர். அதுமட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் தலைமை அமைச்சர் ரணில் சிறுபிள்ளைபோல் செயற்படுகின்றார். இப்படியொரு தலைமை அமைச்சரை உலகில் காணடிமுயாது' என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச விமர்சித்துள்ளார். (5)

## நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு. ஜன. 15

நாடு கடந்த தமிழீழ அரசின் மூத்த உறுப்பினரான சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர். கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருந்ததால் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்படாமல் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் நேற்றுமுன்தினம் காலை நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வியாழக்கிழமை பிற்பகல் அபுதாபியில் இருந்து எதிஹாட் வானூர்தி மூலம், கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், நேற்று முன்தினம் காலை சிறிலங்கன் வானூர்தி சேவை மூலம், பாங்கொக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களைத் திருப்பி அனுப்பும் உத்தரவை இல்லாமல் செய்வதற்கு அமைச்சர்கள் சிலர் முயற்சி செய்ததாகவும், ஆனால் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் இறுக்கமான போக்கினால் அது சாத்தியமாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

நாடு கடத்தும் உத்தரவை இல்லாமல் செய்யுமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்களிடம், அதனை எழுத்துமூலம் தருமாறு குடிவரவுத் திணைக்களம், கோரியதாகவும் அவர்கள் அதற்கு இணங்காத நிலையில், சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

எனினும், சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் வானூர்தி நிலையத்துக்குள் உள்ள நட்சத்திர விடுதியிலேயே முக்கிய பிரமுகர்களுக்குரிய வசதிகளுடன் தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும், நாடு கடத்தப்படும் ஏனையவர்களைப் போன்று நடத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## கசிப்பு உற்பத்தி: சந்தேகநபர்கள் நால்வர் கைது

பளை, வண்ணாங்கேணியில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் கசிப்பு உற்பத்தி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். 4 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-73)

## அமெரிக்கத் தூதுவர் விக்கி சந்திப்பு

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்புக்கும் இடையில் நேற்றுமுன்தினம் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் கீச்சகத்தில் பதிவு இட்டுள்ளார்.

'முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு தைப்பொங்கல் வாழ்த்துகளைப் பரிமாறினேன். வட மாகாண விவகாரங்கள் தொடர்பாக நல்லதொரு கலந்துரையாடலை நடத்தினேன். நிலையான தேசிய நல்லிணக்கம் மற்றும் அனைத்து குடிமக்களுக்குமான பிரகாசமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஜெனிவா வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டியதன் தேவை குறித்தும் கலந்துரையாடப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார். (5)



## புலிச் சின்னத்துடன் புத்தகம் தென்னிலங்கையில் மீட்பு

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

கொழும்பு. ஜன. 15

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகள், கைக்குண்டுகள் உள்பட ஆயுதங்களை காலி கரந்தெனிய மடக்கும்புர பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு துப்பாக்கிகளை பயன்படுத்துவது தொடர்பாக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட விடுதலைப் புலிகளின் சின்னத்துடன் கூடிய புத்தகமும் மீட்கப்பட்டுள்ளது. 148 தோட்டாக்கள், ரி 56 ரக துப்பாக்கிக்கான ரவை, நான்கு அலைபேசிகளும் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆயுதங்களுடன் 37 வயதான நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் கூறியுள்ளனர். (5)



## கூட்டணி வேட்பாளரின் வீட்டுக்குள் பட்டாசு வீச்சு

மன்னார், ஜன. 15

மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவில் ஆட்காட்டிவெளி பிரதேசத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான சூசை சந்தானின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் கல்வீசியும், பட்டாசு வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளதாக அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5,56)

## அதிபரை முழந்தாழிட் வைத்த விவகாரம்: இழப்பீடு கோருகிறார் ஊவா முதலமைச்சர்

கொழும்பு, ஜன. 15

பதுளையிலுள்ள தமிழ் பெண்கள் பாடசாலை அதிபரை, முழந்தாழிட வைத்ததாக, ஊவா மாகாண சபையின் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் சமந்த வித்யாரத்ன கூறிய கருத்தின் காரணமாக தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டிருப்பதால் அவருக்கு எதிராக 500 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

மாணவி ஒருவரை, பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு முதலமைச்சர் வழங்கிய கடிதத்தை நிராகரித்த அதிபரை, தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து, முழந்தாழிட வைத்து மன்னிப்புக் கோர வைத்ததாக ஊவா மாகாண முதலமைச்சர் மீது, மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் சமந்த வித்யாரத்ன குற்றம் சுமத்தியிருந்தார்.

அது பொய்க்குற்றச்சாட்டு என்று ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தனக்கும் தனது குடும்பத்துக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள சாமர சம்பத் தசநாயக்க, தனது தேர்தல் நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார். (5)

# சுதந்திரக் கட்சியுடன் எப்போதும் இணையோம்

## மகிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 15

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி பெரு வெற்றிபெற்றாலும், ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ நாம் இணையமாட்டோம். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கமாட்டோம் எனத் தெரிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து ஆட்சி அமைப்போம் எனத் தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பன்னாட்டு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் தலைவர் நானில்லை. அந்தக் கட்சியின் தலைமைப் பதவியையும் நான் ஏற்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் பெருவெற்றி பெற்றாலும் ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது சுதந்திரக் கட்சியுடனோ சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி இணையாது - என்றார். (5)



## ஜாலிய விக்ரமசூரிய அமெரிக்காவை விட்டு வெளியேறத் தடை!

கொழும்பு, ஜன. 15

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரம சூரிய அமெரிக்காவிலிருந்து வெளியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் துணைச் சட்டமா அதிபர் சீயா பாரூக்கியினால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜாலிய விக்ரம சூரியவின் சட்டத்தரணி சுஞ்சயவீரவிக்ரமஇதனைத் தெரிவித்துள்ளார். (5)

## 356 கிலோ கிராம் போதைப் பொருள் மீட்பு


கொழும்பு, ஜன. 15

கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கடந்த வியாழக்கிழமை வடமேல் மாகாணக் கடற்படையின் கடலோரக் காவற் படையினர், சிலாபத்துறைப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மன்னார் போதைப் பொருள் ஒழிப்புப் படையினர் இணைந்து காயக்குழிப் பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதலில் 356 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கேரளக் கஞ்சா அவ்விடத்திலிருந்து வேறு இடத்துக் குக் கொண்டு செல்ல ஆயத்தமாக இருந்த நிலையிலேயே கைப்பற்றப்பட்டு மேலதிகவிசாரணைக்காகச் சிலாபத்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், வெல்லம்பிட்டியப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் போதை மாத்திரைகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து விற்பனைக்குத் தயாராக இருந்த ஆயிரம் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணை வெல்லம்பிட்டியப் பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. (5)




## மைத்திரிக்கு விருப்பம் இருந்தால் பிணைமுறி அறிக்கையைச் சமர்ப்பிக்கட்டும்

### நாமல் கீச்சகத்தின் ஊடாகக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 15

பிணைமுறி மோசடி குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கையை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கீச்சகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பிணைமுறி மோசடி குறித்து அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு ஏன் காலம் தாமதப்படுத்தப்படுகின்றது. இழந்த நிதியை மீட்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரும்புவாராக இருந்தால், விசாரணை அறிக்கையைக் கட்டாயமாகவும், விரைவாகவும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும். ஏற்கனவே நீண்ட காலம் சென்றுவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார். (5)

## பாடசாலைப் பக்கமே போகாத 1,523 பேர் சிறைச்சாலையில்

கொழும்பு, ஜன. 15

ஒரு நாளேனும் பாடசாலைக்குச் செல்லாத ஆயிரத்து 523 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தரம் ஐந்து வரையில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த 6 ஆயிரத்து 879 பேரும், தரம் எட்டு வரையில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த 6ஆயிரத்து 129 பேரும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.


ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த 2 ஆயிரத்து 643 பேரும், உயர் தரத்தில் சித்தியடைந்த 909 பேரும் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். சிறைச்சாலைகளில் 55 பட்டதாரிகளும் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வெலிக்கடை, போகம்பரை, மகர உள்ளிட்ட 25 சிறைச்சாலைகளில் 24 ஆயிரத்து 60 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (5)

## ஜப்பானில் புகலிடம் கோரும் இலங்கையர்கள்

கொழும்பு, ஜன. 15

இலங்கையர்கள் சிலர் கடந்த ஆண்டு ஜப்பானில் புகலிடம் கோரியுள்ளனர்.

இந்தநிலையில் ஜப்பானிய நுழைவிசைவு நடைமுறைகள் கடுமையாக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பாதுகாப்பை விடவும் தொழில் வாய்ப்புக்களை முதனிலையாகக் கொண்டே புகலிடம் கோரி வருவதாகத் தெரிவித்துள்ளது. உரிய காரணங்கள் இன்றிப் புகலிடம் கோரும் நபர்களை நாடு கடத்தக்கூடிய வகையில் சட்டங்கள் இயற்றப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (5)



## ஆதரவு தேடி

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ரோசி சேனநாயக்கவுக்கு ஆதரவு கோரி, கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். (5)

## லசந்த படுகொலைக்கு பயன்படுத்திய ஆயுதம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானதாம்

### எட்டு ஆண்டுகளின் பின்னர் சி.ஐ.டி. கண்டுபிடிப்பு

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவைப் படுகொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளதாகப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

கூரிய ஆயுதமொன்றின் மூலம் தாக்குதல் நடத்தி இந்தப் படுகொலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வாகனத்தின் சாரதி இருக்கைப் பகுதியின் கதவுக் கண்ணாடியைத் துளைத்துக் கொண்டு லசந்தவை இந்த ஆயுதம் தாக்கியுள்ளது. இந்த ஆயுதம், தன்னியக்க அடிப்படையில் இயங்கக்கூடிய வகையிலான ஓர் ஆயுதம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஆயுதமொன்று பயங்கரவாத அமைப்புக்களிடம் இருக்கவில்லைஎன்றுபுலனாய்வுப் பிரிவு விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. பன்னாட்டு ரீதியில் ஒரு சிலரிடம் மட்டுமே இந்த வகை ஆயுதம் காணப்படுகின்றது. இந்த ஆயுதம் இதற்கு முன்னதாக இலங்கையில் எந்தவொரு இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை.

லசந்தவைக் கொலை செய்யும் நோக்கில் ஆயுதங்களுடன் இந்த வகை ஆயுதமும் இறக்குமதி செய்யப்பட்டுத் தாக்குதலின் பின்னர் அழிக்கப்பட்டோ அல்லது புதைக்கப்பட்டோ இருக்கலாம் என்று புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (5)

## ரஷ்யத் தூதரகம் மீது சரமாரியாகக் கல்வீச்சு

கொழும்பு, ஜன. 15

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை சரமாரியான கல்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக ரஷ்யத் தூதரகத்தினால் பொலிஸில் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

எனினும், உயர்மட்ட உத்தரவின் பேரில், பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சம்பவ இடத்துக்குச் சென்றது. சம்பவம் நடந்த போது பதிவான கண்காணிப்புக் காணொலிப் பதிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸார் கோரியிருந்தனர்.

ஆனால், ரஷ்ய அதிகாரிகள் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டனர் என்று கூறப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்ட நிலத்தை கைப்பற்றும் நோக்கிலேயே ரஷ்யத் தூதரக அதிகாரிகள் இந்தக் கல்வீச்சுத் தாக்குதலை நடத்தியதாகவும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. (5)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதிதேவி (தங்கா) நற்குணம்



கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிதேவி நற்குணம் கடந்த (11.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நற்குணம் அவர்களின் பாசமிகு மனைவியும் சாயிசங்கர் (பிரான்ஸ்), சாயிபானு (லண்டன்), சாயிகீதா, சாயிமீரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சுதர்சினி, வேலழகன் (லண்டன்), இரமணகிருஸ்ணா (வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி), வைகுந்தன்(கனடா)ஆகியோரின்மாமியும்சியாம்ளன், நவீனா, ரஸ்வினி, விஷாகணன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற பாலசுந்தரம், திலகவதி (கனடா), Dr.உமாபதிசிவம் (மருதங்கேணி வைத்தியசாலை), புஸ்பவனநாதன் (கனடா), சிவசுப்பிரமணியம், கிஸ்ணமூர்த்தி (கனடா), விஜயலஷ்மி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15, கதிரமலை வீதி,**
**சுன்னாகம் தெற்கு. 021 224 0315** (CS12921/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**தோற்றம்** 23 . 02 . 1945



**மறைவு** 18 . 12 . 2017

கடந்த 18.12.2017 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சிதம்பரப்பிள்ளை பத்மநாதன்

*(உரிமையாளர் கனன்போட்டோ கொப்பி சேவிஸ், கனன் புத்தக நிலையம்)*

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 16.01.2018 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் மறுநாள் (17.01.2018) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**மணல் ஒழுங்கை,**
**தும்பளை, பருத்தித்துறை**

**குடும்பத்தினர்.**

(C 5522)(10)


கார்,வான் வாடகைக்கு தேவை
கார்கள்,வான்கள், மாதாந்த குத்தகைக்குத் தேவை.
071 040 4978 (CS/12919)(16.17)

ES Printers
அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### குட்டித்தம்பி சுப்பையா

**(ஓய்வுபெற்ற இ.போ.ச. பரிசோதகர்)**



மானிப்பாயை (சந்தையடி ஒழுங்கை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி சுப்பையா கடந்த (13.01.2018) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித்தம்பி - சின்னபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அம்பலவாணர் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சதாசிவம், கந்தசாமி, பூமணி, கனகசபைமற்றும் சின்னதம்பி(வைத்தியர்-அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரவதனி (லண்டன்), காலஞ்சென்ற வதனச்சந்திரபிரபன், சாந்தமேனன் (பிரான்ஸ்), அம்பிகைபாகன் (லண்டன்), ஜெயபாகன் (லண்டன்), றயனி, கலாஜினி (ஆசிரியை - கொழும்பு/விபுலானந்தா தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகராஜன் (லண்டன்), சியாமளா (பிரான்ஸ்), கஜந்தினி (லண்டன்), ரஞ்சினி (லண்டன்), சிவபாலன் (முகாமையாளர் - சிங்கர்பிளஸ், மானிப்பாய்), கங்காதரன் (வேலும்மயிலும் அரிசி ஆலை, பரந்தன்) ஆகியோரின் அன்பு மாமனும் சந்திரராஜா (லண்டன்), உஷா (லண்டன்),நிரோஷா (லண்டன்), சிவச்செல்வன் (பிரான்ஸ்), சிவப்பிரியா (பிரான்ஸ்), சிந்துஜன் (பிரான்ஸ்), சிவசுதன் (பிரான்ஸ்), பிரவினா (லண்டன்), ரவினா (லண்டன்), கவினா (லண்டன்), அஸ்வினா (லண்டன்), ரவிப்பிரியா (லண்டன்), விதுஷன் (லண்டன்), கீர்த்திகா (லண்டன்), பிரியங்கா (லண்டன்), வரணிகா (லண்டன்), திவிஜன் (இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), கவிஜா (உவாவெல்லஸ்ஸா பல்கலைக்கழகம்), துவாரகன், தெனிஷா, வத்ஷாங்கன், சஷ்னிகா, சுவர்ணா (லண்டன்), துஷான் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அயனாவின் (லண்டன்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.01.2018) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய், பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சோதிவேம்படி லேன், மானிப்பாய்.** (CS 12918/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

பௌதிகவியல் / இணைந்த கணித வகுப்புக்கள்
தமிழ்/ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படுகிறது.
New 2019 A/L, 2020 A/L புதிய பாடத்திட்டத்திற்கு அமைய புதிய பாடத்திட்ட புத்தகங்களின் உதவியோடு கற்பிக்கப்படுகிறது. பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர். (3தேசிய பாடசாலை உட்பட) ஆங்கில மொழிமூல பட்டதாரி ஆசிரியர். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.
2017 ( Repeat) 2018 A/L வகுப்புக்கள் நடைபெறுகிறது.
ஆசிரியர்: R. பாலசுப்பிரமணியம் B.Sc (Cey), PGDE
65, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (ஆரியகுளச் சந்தி)
T.P: 077 242 3400 / 077 887 1217 / 077 517 8727
(J 9067)(10)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் கார்த்திகேசு



**மலர்வு** 27. 09. 1926

**உதிர்வு** 14. 01. 2018

கட்டுப்பலானை, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாக கொண்ட திருமதி இரத்தினம் கார்த்திகேசு நேற்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் செல்லத்துரை, தர்மலிங்கம், செல்லம்மா, இராசம்மா, ஐயாத்துரை, தம்பிஜயா , கனகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் பார்வதிப்பிள்ளை, திருமகள், திருப்பதி (ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), ஞானபண்டிதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் சூரியகுமார், சாந்தி, மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற திலீபன் மற்றும் சதாயினி, பவித்திரன், ஜவ்வனா, பரணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அபிராமி, லாவண்யா, மாதுளன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகி மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கட்டுப்பலானை,**
**கோப்பாய் வடக்கு.** (c.12916)(8.17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
021 222 6113

## வடக்கு மாகாண அம்மாச்சி உணவகங்களில் தேங்குகின்ற கழிவுகளை அகற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.15

வடக்கு மாகாணத்தில் உள்ள அம்மாச்சி உணவகங்களில் தேங்குகின்ற கழிவுகளை நாளாந்தம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் உள்ள அம்மாச்சி உணவகங்களில் தேங்குகின்ற கழிவுகளால் அங்கு இலையான்களின் தொல்லைகள் காணப்படுகின்றது என பல்வேறு தரப்புக்கால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உணவகங்களில் தேங்குகின்ற கழிவுகளை பிரதேச சபைகள் ஊடாக நாளாந்தம் அகற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் அம்மாச்சி உணவகம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறப்பாக இயங்கி வருகின்றது. அண்மைக்காலமாக அங்கு சுத்தம் தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது அதற்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளது -என்றார்.

அம்மாச்சி உணவகத்தில் தேங்குகின்ற உணவுக் கழிவுகளால் அங்கு இலையான்கள் வருகின்றன. எனவே அந்தக் கழிவுகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் நடந்த மாகாண சபை அமர்வில் சில உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அம்மாச்சி உணவகத்தில் தேங்குகின்ற உணவுக் கழிவுகளால் தான் அங்கு இலையான்கள் வருகின்றன. எனவே அந்தக் கழிவுகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு மேலும் பயிற்சிகள் வழங்க வேண்டிய தேவையுள்ளது.

அதற்கானசெயல்திட்டங்களும்முன்னெடுக்கப்படும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# இயற்கை விவசாயத்தினூடாக செயற்கை விவசாயத்தை முறியடிக்க முடியும்

### தமிழ்நாட்டின் இயற்கை விவசாய வல்லுநர் எஸ். பாமயன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.15

இயற்கை விவசாயத்தின் மூலம் செயற்கை விவசாயத்தை முறியடிக்க வேண்டும் என தமிழ்நாட்டின் இயற்கை விவசாய வல்லுநர் எஸ்.பாமயன் தெரிவித்தார். இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சிப் பட்டறை கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு நான் வந்தபோது இங்குள்ள நீர் வளத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். தமிழ்நாட்டிலே தூய்மையான தண்ணீருக்காக நாள் தோறும் நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். இலங்கையில் குறைந்தது நூறு அடியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீரைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் தமிழ் நாட்டில் பல கிராமங்களில் ஆயிரம் அடிக்கு மேல் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. குடிதண்ணீருக்காக மக்கள் நீண்ட தூரம் அலைந்து கொண்டிருக்கின்றனர். தொடக்க காலங்களில் தமிழ் நாட்டிலும் பல கிராமங்களில் நல்ல நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை இருந்தது. ஆனால் நீரைத் தேவையற்ற முறையில் பயன்படுத்தி பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு. சூழலுக்கு ஒவ்வாத வகையில் இரசாயனப் பாவனையால் வளங்களை இழந்து நிற்கிறோம்.

எப்போதும் விவசாயிகள் குளங்களில் இருந்து பயிர்ச்செய்கைக்கு நீரைத் தாருங்கள் என்றுதான் போராடுவார்கள். ஆனால் தமிழ் நாட்டின் பல கிராமங்களில் குளங்களில் இரசாயனம் கலந்து இருப்பதன் காரணமாக நீரைத் திறந்து விட வேண்டாம் என்றே விவசாயிகள் போராடுகின்றனர். அந்தளவுக்கு மண்ணினதும் நீரினதும் தன்மைகள் மாறிவிட்டன. எமது முன்னோர்களின் இயற்கை விவசாயத்தில் இருந்து விடுபட்டு எங்கோயோ சென்று இரசாயனம் கலந்த செயற்கை விவசாயத்தால் அழிவுகளுக்குள் சிக்குண்டுள்ளோம். தற்போது எமக்குத் தேவைப்படுவது எல்லாம் இயற்கை விவசாயம்தான்.

எமது உணவுடனும் நீருடனும் இரசாயனம் கலப்பதன் காரணமாகவே தேவையற்ற நோய்கள் உருவாகின்றன. பிறக்கின்ற குழந்தைகள் கூட நோய்களுடனும் குறைபாடுகளுடன் பிறக்கின்றன. எனவே இயற்கை விவசாயத்தின் அறிவையும் அவசியத்தையும் எல்லோரும் விளங்கிக் கொண்டு செயற்பாட்டில் இறங்க வேண்டும். செயற்கை விவசாயத்தில் இருந்து விடுபடுவதன் மூலமே மண்ணையும் நீரையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் -என்றார். (எ-35)

## காசோலை வழக்கில் இடைத்தரகர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.15

காசோலை வழக்கில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது யாழ்ப்பாணம் நீதிவான் மன்று. குறித்த வழக்கு தொடர்பில் தெரியவருவதாவது:

சந்தேகநபர் யாழில் உள்ள வர்த்தகர்களுக்கு இடையில் இடைத்தரகராகச்செயற்பட்டுகாசோலைகளை'கொமிசன்' வைத்து வட்டிக்கு மாற்றிக் கொடுத்து வந்துள்ளார். வர்த்தகர் ஒருவர் சக வர்த்தகர் ஒருவருக்கு கொடுத்த காசோலை ஒன்றை இடைத்தரகர் வேறு நபரிடம் கொடுத்து வட்டிக்குப் பணம் வாங்கியுள்ளார்.

இடைத்தரகருக்கு காசோலையை கொடுத்த வர்த்தகர் கடன் தொல்லை காரணமாக கடந்த ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

காசோலையைப் பெற்று பணம் கொடுத்த நபர் இடைத்தரகரிடம் பணத்தைக் கேட்டபோது காசோலையில் எழுதப்பட்ட பெயருக்கு உரியவரிடம் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறி வந்துள்ளார்.

காசோலை வாங்கி பணம் கொடுத்தவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது காசோலை உரிமையாளர், தனது உறவினரான வர்த்தகருக்கு நம்பிக்கை அடிப்படையில் காசோலையை வழங்கியதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் காசோலை உரிமையாளரின் உறவினரான வர்த்தகரிடம் விசாரித்த போது, தற்கொலை செய்து கொண்ட வர்த்தகருக்குத் தான் காசோலையை வழங்கிய்து எனவும் அதற்காகப் பணம் எதனையும் பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காசோலை உரிமையாளர் மற்றும் காசோலை உரிமையாளரின் உறவினரான வர்த்தகர் ஆகிய இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதன்போது காசோலையைப் பெற்றுக் கொண்டு பணத்தை வழங்கிய நபர் அவர்கள் இருவரையும் தனக்கு யார் என தெரியாது எனவும், தான் வேறு ஒருவரிடம்தான்காசோலையைபெற்றுபணத்தை கொடுத்ததாக மன்றில் சாட்சியம் அளித்தார். அதனைத் தொடர்ந்து இருவரையும் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் காசோலையை கொடுத்து பணத்தை வாங்கிய நபரை மன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். வழக்கு கடந்த வெள்ளிக் கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது, காசோலையை கொடுத்து பணத்தை வாங்கிய நபரை பொலிஸார் முற்படுத்தி னர். அதையடுத்து நீதிவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 24ஆம் திகதிவரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-4)

### அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிய சாரதிக்குத் தண்டம்

சாவகச்சேரி,ஜன்.15

வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிமன்றப் பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் சாரதிக்கு தண்டம் விதித்தார் இதேவேளை காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் மதுபோதையில்சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம்செலுத்திய மற்றுமொரு சாரதிக்கு 10 ஆயி ரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9)

### பீடியை உடைமையில் வைத்திருந்தவருக்கு ரூ. 30,000 தண்டம்

கிளிநொச்சி.ஜன.15

வரி செலுத்தாது 30 பண்டல் பீடியை உடைமையில் வைத்திருந்த நபருக்கு எச்சரிக்கையுடன் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. மதுவரித்திணைக்க ளத்தி னரால், கிளிநொச்சி மதுவரி திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதியில் 30 பண்டல் பீடியை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த ப்பட்டார். அதன்போதே தண்டம் விதிக்கப்பட்டது. (எ-6)

### பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில்

## கண்ணிவெடி அகற்றப்படாத கிராம மக்கள் தம்மைப் பதிவு செய்யவும்

### பிரதேச செயலர் ஜெயராணி அறிவிப்பு

கிளிநொச்சி,ஜன.15

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றாததால் மீளக் குடியமர முடியாத மக்கள் பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் பரமோதயன் ஜெயராணி தெரிவித்துள்ளார்

போர் இடம்பெற்ற காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடி தற்போதும் அகற்றப்படாத காரணத்தால் சில கிராமங்கள் போர் நிறைவடைந்து 9 ஆண்டுகள் ஆகின்ற போதும் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை.

மாவட்டத்தில் இந்தப் பிரதேசமே மிகவும் ஆபத்தான வெடிபொருள்கள் உள்ள பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் படிப்படியாக வெடிபொருள்களை அகற்றி மக்கள் மீள்குடியமர்வை அவர்களின் காணிகளை ஒப்படைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது கண்ணிவெடி அகற்றப்படாத கிராமத்தில் உள்ள மக்களைப் பதிவு மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா தனது நிதியை கடந்த ஆண்டே முழுமையாகப் பயன்படுத்திவிட்டார்

### கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.15

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராஜா அவருக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பிரமாண நிதியை கடந்த ஆண்டே முழுமையாகப் பயன்படுத்திவிட்டார் என்று மாகாண கல்வி அமைச்சர் இ.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஆண்டு தோறும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கப்படுகின்றது. அந்த நிதியில் அவர்கள் அந்த ஆண்டு நிறைவுக்குள் செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராஜாவுக்கு வழங்கப்பட்ட நிதியில் முழுமையாக வேலைத்திட்டங்கள் நடைபெறவில்லை என்று மாகாண சபையில் அவரே சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆனால் அவர் டிசம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னரே தனது நிதியை முழுமையாகப் பயன்படுத்திவிட்டார். அதற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் அவரின் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன்.

விளையாட்டுத் திணைக்களம், கலாசாரத் திணைக்களம், கல்வி அமைச்சு ஊடாக 15 செயற்றிட்டங்களை அவர் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் நிறைவு செய்துள்ளார் - என்றார். (எ-ரி)

## ஜி.சி.ஈ உயர்தரத்தில்

# வடக்கில் 274 மாணவர்கள் 3பாடங்களிலும் 'ஏ' தரச்சித்தி

### 816 பேர் ஒரு பாடத்திலும் சித்தியில்லை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

ஜி.சி.ஈ உயர்தரத்தில் வடக்கு மாகாணத்தில் இருந்து பாடசாலைப் பரீட்சார்த்திகளாகத் தோற்றிய 11 ஆயிரத்து 591 மாணவர்களில் 274 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்றுள்ளனர். அதேநேரம் 7 ஆயிரத்து 925 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்திபெற்று பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அதாவது 68.37 வீதத்தினர் தகுதி பெற்றுள்ளனர். அதேநேரம் தோற்றியோரில் 816 மாணவர்கள் ஒரு பாடத்திலும் சித்தியடையவில்லை.

அண்மையில் வெளியான ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளில் வீத அடிப்படையில் மாகாண நிலையில் வடக்கு மாகாணம் முதலாம் இடத்தையும்சப்பிரகமுவ மாகாணம் இரண்டாம் இடத்தையும் ஊவா மாகாணம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

பாடசாலை பரீட்சார்த்திகளையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் உள்ளடக்கிய பரீட்சைப் பெறுபேறுகளின்படி தேசிய ரீதியில் வடக்கு மாகாணம் மூன்றாம் இடத்தையும் சப்பிரகமுவா மாகாணம் முதலாம் இடத்தையும் ஊவா மாகாணம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. வடக்கு மாகாணத்தில் இருந்து தோற்றிய பாடசாலை பரீட்சார்த்திகளையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் உள்ளடக்கிய ரீதியில் 13 ஆயிரத்து 643 மாணவர்களில் 8 ஆயிரத்து 956 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். 65.65 வீதமானோர் சித்தியடைந்துள்ளனர்.

மாவட்ட நிலையில் தேசிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் மன்னார் மாவட்டம் 1ஆம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் 5ஆம் இடத்தையும் யாழ்ப்பாண மாவட்டம் 9ஆம் இடத்தையும், வவுனியா மாவட்டம் 16ஆவது இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 21ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 68.41 வீதத்தினரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 66.47 வீதத்தினரும், யாழ்ப்பாண மாவட்ட த்தில் 65.88 வீதத்தினரும், வவுனியா மாவட்டத்தில் 64.51 வீதத்தினரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 62.30 வீதத்தினரும் சித்திய டைந்துள்ளனர். நாடளாவிய ரீதியில் உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 53 ஆயிரத்து 330 மாணவர்கள் தோற்றியிருந்தனர். மூன்று பாடங்களிலும் ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 104 மாணவர்கள் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 64.38 வீதத்தினர் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (எ-11)

## வாக்குகளைப் பிரயோகிக்க கற்றுக்கொடுக்க வேண்டாம்

### இந்துசமயப் பேரவை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.15

இன்றைய அரசியல் சூழ்நிலையில் வாக்குகளை எப்படி பிரயோகிக்க வேண்டும் என்பது பற்றி இந்துக்களுக்கு எவரும் பாடம் கற்பிக்கவேண்டியதேவை கிடையாது என்பதை அரசியல்வாதிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் செயலாளர் எஸ்.சக்திகிரீவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது:

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரசியல் வாதிகள் சிலர் இந்து ஆலயங்களுக்குள் புகுந்து அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டு புனிதமிக்க ஆலயங்களை மாசுபடுத்துகின்றனர் என எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கி[illegible]ன.

இலங்கை அரசமைப்பை மதித்து நடந்துகொள்ள அனைவரும் பழகிக் கொள்ள வேண்டும். இந்து ஆலயங்களுக்குள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது மாபெரும் தவறாகும். வாக்களிக்கும் உரிமை மக்கள் எல்லோருக்கும் உரியது. ஆகவே இந்துக்களாகிய அனைவரும் அணிதிரண்டு வாக்களிப்பதன் மூலம் அநீதியை பூண்டோடு அழிக்க வழி பிறக்கும் - என்றுள்ளது. (எ-4)

## அலுவலகப் படியாக

## எம்.பிசிகளுக்கு ரூ. 6 லட்சம்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 'அலுவலகப் படி' வழங்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் அலுவலக வாடகை மற்றும் அதனுடன் இணைந்த கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு கடந்த வருடம் தீர்மானிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாடகை கொடுப்பனவு போன்று அவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவின் அரைவாசி மாகாண சபை உறுப்பின்ர்களுக்கும் வழங்க வேண்டும் என்று அமைச்சர் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து கொடுப்பனவு வழங்க தீர்மா னிக்கப்பட்டது. இதற்கான அனுமதியை பெறுவதற்கு வடக்கு மாகாண ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அனுமதியின் பின்னர் தற்போது ஒரு வருடத்துக்கான அலுவலகப்படியாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 6 லட்சம் ரூபா டிசம்பர் மாதம் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர மாகாண சபை உறுப்பினர்களுக்கு இவ்வாறு வழங்கப்படும் தொகை 'அலுவலக வாடகைப் படி' என்ற பதத்தில் இருந்தது. அது மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 'அலுவலகப் படி' என தற்போது பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி போன்று இது அமைவதால் 'அலுவலகப் படி' என்ற பெயரில் வழங்கப்பட வேண்டும் என்று 55ஆவது அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி)

## நிறுத்தப்பட்டிருந்த டிப்பருடன் மோதியது மோட்டார் சைக்கிள்

### இருவர் படுகாயம்

சாவகச்சேரி,ஜன.15

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சாலையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி, கல்வயலில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது. சாலையோரத்தில் டிப்பர் நிறுத்தப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிளொன்று வேகமாக வந்தது. வந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த மற்றொரு வாகனத்துக்கு வழிவிட வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் டிப்பருடன் மோதியது என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த யோகலிங்கம் வாசுதன் (வயது -34) நுணாவில் கிழக்கைச் சேர்ந்த மகேந்திரம் முரளிதரன் (வயது -33) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## அனுமதி பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிகளுக்கு தண்டம்

கிளிநொச்சி, ஜன. 15

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய உழவியந்திர சாரதிகள் இருவருக்கு 35ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட சாரதிகளை உழவியந்திரங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர்.

சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒருவருக்கு ரூபா 20ஆயிரமும் மற்றையவருக்கு ரூபா 15ஆயிரமும் தண்டமும் விதித்ததுடன் வாகனங்களை உரிமையாளர்களிடம் ஒப்படைத்துத் தீர்ப்பளித்தது நீதிமன்றம். (எ-6)

## பயணிகளை ஏற்றியமைக்காக

# பேருந்து சாரதிகளுக்கு தண்டப்பணம் விதிப்பு

### சாரதிகள், பயணிகள் விசனம்

வவுனியா,ஜன.15

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக பேருந்துகளைத் தரித்து பயணிகளை ஏற்றிய 8 சாரதிகளுக்கு வவுனியா போக்குவரத்து பொலிஸார் தண்டப்பணம் விதித்துள்ளனர்.

இத தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வெளிமாவட்டத்திலிருந்து வவுனியாவுடன் முற்றுப்பெறும் பேருந்து சேவைகள் மாத்திரமே வவுனியா புதிய பேருந்து நிலையத்தினுள் செல்ல முடியும். அதேநேரம் வெளிமாவட்டத்திலிருந்து வேறோரு மாவட்டத்துக்கு செல்லும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக தரித்து பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்திலிருந்து தனியார், இ.போ.ச பேருந்துகள் கடந்த வாரம் முதல் சேவையை முன்னெடுத்து வருகின்றன. இந்த நிலையில் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் மதியம் வரை பேருந்துகளை தரித்து பயணிகளை ஏற்றிய 8 சாரதிகளுக்கு வவுனியா போக்குவரத்து பொலிஸார் தண்டப்பணம் விதித்துள்ளனர்.



இது தொடர்பில் வெளிமாவட்டப் பேருந்துச் சாரதிகள் தெரிவித்ததாவது: புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக பாதசாரிகள்கடவையில்லை, வாகனம் தரிப்பதற்கு தடையான பதாகைகளும் இல்லை. மற்றும் புதிய பேருந்து நிலையத்திலிருந்து அடுத்த பயணிகள் தரிப்பிடம் சுமார் 500மீற்றர் தூரத்தில் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ளது. வீதியின் அருகே (வெள்ளைக் கோட்டுக்கு கீழே) பேருந்தை நிறுத்தி பயணிகளை ஏற்றுவது தவறா? அவ்வாறாயின் புதிய பேருந்து நிலையத்தினுள் தரித்து பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதியைப் பெற்றுத்தாருங்கள்-என்றனர்.

"புதிய பேருந்து நிலையத்தினுள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பேருந்துகள் தரித்து பயணிகளை ஏற்றாமல் நேராக செல்வதால் நாங்கள் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நின்று பயணம் மேற்கொள்ளுகின்றோம். ஆனால் அதனையும் போக்குவரத்து பொலிஸார் தடுத்து அந்த இடத்தில் தரிக்கும் பேருந்து சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணம் விதிக்கின்றார்கள். எனவே நாங்கள் எங்கு நின்று எமது சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்" என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, இந்த விடயம் தொடர்பாக தான் தீர்க்கமான முடிவை தெரிவிப்பதாக தெரிவித்தார். (எ-4)

# மாகம்புர ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

அம்பாந்தோட்டை ,ஜன.15

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட உணவுதவிர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் 6ஆவது நாளாகவும் தொடர்ந்தது.



மாகம்புர துறைமுகத்தைச் சேர்ந்த 11 ஊழியர்கள் தங்களை நிரந்தரத் தொழிலாளர்களாக நியமிக்கும்படி வலியுறுத்தி தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் நான்கு ஊழியர்கள் மயக்கமுற்ற நிலையில் அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அதிகாரிகள் தங்களது கோரிக்கைக்கு உரிய பதிலை அளிக்கின்ற வரை போராட்டம் தொடரும் என்றும் அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக ஊழியர்கள் அறிவிப்பு விடுத்தனர். (ற-ரி5)



## யானையொன்றின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு.ஜன.15

மட்டக்களப்பு. கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலைக் கிராமத்தின் ஒறுக்காகுழி ஊற்றுப் பகுதியில், இறந்த நிலையில் யானையொன்றின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட யானை 15வயது மதிக்கதக்கது எனத் தெரிவிக்கப்பட்டது.இது தொடர்பிலான விசாரணைகளைக் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)





## பொங்கல் பொதிகள் வழங்கி வைப்பு

வவுனியா.ஜன.15

பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியா பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட் டன.

கிரி எலக்ரோனிக் சுப்பர் மார்க்கட் நிறுவனத்தின் உரிமையாளரும் தற்காலிக வர்த்தகர் சங்கத் தலைவருமான ச. இராசரட்ணம் கிரிதரன் தனது சொந்த நிதியிலிருந்து 50பேருக்கு பேருந்து நிலையப் பகுதியில் வைத்து பொங்கல் பொதிகள் வழங்கினார். (ற-ரி5)

## சட்டவிரோதமாக வைத்திருந்த துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு.ஜன.15

கய்லவத்த பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடனே கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்று விசாரணைகளில் தெரியவந்த்து. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## மன்னாரில் மரதன் ஓட்டப் போட்டி

மன்னார்,ஜன.15

மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையின் 2018 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் தலைமன்னார் பிரதான வீதியில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தலைமையில் இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். போட்டியில் சுமார் 500 மாணவர்கள் கலந்து கொண்டனர். மரதன் ஓட்ட போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் பாடசாலையின் பழைய மாணவர்கள்,பெற்றோர்,நலன் விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஆதரவை வழங்கினர். (ற,ரி5,56)

## எம்மை வீதியில் விட்டவர் பொங்கி மகிழ்கின்றனர்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் தெரிவிப்பு

கிளிநொச்சி.ஜன.15

காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் பிள்ளைகள் உறவுகளுக்காக வீதியில் இறங்கிப் போராடி வருகின்றோம், எங்களுக்கான எந்தத் தீர்வும் இதுவரை இல்லை, எங்களை வீதியில் விட்டவர்கள் வீடுகளில் பொங்கி மகிழ்கின்றனர். என கிளிநொச்சியில் 329 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஏ9 பிரதான வீதிக்கருகில் தொடர்ச்சியாக 329 வது நாளாக இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றும் போராட்டக் கொட்டகைக்குள் நல்ல தீர்வை எதிர்பார்த்து காத்திருந்தனர். அரசுக்கு நெருக்கடி ஏற்படுகின்ற போது அல்லது அரசுக்கு ஆதரவு தேவைப்படுகின்ற போது நிபந்தனை யின்றி ஆதரவு வழங்கி வருகின்றனர். நாட்டுக்குள் மட்டுமன்றி நாட்டுக்கு வெளியே சென்றும் எங்களின் பிரதிநிதிகள் அரசுக்கு ஆதரவு திரட்டுகின்றனர். எங்களுக்காக பேசுவார்கள் என நம்பிய பிரதிநிதிகள் அரசுக்காக மேடையேறிப் பேசுகின்றார்கள் வாதாடுகின்றார்கள் எனவும் தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள். இவற்றுக்கெல்லாம் இவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும் எனவும் தெரிவித்தனர். (ற -ரி5)



## பொங்கலை முன்னிட்டு வாழ்வாதார உதவிகள்

வவுனியா. ஜன.15

பொங்கல் தினத்தை முன்னிட்டு வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.கனடா கியுபைக் மொன்றியல் நகரைச் சேர்ந்த பாராவூர்தி சாரதிகள் நற்பணி மன்றத்தினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. சுமார் 5 ஆயிரம் பெறுமதியான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகள் வீதம் இரண்டு குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (ற)

## வவுனியாவில் மருத்துவ முகாம்

வவுனியா.ஜன.15

வவுனியா, நெளுக்குளம் கணேசபுரம் பிரதான வீதியிலுள்ள உலக இரட்சகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் மருத்துவ முகாம் இடம்பெற்றது. இந்த நிகழ்வு வன்னிப்பிரதிப் பொலிஸ்மா அலுவலகத்தின் பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இறம்பைக்குளம் ஈஷி மிஷன் பூரண சுவிஷேச சபையின் பிரதான அனுசரணையில் இடம்பெற்றது. இந்த ஒரு நாள் மருத்துவ முகாமில் 40வயது முதல் 60வயதுக்குட்டவர்களுக்குக் கண்ணாடி வழங்கல், ஏனைய நோய்களுக்கான மருந்து வழங்கல் போன்ற சேவைகள் இடம் பெற்றன. இந்தப்பகுதியிலுள்ள பெருமளவானோர் இந்த மருத்துவ முகாமில் சேவைகளைப் பெற்றுப்பயனடைந்தனர். (ற-ரி5)





## மதுபாவனையை எதிர்த்து திருமலையில் ஊர்வலம்



திருகோணமலை.ஜன.15

திருகோணமலை முத்துநகர் முஸ்லிம் பேண்தகு வித்தியாலயத்தில் மதுபாவனைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

ஊர்வலம் மதுபோதை ஒழிப்புக் குழுவினரால் நடத்தப்பட்டது. இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில், திருகோணமலை வலயக்கல்வி அலுவலக தம்பலகாமக் கோட்டக் கல்வி பணிப்பாளர் இராஜசுரேஷ் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ரி5)



## சிலந்தியைக் கொல்ல முற்பட்டு வீடு தீக்கிரையானது அமெரிக்காவில்

வொஷிங்டன். ஜன. 15
சிலந்தியை தீயிட்டு கொல்ல முயன்ற போது வீடு முழுவதும் திக்கிரையான சம்
வம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இடம்பெற்றுள்ளது.
"சிலந்தியைஅடித்துக்கொல்லமுற்பட்டேன். அதுதொடர்ந்துதப்பித்துக்கொண்டே
இருந்தது. இதனால்தீயிட்டுஅதைக்கொல்லமுயற்சித்தேன். ஜன்னல்சீலையில்
தீபற்றிக்கொண்டதைஅடுத்துதீவிரைவாகவீடுமுழுவதும்பரவியது. தீயணை
புப் படையினருக்கு தகவல் தெரிவித்தேன். அவர்கள் வந்து தீயைக் கட்டுக்குள்
கொண்டுவந்தனர்" என்று தெரிவித்தார் வீட்டின் உரிமையாளர். (ம

## தென்னாபிரிக்காவில் மர்ம நோய் இதுவரை 60 பேர் உயிரிழந்தனர்

தென்னாபிரிக்காவில் பரவிவரும் மர்மநோய்ஒன்றுக்கு 60 பேர்உயிரிழந்துள்ளனர். மேலும் 750 பேருக்கு இந்த நோய் தாக்கியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தகவல்களை உலகசுகாதாரநிறுவனம்உறுதி செய்துள்ளது.
குழந்தைகள்தான் இந்த நோயால் அதிகம்பாதிக்கப்படுகின்றனர்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சகாராவில் பனிப்பொழிவு

உலகிலேயே அதிக வெப்பம் நிலவக் கூடிய சகாரா பாலைவன பகுதியில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.
உலகிலேயே அதிக வெப்பம் நிலவக் கூடிய இடங்களுல் ஒன்று சகாரா பாலைவனம். அங்கு தற்போது வரலாறு காணாத அளவுக்கு பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 15 அங்குலம் உயரத்துக்கு பனிக்கட்டிகள் பாலைவனத்தை மூடியுள்ளன.
கடந்த 40 ஆண்டுகளில் தற்போது மூன்றாவது முறை அங்கு பனிப் பொழிவுஏற்பட்டுள்ளதுஎன்றுசொல்லப்படுகிறது.
ஐரோப்பிய பகுதியில் ஏற்பட்டுள்ள அதிகஅழுத்தம்மற்றும்குளிர்காற்று இந்த பனிப்பொழிவுக்குக்காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)




# பரிஸ் ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்கா

வொஷிங்டன், ஜன. 15
பருவ நிலை தொடர்பான பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ள அமெரிக்கா, தனது முடிவை திரும்பப்பெறவுள்ளது என்பது தொடர்பான தகவல்களை பன்னாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. உலக வெப்பமயமாதலை 2 டிகிரி செல்சியஸால் குறைவடையச் செய்யும் ஒப்பந்தத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் கடந்த 2015ஆம் ஆண்டு கையொப்பமிட்டனர்.

பிரான்ஸின்பரிஸ்நகரில்இந்தஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவை இணைத்திருந்தார்.
ஆனால் இந்த ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாகஇருக்கிறதுஎன்றுதெரிவித்த அமெரிக்காவின்தற்போதையஅதிபர் ட்ரம்ப் குறித்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விடுவித்துக்கொண்டார். ட்ரம்பின் இந்த முடிவுக்கு ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் குத்தேரஸ், உலக நாடுகளின் தலைவர்கள் என்றுபலதரப்பினரும்அதிருப்திதெரிவித்தனர்.
"அந்த ஒப்பந்தத்தில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. முன்னர் அவர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் இருந்த அம்சங்கள் எனக்கு பிடிக்
கவில்லை.
அமெரிக்காவுக்குசாதகமானஅம்சங்
கள் அதில் சேர்க்கப்பட்டால், பருவ
நிலை மாற்றம் தொடர்பான பரிஸ்
ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும்
சேர வாய்ப்புள்ளது" என ட்ரம்ப் தெரி
வித்தார்என்றுபன்னாட்டுஊடகங்கள்
செய்தி வெளியிட்டன. (ம)

## வெனிசுலாவில் பஞ்சம்

தென்னமரிக்க நாடான வெனிசுலாவில் தற்போது கடும் உணவுத்தட்டுப்பாடு நிலவுகிறது என்று பன்னாட்டு ஊடகமானரொயிட்டர்ஸ்செய்திவெளியிட்டது.
வெனிசுலா தற்போது பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல்குழப்பநிலைகளும்இந்தப்பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. பெரும்தொகையான மக்கள் விடுதிகளால் வீசப்படும் கழிவு உணவுகளையே வரிசையில் காத்திருந்து பெற்றுப் பசியாற்றுகின்றனர். உணவு விடுதிகள் வெறிச்சோடிப் போயுள்ளன.
இதையடுத்து தற்போதைய அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக அங்கு பெரும் எடுப்பில் கலவரம் வெடித்துள்ளது. இது தொடர்பான ஒளிப்படங்களையும் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)



## பயணிகளை சிறை வைத்த ப

ஜெனீவா, ஜன. 15
சுவிற்சர்லாந்து அல்ப்ஸ் மலையில் அமைந்திருக்கிறது ஜெர்மாட் உல்லாச விடுதி. குளிர்காலத்தில் பனியை ரசிக்கவும் பனிச் சறுக்கு விளையாடுவ தற்காகவும் உலகம் முழுவதிலுமிருந்து இங்கேபயணிகள்வருகிறார்கள். இந்த ஆண்டு எதிர்பாராத விதத்தில் மிகக் கடுமையானபனிப்பொழிவுஏற்பட்டுள்ளது. பல அடி உயரத்துக்கு பனி பெய்ததால் சாலைகள் மூடப்பட்டுவிட்டன.
ரயிலையும்இயக்கமுடியாதசூழல். கீழிருந்து மேலே வருவதற்கோ, மேலிருந்துகீழேசெல்வதற்கோவழிஇல்லை. சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர். பலருக்கு இந்த அதீத பனியும் குளிரும்ஒத்துக்கொள்ளவில்லை. ஜெர்மாட் விடுதிகளில் மட்டும் 13 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள்தங்கியிருக்கிறார்கள். 5 ஆயிரத்து 500 பேர் வசிக்கிறார்கள்.
"வெளியில்செல்லமுடியாது. வ
முடியாது. ஆனால் அறைகளு
திரமாக இருக்க முடியும். பனி
வுடன்கிளம்பவேண்டியதுதா
ஒரு தரப்பினர் நம்பிக்கையே
ருக்கிறார்கள். "இந்த மோசம
நிலையை ரசிக்க முடியவில்
னால்ஹெலிகாப்டர்மூலம்கீ
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
சிலர் தெரிவிததுள்ளனர்.






அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக தற்போது அங்கு பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. நிலச் சரிவின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக இந்தப் படம் அமைந்துள்ளது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர் ஸால் இந்தப் படம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## மியன்மாரில் நிலநடுக்கம்

யாங்கூன், ஜன. 15

மியன்மார் நாட்டில் நேற்று முன்தினம்சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ரங்கூனில் இருந்து சுமார் 186 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதுரிச்டர் அளவுகோலில் 6.0 அலகுகளாக பதிவானது என அமெரிக்கவானிலைஆராய்ச்சி மையம்தெரிவித்துள்ளது. (ம)



பருவ நிலை ஒப்பந்தம் தொடர்பில்

## இந்தியா, சீனாவுக்கு குத்தேரஸ் பாராட்டு

வொஷிங்டன், ஜன. 15

பருவநிலை ஒப்பந்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்து வருவதற்காக இந்தியா மற்றும் சீனாவுக்கு பாராட்டுத் தெரிவித்தார் குத்தேரஸ்.

பரிஸ் நகரில் கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இருந்து கடந்த வருடம் அமெரிக்கா விலகியது. அமெரிக்காவின் விலகலை அடுத்து இந்தியாவும் சீனாவும் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் கடும் முயற்சிகளை எடுத்துவரும் நிலையில் அவற்றை வெகுவாகப் பாராட்டியுள்ளார் குத்தேரஸ்.

'பருவநிலைமாற்றம்எம்மைத்தோற்கடிக்கஅனுமதிக்கக் கூடாது. அதேநேரத்தில் இந்தப்போராட்டத்தில்நாம் இன்னும்வெற்றிபெறவில்லை. பருவநிலைமாற்றம்காரணமாக ஆபிரிக்க நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.



அங்கு வறட்சி உருவாகியுள்ளது. சிறிய தீவுகளில் சூறாவளி மற்றும் கடல்நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இந்தப் போராட்டத்தில் ஏனைய நாடுகள் பங்கேற்பதில் தயக்கம் காட்டிவருகின்றன. உலகப்பொருளாதாரத்தில் பெரிதாக உருவெடுத்துவரும் இரண்டுநாடுகள், போராட்டத்தைமுன்னின்றுநடத்திச்செல்லஉறுதிபூண்டுள்ளன. அந்த நாடுகள் சீனா மற்றும் இந்தியா' என குத்தேரஸ் மேலும் தெரிவித்தார். (ம)



## ஜெயலலிதாவின் சாவு தொடர்பில் இரண்டு பெட்டிகளில் ஆவணங்கள்

வழங்கியது அப்பல்லோ

சென்னை, ஜன. 15

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவுதொடர்பில்விசாரணைநடத்தும்ஆணையத்தில்இரண்டுபெட்டிகளில்ஆவணங்களைதாக்கல் செய்துள்ளது அப்பல்லோ நிர்வாகம்.

ஜெயலலிதாவின் சாவு தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு சந்தேகங்களைப் போக்கி உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காக, ஓய்வுபெற்ற நீதிபதிஆறுமுகசாமிதலைமையில்விசாரணைக் குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. ஜெயலலிதாவின் சாவு தொடர்பில் தொடர்புடைய அனைவரிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை தொடர்பான ஆவணங்களை விசாரணை ஆணையத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என அவர் சிகிச்சை பெற்ற சென்னை அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகத்துக்கு நீதிபதி ஆறுமுகசாமி உத்தரவிட்டிருந்தார். ஆனால், அப்பல்லோ மருத்துவமனை இதனை சமர்ப்பிக்காமல் காலம் தாழ்த்தி வந்தது. இதையடுத்து, ஆவணங்களைஜனவரி12ஆம்திகதிக்குள்சமர்ப்பிக்க வேண்டும் என விசாரணை ஆணையம் கெடு விதித்தது. இதையடுத்தே சுமார் 2 பெட்டிகளில் அப்பல்லோ மருத்துவமனை ஆவணங்களை கடந்தவெள்ளிக்கிழமைவழங்கப்பட்டன. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தைத் திருநாளில் இயற்கையை வஞ்சிக்கலாமா?

தைப் பொங்கல், தமிழர் திருநாள் நேற்று தமிழ் மக்கள்வாழும் பகுதிகளில் எல்லாம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வீடுகள்தோறும் பொங்கல் பொங்கிப் படைத்தல் நேரகாலத்துடனேயே வெகு சிறப்பாக நடந்தேறியது. பணியிடங்கள் பலவற்றிலும்கூட பொங்கல் பானைகள் ஏறியிருந்ததையும் காணமுடிந்தது. ஆலயங்களில் காலையிலேயே பக்த அடியார்கள் கூட்டத்தைக் காணமுடிந்தது. அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பணியிடங்களில் இன்றும் நாளையும்கூட இந்தக் கொண்டாட்டம் தொடரும்.

மகிழ்ச்சியான புத்தாண்டின் புதிய காலையான நேற்று அதிகாலை 5 மணிக்கே பொங்கலின் ஆரவாரம் காதுகளைத் துளைக்க ஆரம்பித்துவிட்டது. பட்டாசு வெடிகளின் டமால் டுமீல் சத்தங்களால்தான் பலர் தமது தூக்கத்தை விட்டே எழுந்திருக்கும் நிலைதான் இருந்தது எனலாம். நண்பகல் கடந்த பின்னரும்கூடப் பட்டாசுகளின் வேட்டொலி நிற்கவில்லை. வடக்கில் உள்ள முதன்மையான வீதிகளில் நேற்றுக் காலை பயணித்திருக்கக்கூடியவர்கள் அனைவரும் இந்தப் பட்டாசுக் களேபரத்தினால் போர்க்கோலம் பூண்டிருந்த பகுதிகளை ஆங்காங்கே காணாமல் சென்றிருக்க முடியாது.

கொண்டாட்டங்கள் அவசியமானவைதான். அதிலும் இயற்கையோடு ஒன்றிய, இயற்கையை நேசிக்க வைக்கின்ற தைப்பொங்கல்போன்றதனிப்பெரும்தமிழர்விழாக்கள்கட்டாயம்கொண்டாடப்பட வேண்டியவை. அதேசமயத்தில் இயற்கையின்பால் அன்பைப் பொழியும் ஒரு கொண்டாட்டத்தில்அந்த இயற்கையையே மாசுபடுத்தும் விதத்தில்மனிதர்கள்நடந்துகொள்வது எத்தகைய மடமைத்தனம்? சூரியனைக் கொண்டாடிக்கொண்டு நாம் வளியை மாசுபடுத்தலாமா?

பட்டாசுகளைக் கொளுத்துவதால் ஏற்படும் சூழல் மாசும் வளி மாசும் மிகமிகக் கொடூரமானவை. ஏற்கனவே நாம் வாகனப்புகையாலும்குப்பைகளையும்பொலித்தீன்களையும் எரிப்பதாலும் வீடுகளில் விறகடுப்புகளைப் பயன்படுத்துவதாலும் வளியை நாளாந்தம் மாசுபடுத்தி வருகின்றோம். அதுபோதாதென்று இயற்கைவழிபாட்டு நாளொன்றில் இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போன்று வெடிகளின் கந்தக நெடியால் ஒரு சில நாள்களிலேயே வளியையும் பூமியையும் நாம் பெருமளவில் நாசப்படுத்தி விடுகின்றோம்; அதுவும் இயற்கையைக் கொண்டாடுகின்றோம் என்கிற பெயரில். இது எவ்வளவு பெரிய அபத்தம்! போதாதற்கு பெருமளவு பணத்தையும் கொட்டி கரியாகவும் கரியமில வாயுவாகவும் தீமையை வளர்க்கிறோம்.

கொண்டாட்டம் வேண்டும்தான். அதில் ஆரவாரங்களும் நிச்சயம் ஒரு பகுதிதான். அவற்றையெல்லாம் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், அவையெவையும் இயற்கையை, பூமியை மாசுபடுத்துவனவாக நிச்சயம் இருக்கக்கூடாது. எனவே கொண்டாட்டங்களில் இருந்து பட்டாசுகளை அப்புறப்படுத்த வேண்டியது எம் எல்லோரதும் கடமையும் தேவையும்கூட.

பொங்கல் விழாவில் என்று மட்டுமல்ல கிறிஸ்மஸ், ஆங்கிலப் புத்தாண்டு, இறப்பு என்று எல்லா இடங்களிலும் இந்தப்பட்டாசு நீக்கமற ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறது. அதன் பிடியிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டு இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும்.

குறைந்தபட்சம் வடக்கு மாகாண எல்லைக்குள் பட்டாசுகளுக்கான கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவது குறித்துச் சிந்திக்க வேண்டும். சிறுவர்களே பட்டாசு வியாபாரத்தின் முக்கிய சூத்திரதாரிகள் என்பதால், கொண்டாட்டங்களில் அவர்களின் மகிழ்வூட்டலுக்கான மாற்று ஆரவாரங்கள் குறித்தும் கண்டறிந்து அறிமுகப்படுத்த வேண்டும். ஆரம்பத்திலேயே இதனை ஒரு கட்டுக்குள் வைக்கவில்லையாயின் பின்னர் அதுவே பெரும் தலையிடியாக மாறிவிடவும் கூடும். எனவே சுகாதாரத்துறையினர் மற்றும் சுற்றுச் சூழலியலாளர்கள் இது குறித்து அதிக கவனம் எடுத்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வரவேண்டும்.

# அரச தலைவர் ஆணைக்குழுவின் நெற்றியடியால் நிலைகுலைந்துபோன ஐ.தே.கட்சி

சிங்கள மூலம்: ஜயதிலக - டி சில்வா (லங்காதீப)
தமிழில்: வீ.எஸ்.ரீ.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் முதல்2016ஆம்ஆண்டுமார்ச் மாதம் வரையான கால இடைவெளியில் மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கல் செயற்பாடுகள் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ள அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளவிடயங்கள்தொடர்பாகஅண்மையில்அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தகருத்துக்கள்தற்போதும் விமர்சனங்களுக்கு உள்ளாகிவருமோர் விடயமாகும்.

அத்தகைய பிணைமுறி வழங்கல் செயற்பாடுகளின்போது மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கோப் குழு என அழைக்கப்படும் பெரிய அளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்திருந்தது. அத்தோடு அது தொடர்பாக நாட்டு மக்கள் மத்தியில் கருத்து வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதன் பேரிலும் அரச தலைவர் குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவொன்றைநியமித்திருந்தார்.

பத்து மாதங்கள் வரையான காலப்பகுதியில் தனது விசாரணைகளை முன்னெடுத்த அந்தஅரசதலைவர்ஆணைக்குழு. கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியன்று தனது அறிக்கையை அரசதலைவரிடம் கையளித்திருந்தது. அந்த அறிக்கையின் பிரதியொன்று தேவையானசட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### பிணைமுறி வழங்கல் மோசடியில் நாட்டுக்குப் பெருநட்டம்

அதன்படி ஐந்து மாதங்கள் என்ற குறுகியகாலத்துள் பேர்பேச்சுவல் ரெசறீஸ் புறோக்கர் நிறுவனம் சட்டத்துக்குப் புறம்பானவகையில்11.5பில்லியன் அல்லது 11.500 மில்லியன் பெறுமதியான பணத்தைத் தேடிக் கொண்டுள்ளது. இதன் காரணமாக அரசுக்கு 8.5 பில்லியன்ரூபாக்கள்நட்டமேற்பட்டதாக கணக்கிடப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி, மஹாபொல பொறுப்பு நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் இலங்கைக்காப்புறுதிக்கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கே மொத்தமாக அந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

குறித்தமோசடியுடன்சம்பந்தப்பட்டிருந்ததாக முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள்ஆளுநர்அர்ஜுனமகேந்திரன், கசுன் பலிஹேன மற்றும் மத்திய வங்கியின் சில உயரதிகாரிகள் என்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அந்த ஆணைக்குழு தனது அறிக்கையில் அரசை வலியுறுத்தியிருந்தது.

அத்துடன் ஏற்பட்டநட்டத்தை அறவிடுவதற்காகஅவசியசட்டவிதிகள் உருவாக்கப்பட வேண்டுமெனவும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அதுமட்டுமன்றி குறிப்பிட்ட விசாரணை செயற்பாடுகளுக்கான செலவுத் தொகை குறித்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டுமெனவும்யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொகையை அறவிடுவதை இலகுபடுத்தும் வகையில் சட்டமொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளுமாறும் ஆணைக்குழுஆலோசனைவழங்கியுள்ளது. அத்தோடு பிணைமுறி வழங்கலில்இடம்பெற்றமோசடியில் மத்திய வங்கியினது இரகசியம் பேணும் தன்மை மற்றும் பாதுகாப்புத் தன்மை அற்றுப் போயுள்ளதாகவும் ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது. எனவே இலங்கையில் மத்திய வங்கியின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள்முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்பட வேண்டுமெனவும்ஆணைக்குழுபரிந்துரைத்துள்ளது.

குறித்த ஆணைக்குழு அறிக்கையில்உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்மற்றும்பரிந்துரைகளை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தியன்மூலம்அரச தலைவர் முன்னுதாரணமாக நடந்துள்ளார்எனக்கூறஇயலும். அந்த அறிக்கையை பொருத்தமானமேல் நடவடிக்கைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பியதும் ஒரு முன்னுதாரணச் செயற்பாடே. பெரும்பாலும் ஏனையவிசாரணை ஆணைக்குழுக்களது அறிக்கைகள், மேல் நடவடிக்கைகள் எதுவுமின்றி அலுமாரிகளுக்குள்



பத்து மாதங்கள் வரையான காலப்பகுதியில் தனது விசாரணைகளை முன்னெடுத்த அந்த அரசதலைவர் ஆணைக்குழு, கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியன்று தனது அறிக்கையை அரசதலைவரிடம் கையளித்திருந்தது. அந்த அறிக்கையின் பிரதியொன்று தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.



அடைக்கலமாகும் பின்னணியில் இத்தகையபகிரங்கசெயற்பாடுதிருப் தியளிக்குமொன்று.

**காரணத்துடன் தான் அரச தலைவர் நடவடிக்கையை துரிதப்படுத்த முயல்கிறார்**

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை கருத்தில் கொண்டே அரசதலைவர்ஊழல்மோசடிக்கெதிராக இத்தகைய கடும் நடவடிக்கை மேற்கொள்ளத் துணிந்துள்ளார் எனக்கொள்வதில்தப்பேதுமில்லை. அவரது இத்தகைய கடும் தாக்குதலால்அரசியல்அரங்கில்எத்தகைய மாற்றங்கள் ஏற்படும்? எவரெவர் பாதிப்புக்கு உள்ளாவர்? என்பவற்றுக்கானபதில்எதிர்வரும்நாள்களில் தெரியவரக்கூடும். ஊழல்மோசடிகளில்சம்பந்தப்பட்டோர்மீதுதராதரம் எதுவும் பராது நடவடிக்கை எடுக்கப் படுமென்ற அரச தலைவரது அறிவிப்பை ஒரு சில தரப்பினர் மறுதலிக்கமுயல்வதையும்அவதானிக்க முடிகிறது.

அரச தலைவரது அத்தகைய கடும் தாக்குதலுக்கு நேரடியாகவும், முதலாவதாகவும் உட்படும் தலைவிதி ஐ.தே.கட்சிக்கே ஏற்பட்டள்ளது. கட்சியின் உள்ளக ரீதியில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினது நலிவடைந்து போன மதிப்பை. மீண்டும் கட்டியெழுப்ப முயன்றால் நிலைமை மேலும் பாதிப்படையக் கூடும்.

அதேபோன்றுரவிகருணாநாயக்கா தலைமை அமைச்சருக்கு தாம் மிக நெருக்கமானவரெனக் காட்டிக் கொள்ள முயலும் போக்கும் ஐ.தே. கட்சியின் ஆரோக்கியத்துக்கு உகந்ததொன்றல்ல.

அர்ஜுனமகேந்திரனைமத்தியவங்கியின் ஆளுநராக நியமித்ததில் தலைமை அமைச்சர் தவறிழைத்ததாகஆணைக்குழுகுறிப்பிடவில்லை. பின்பொரு சமயம் அர்ஜுன மகேந்திரன் தொடர்பாக நாடாளுமன்றத்தில்தலைமைஅமைச்சர்நம்பிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது என்றே ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இதனால் தலைமை அமைச்சரது மதிப்புக்குக் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்புஏற்பட்டுள்ளது. இந்தவேளையில், முகம் கொடுக்க நேர்ந்துள்ள சவாலைநேரடியாகஎதிர்கொண்டு, ஊழல் புரிந்தோரைக் கட்சியிலிருந்துவெளியேற்றுவதுடன், குறித்த ஊழல் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதுமே ஐ.தே.கட்சி மேற்கொள்ளத்தக்க சிறப்பான வழிமுறையாகஅமையும். சிலவேளை இத்தகைய கோரிக்கை நிறைவேற்றப்பட இயலாததொன்றாகவும் அமைய இடமுண்டு. சந்தேகமெதுவுமின்றி, இத்தகைய அரசியல் நிலை சுதந்திரக் கட்சியின் இரு தரப்புகளுக்கும் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றங்களுக்கானதேர்தலில் வாய்ப்பானதாகஅமையுமொன்று. இருப்பினும் அது குறுகிய கால வாய்ப்பொன்றாகவே இருக்கும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை கருத்தில் கொண்டே அரச தலைவர் ஊழல் மோசடிக்கெதிராக இத்தகைய கடும் நடவடிக்கை மேற்கொள்ளத் துணிந்துள்ளார்எனக்கொள்வதில்தப்பேதுமில்லை. அவரது இத்தகைய கடும் தாக்குதலால் அரசியல் அரங்கில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும்? எவரெவர்பாதிப்புக்குஉள்ளாவர்?என்பவற்றுக்கானபதில் எதிர்வரும் நாள்களில் கிட்டக்கூடும். ஊழல் மோசடிகளில்சம்பந்தப்பட்டோர்மீதுதராதரம்எதுவும்பராது நடவடிக்கை எடுக்கப்படுமென்ற அரச தலைவரது அறிவிப்பைஒருசிலதரப்பினர்மறுதலிக்கமுயல்வதையும் அவதானிக்க முடிகிறது.

**மகிந்த காலத்து நிதிமோசடிகள் குறித்து விசாரிக்க இதுவே பொருத்தமான சந்தர்ப்பம்**

அரச தலைவரது பகிரங்க அறிவிப்பில் மற்றொரு பக்க நோக்கமும் அடங்கியுள்ளது. அதாவது 2007 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுவரையானகாலப்பகுதியில் மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் தொடர்பாக விசரணை மேற்கொள்ள அரச தலைவர் ஆணைக் குழுவொன்றைநியமித்தல்மற்றும் ஊழல் மோசடிகள் குறித்த குற்றச் சாட்டுக்களை விசாரிக்கும் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதாக வெளிப்படுத்துவதாகும். தற்போதுகூட அத்தகைய 34 குற்றச் சாட்டுக்கள் குறித்த அறிக்கைள் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சில அறிக்கைகள் மீதான வழக்கு நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைமூலம்முன்னாள்அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவர் தலைமையிலான தாமரை மொட்டுச்சின்னக்கட்சிஎன்பவற்றுக் கானபொதுமக்களது ஆதரவுநலிவடைய ஏதுவாகலாம். அந்த வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினதுஇந்தக்கடும்தாக்குதலின் தொடர்ச்சியான பலாபலன் மகிந்தவினது தாமரைமொட்டுச் சின்னக்கட்சிக்கு பாதிப்பைஏற்படுத்துவதாக அமையும்.

மறுபுறத்தில்கூட்டுஅரசின்தலைவர் என்றவகையிலும், அமைச்சரவையின் தலைவர் என்ற வகையிலும் அரச தலைவர் மைத்திரிபாலகூட, இடம்பெற்ற தவற்றிலிருந்து நூற்றுக்கு நூறு வீதம் விடுபட இயலாது. ஆயினும்தற்போதுஅவர்எதுவுமே செய்திட இயலாத நிலைக்கு உட்பட்டுள்ளதாகக் கருத இயலும். "ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச்சொன்னால்முடவனுக்குக் கோபம்" என்றஇருதலைக்கொள்ளி எறும்பின்நிலைக்குஅரசதலைவர் இன்று ஆட்பட நேர்ந்துள்ளது.

**ஜே.வி.பி. தரப்பினருக்கு தாமாக வாய்த்துள்ள வாய்ப்பு**

இன்றைய அரசியல் களநிலையில் ஜே. வி.பிக்கு நல் வாய்ப்புக் கிட்டக் கூடுமெனக்கருதவேண்டியுள்ளது. ஏனெனில், இந்த மத்திய வங்கி பிணைமுறி வழங்கல் விடயத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடியை வெளிக்கொண்டு வர கடும் முயற்சியெடுத்துச் செயற்பட்ட தரப்பு ஜே.வி.பி. தரப்பாகும். அதுமட்டுமன்றி அரசியலரங்கில் ஜே.வி.பி, ஊழல் மோசடி செயற்பாடுகள் எதிலும் தொடர்புபட்டிருந்ததான குற்றச் சாட்டெதற்கும் உட்பட்டதில்லை என்பதனால்ஆகும். ஆயினும்இத்தகைய தகுதிஎந்தஅளவுக்குஉள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி தரப்பின் வெற்றிக்குவழிவகுக்கும்என்பதுகுறித்து எதிர்வுகூறல்எதனையும்தெரிவிக்க இயலாதுள்ளது. சிலவேளை உள்ளூராட்சித் தேர்தல் அதற்கு வழி ஏற்படுத்தும்ஒன்றாகவும்அமையக் கூடும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு இந்த வெளிப்படையான, பரந்துபட்ட அழுத்தங்கள் ஏற்படும்எனஎண்ணுவதுசிரமமே. சிலவேளை அவற்றின் ஆதரவாளர்களிடையே அரச தலைவர் குறித்த நம்பிக்கை உயர்வடையக் கூடும்.

உண்மையில் நாட்டு மக்கள் மத்தியில் நலிவடைந்து போய்விட்டுள்ள நம்பிக்கையைவென்றெடுக்கஅரச தலைவருக்குத் தற்போது புதிய வாய்ப்பொன்று கிட்டியுள்ளது.

தூக்கத்தில் ஆழ்ந்து போய், சாம்பல் பூத்துப் போன மூன்று ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஜனவரி 8 வேலைத் திட்டத்தை தாமதமின்றி முன்னெடுத்துச்செயற்படதற்போதாவது இந்தக்கூட்டுஅரசுநடவடிக்கை எடுக்குமானால், அரசால் தலை தூக்க வாய்ப்புக்கிட்டும். அவ்வாறு செயற்பட அரசு தவறுமானால், ஆண்டவன்தான் இந்த அரசைக் காப்பாற்ற வேண்டும்.





## சிறந்த போக்குவரத்துக்கான வசதிவாய்ப்பு மேற்கொள்ளப்படுமா?

கொடிகாமம் நகர்ப் பகுதி, கணிசமான சனநடமாட்டம் உள்ள பகுதியாதலால் அது எப்போதும் பரபரப்பாக இயங்கும் இடமாக உள்ளது. கொடிகாமம் சந்தைப் பகுதி தேங்காய் மற்றும் பலாப்பழம், மாம்பழம் போன்றவை பெருமளவில் சந்தைப்படுத்தப்படும் இடமாகவும், யாழ்ப்பாணம் கண்டி வீதி, கொடிகாமம் - பருத்தித்துறை வீதி என்பவை சந்திக்கும் முக்கிய சந்தி மற்றும் ரயில் நிலையம் பெருமளவு சனநடமாட்டம் உள்ள இடமாகவும் காணப்படுகின்றது. வரணி, வடக்கு மிருசுவில், கெற்பேலி மற்றும் அயல் கிராம மக்களது போக்குவரத்துக்கு பெருமளவு பயன்படும் வகையில் முதன்மை பேருந்து நிலையம் சந்தியிலிருந்து சிறிது தூரத்தில் பருத்தித்துறை வீதியில் உட்பக்கமாக உள்ளபடியால், கண்டி வீதி முதன்மைச் சந்தியில் பேருந்துகளுக்காகக் காத்திருக்கும் பயணிகள், மாணவர்கள் போதிய இருக்கை வசதியோ உரிய நிழற்குடை வசதியோ இல்லாமல் பாதை ஓரத்தில் கால்கடுக்க நிற்க வேண்டியநிலை காணப்படுகின்றது. இரண்டு சிறிய நிழற்குடைகள் வர்த்தக நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ளபோதிலும், அவற்றில் ஒரே நேரத்தில் ஒரு சிலர் தான் அமர்ந்திருக்க முடிகிறது. வெயில், மழைக்குப் பாதுகாப்புத் தருபவையாகவும் அவை இல்லை. அதிகாலை முதல் இரவு பத்து மணிவரை ஏ-9 வீதியில் பயணிக்க வேண்டிய பயணிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அரச தனியார் போக்குவரத்து பேருந்துகளுக்காக குறித்த இடத்தில் காத்திருக்க வேண்டியுள்ளது. பேருந்துப் பயணிகளது சிரமங்களைக் கவனத்தில் எடுத்து உரிய அதிகாரத் தரப்பினர் பயணிகள் சிரமமின்றித் தங்கி நின்று தமது பயணங்களை மேற்கொள்ள வசதி செய்து உதவுவார்களா?

து.சுகந்தி,
எருவன், கொடிகாமம்.

# பசுக்கள் வாழ்வதற்கு எழுவோம் வாரீர்

காரை.எம்.பி.அருளானந்தன்



'கோமாதா எங்கள் குல மாதா." பத்து மாதங்கள் எம்மை சுமந்து பெற்று தாயானவள் எமக்கு பாலூட்டி வளர்ப்பது போல எமது ஆயுட்காலம் முழுவதும் நிறை உணவாகிய பாலைத்தந்து எம்மை வளர்ப்பது பசு.

**செல்லப் பெயர் சொல்லி பசுவை அழைத்திடுவர்**

பசுவை 'கோ' என்றும் தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப் பெயர்களிட்டு அழைத்து மகிழ்வர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பனவெல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்களாகும்: பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம்; கீர்த்தி இல்லையாம் என்றும் பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்க மாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டுக்குச் சமமாகும் என்றும் கூறுவர்.

**ஆவிவா மனையகம் அழகு குன்றுமே**
**ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்**
**ஆவிலா மனையகம் அமலை நீக்குவாள்**
**ஆவிலா நாடெலாம் இடவி யாகுமே**

இந்தச் செய்திகளையெல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ.இளமுருகனார் அழகாகக் கூறியுள்ளார்.

**பசுவின் உடலில் வாழும் தேவர்கள், முனிவர்கள்**

பசுவின் கொம்பின் அடியில் பிரமவிட்டுணுக்களும், கொம்பின் நுனியில் கோதாவரி முதலி தீர்த்தங்களும் சராசரங்களும், சிரசில் சிவனும், நடு நெற்றியில் உமா தேவியும், மேல் நாசியில் முருகக் கடவுளும், உள்நாசியில் நாகேசரும், இரு காதுகளிலும் அச்சுவினி தேவர்களும், இரு கண்களிலும் சூரிய சந்திரரும், பல்லில் வாயுவும், நாவில் வருணனும், ஊங்காரத்தில் சரஸ்வதியும், இருதயத்தில் இயமனும், கெண்டைத்தலத்தில் இயக்கர்களும், உதட்டில் உதய ஆஸ்தமன சந்திகளும் கழுத்தில் இந்திரனும், திமிலில் அருக்கர்களும், மார்பில் சாத்தியர்களும், நான்கு கால்களில் வாயுக்களும், முழந்தாள்களில் மருத்துவர்களும், குரத்தின் நுனியில் நாக லோகத்தார்களும், நடுவில் கந்தருவர்களும் மேற்குரத்தில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரர்களும், சந்திகளில் வசுக்களும், அரைப்பலகையில் பிதிரர்களும், பகத்தில் சத்த மாதர்களும், அபானத்தில் இலக்குமியும், அடிவாலில் நாகேரும், வால் மயிரில் சூரியனின் ஒளியும், சலத்தில் சங்கையும், சாணத்தில் யமுனையும் உரோமத்தில் முனிவர்களும், உதரத்தில் பூமாதேவியும், முலையில் சமுத்திரமும், வயிறு இருதயம், முகம் என்பனவற்றில் காருகபத்தியம் முத்லிய அக்கினி முனறும், எலும்பிலும் சுக்கிலத்திலும் யாகங்களும், எல்லா அவயவங்களிலும் கற்புடை மகளிரும் வசிப்பதாக சிவதருமோத்திரம் குறிப்பிடுகிறது.

**மாட்டுப்பொங்கல்**

எங்கள் வாழ்விலே பசுமைப் புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவி வரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப் பொங்கல் இடுபவராகிய நாம், அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் புரிந்து வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம். மேலும் சைவ சமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தலாகாது என்றும், அது உருத்திரனின் அன்னையெனவும் வசுக்களின் பிள்ளையாகவும், முதத்தின் மையமாகவும், ஆதித்தியனின் சகோதரியாகவும், அனைவருக்கும் அதிதியாகவும், பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத் தருவர்.

சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. "நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாய் பாலைப் பொழியுங்கள். காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள புல்வெளி உமக்குப் போதுமான தாகுக. இங்கேயுள்ள நீர் நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகும். நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக.



**பசுவதை சைவநெறிக்கு சிறிதும் ஒவ்வாத செயல்**

பசுவினைக் கொன்று உண்ணும் வழங்கம் வெளிநாட்டு வாசிகளலும் வேறு சிலராலும் இங்கே ஒருகாலத்தில் வந்ததென்றும், அது புனிதமான சைவ நெறிக்கு ஒவ்வாத செயல் என்றும் குறிப்பிடப்படுகிறது. அதனை உண்ணல் பாவிகளின் பழக்கமாகுமென்றும், அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பேசப்படுவர்.

**மகத்துவமான கோ பூசை**

பசுக்களும் இடபங்களும் இந்துக்களைப் பொறுத்தவரை மிகவும் புனிதமானதும் தெய்வீகத் தன்மை பொருந்தியவையுமாகும். இந்துக்கள் பூசும் புனிதமான வீபூதி பசுவின் சாணத்திலிருந்து பெறப்படுகிறது. பசுவின் சலம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருள்களும் பூசைக்குரிய பஞ்ச கௌவியங்களாகும். புனித பொருள்களாகும். பசுவின் உடலின் அங்கங்களில் சகல தெய்வங்களும் உறைவதால் கோபூசை செய்வது சகல தெய்வங்களையும் பூசிப்பதற்கு சமனானதாகும்.

**சிவபூமியில் கொடிய பழக்கம்**

சிவபூமி என வர்ணிக்கப்படும் எமது ஈழவள திருநாட்டில் பசுவைப் பேணி வழிபடும் பண்புகள் குறைவடைந்து "பசுவதை செய்தல், மாட்டிறைச்சி உண்ணல்'' போன்ற கொடிய பழக்கங்கள் மேலோங்கி வருகின்றன. இதனாலன்றோ எமது மக்களுக்கு துன்பங்களும் துயரங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. "புதிய புதிய நோய்கள், இயற்கை அழிவுகள், இனப் பூசல்கள், உரிமைகள் கிடையாமை, வறுமை" எனப் பல பிரச்சினைகள் எழுந்து சூழ்ந்து உள்ளன.

இந்துக்களே ஏனைய ஆன்மீக வாதிகளே! பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்க எழுந்திடுவீர். புனிதமான வீபூதியை நாம் பசுவின் சாணியிலிருந்து பெறுகின்றோம். கும்பாபிஷேகத்தின் போது ஆலயத்தில் தசதரிசனத்துக்கு கொண்டு வந்து தரிசிக்கப்படுவது பசுவாகும். திருமணம், புதுமனை புகுதல் என்பவற்றில் பூசிக்கப்படுவதும் பசுவாகும். வீட்டுக்கோ, ஆலயத்துக்கோ நிலம் எடுக்கும் போது பசுக்களை அவ்விடத்தில் கட்டி பசுவின் கோசலம், சோமயம், பசுவின் கால் பாதம் பட்டு பூமி புனிதமடைகிறது. நற்தி (இடபம்) சிவபெருமானின் வாகனமாகும். கிருஷ்ணர் பிறந்து வளர்ந்து லீலைகள் புரிந்தது பசுக்கள் நிறைந்த கோகுலமாகும். இயேசு கிறிஸ்து பிறந்ததும் புனிதமான மாட்டுத் தொழுவமாகும்.

**பசுக்களை பாதுகாத்து வாழவைத்த தமிழர்கள்**

அந்தக் காலத்தில் நாட்டில் பெருவெள்ளம், நோய், வறட்சி என துன்பங்கள் நிறைந்தால் அரசர்கள் மகாநாடு கூட்டி பசுக்களின் குறை தீர்த்தார்கள். மனு நீதி கண்ட சோழன் பசுவுக்கு நீதி வழங்க தன் மகனை தேர்ச் சில்லினால் கொன்று நீதி வழங்கினான். பெண் பிள்ளைகளுக்கு சீதனமாகவும் நன்கொடையாகவும் தாய் தந்தையர்கள் பசுக்களைக் கொடுத்தார்கள். நாட்டின் செல்வமாக பசுக்களை வைத்திருந்தார்கள். பசுமாடுகளை கொல்பவர்கள், உண்பவர்கள் மிகவும் கீழ் மக்களாக கருதப்பட்டார்கள். பசுக்களும் இடபங்களும் தாகந்தீர தண்ணீர்த் தொட்டிகள் கேணிகள் அமைத்தார்கள். ஆவுரைஞ்சிக் கற்களை நாட்டி பசுக்களுக்கு உதவினார்கள். பூரண நிறையுணவாகிய பாலை வாழ்நாள் பூராகவும் தருவது பசுவாகும்.

இத்தகு மேன்மையும் பெருமையும் கொண்ட பசுக்களை இடபங்களை பாதுகாத்து வாழ இன்றைய பட்டிப் பொங்கல் திருநாளில் உறுதி கொள்வோமாக வாரீர் வாரீர்.

> “பசுக்களும் இடபங்களும் இந்துக்களைப் பொறுத்தவரை மிகவும் புனிதமானதும் தெய்வீகத் தன்மை பொருந்தியவையுமாகும். இந்துக்கள் பூசும் புனிதமான வீபூதி பசுவின் சாணத்திலிருந்து பெறப்படுகிறது. பசுவின் சலம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருள்களும் பூசைக்குரிய பஞ்ச கௌவியங்களாகும். புனித பொருள்களாகும். பசுவின் உடலின் அங்கங்களில் சகல தெய்வங்களும் உறைவதால் கோபூசை செய்வது சகல தெய்வங்களையும் பூசிப்பதற்கு சமனானதாகும்.

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**M.யோன்மேரி**
மலர்வு:- 03.01.1951
உதிர்வு:- 15.01.2009



**J.லூர்ட்ஸ் சுபாசினி**
மலர்வு:- 14.12.1981
உதிர்வு:- 22.10.2008



**J.யூட் சுஜீவன்**
மலர்வு:- 10.04.1991
உதிர்வு:- 15.01.2009



**J.யூட் சுபாசன்**
மலர்வு:- 03.05.1996
உதிர்வு:- 24.01.2009

காலங்கள் கடக்கிறது கண்ணீரோ காயவில்லை
ஒன்பது ஆண்டுகள் ஓடித்தான் போனதுவோ?
கறைபடிந்த அந்நாளை ஞாலமே மறக்காது
உயிர்த்துடிப்பு உள்ளவரை துடிக்கும் உம் நினைவுகளும்

(AC/472) (11,17)

கடற்கரை வீதி, பருத்தித்துறை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 02 . 1956 இறப்பு 13 . 01 . 2018

# தியாகராசா மரியமலர்

தியாகராசா மரியமலர் நேற்றுமுன்தினம் (13.01.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தியாக்ராசாவின் அன்பு மனைவியும் சோபிகா, அஸ்வினி (வவுனியா), காந்திராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜோசேப் பாக்கியநாதர், பாக்கியநாதர் திரேசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரி யோசெப், மேரியோசெப், அன்ரனி, கென்றி யோசெப், இமானுவேல், பிலிப்யோசெப் தோமஸ், மேரிபுருனோ, றஞ்சினிமற்றும்ஜேம்ஸ்(கனடா), ஜெசிந்தாராகினி(இந்தியா), மரிஸ்ரெலா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமலர், சிவராசா ஆகியோரின் மைத்துனரும் அன்ரன் ஐங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நெடுங்கேணி), ஷோபிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் நலிவர்வசோன், கெவின், ஷவியோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கரப்பன்காட்டில் உள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (15.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு றம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 656 7813 (AVA/245)

## தவறிவிட்டது

து.விதுஷன் என்பவரது அடையாளஅட்டை (942452780V), சாரதி அனுமதி பத்திரம் உட்பட்ட முக்கிய ஆவணங்கள் 14.01.2018 அன்று கல்வியன்காட்டுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அதில் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:077 656 9654

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு,
advt@uthayan.com,
021 493 1111

# நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு முதலாம் ஆண்டு



மண்ணில் 10.05.1935
விண்ணில் 29.11.2015

**அமரர் மூத்தையா இராசரத்தினம்**
திதி: திருதியை (06.11.2017)



மண்ணில் 10.05.1939
விண்ணில் 09.01.2017

**திருமதி லீலாவதி இராசரத்தினம்**
திதி: சதுர்த்தசி (15.01.2018)

அன்பின் பெரியப்பா! பெரியம்மா!

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் மறையாது
அன்பான உங்கள் பாசத்தின் நினைவுகள்!
கனிவான உங்கள் நேசத்தின் சிலிர்ப்புகள்!
நித்தமும் நினைக்கையில் விழிசிந்தும் துளிகளுடன்
இன்பத்திலும் துன்பத்திலும் உங்களைத் தேடுகின்றேன்.

(c 12913) (11,17)

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்கு. பெறாமகன் வசந்தன் கட்டுடை, மானிப்பாய்

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06. ஈச்சமோட்டை வீதி. ஆதன இல. 52/3 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயில்வாகனமும் பெண் நாகரத்தினமும் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இல.53/3. ஈச்சமோட்டை வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகஸ்தூரி ஜெயராசா செல்வலிங்கமும் பெண் திலகவதியும் (மயில்வாகனம் மகள்) 2010.09.05 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் 10370 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய வெளிப்படுத்தல் உறுதியில் **"சதக்கல் வயல்"** என்னும் பெயருடைய நில.பர.2 விஸ்தீரணம் உடைய ஆதனம் ஆதியில் தர்மலிங்கம் நடராசாவுக்கும் பெண் நல்லம்மாவுக்கும் உரித்தாக இருந்ததென்றும் அவர்களிடமிருந்து மேற்குறித்த திலகவதியின் பெற்றோரான பொன்னையா மயில்வாகனமும் பெண் நாகரத்தினமும் 1969ஆம் ஆண்டு கொள்வனவு செய்து பின்னர் திலகவதியான தமக்கு 1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் சு.செ.மகாதேவா முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதி மூலம் சீதனமாக வழங்கியிருந்தார்கள் என்றும் குறித்த உறுதியானது 1995 இடப்பெயர்வின் போது கை தவறவிட்டுவிட்டதாகவும் காணிப் பதிவகத்தில் பெறுவதற்கு முயற்சி செய்தும் கிடைக்கவில்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளதை பின்னர் 13/02/2017 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் 10462 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் குறித்த ஜெயராசா செல்வலிங்கமும் பெண் திலகவதியும் ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் கிறிஸ்ரீனா செல்வதியும் ஆகியோருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன விவரம்:** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளிக் கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "சதக்கவயல்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களின் வரைபட இலக்கம் 2967/2010.09.05 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர 2 குளி.00 ஆகும்.

**இதன் எல்லை.**
**கிழக்கு :- வாய்க்கால்**
**வடக்கு :- பாலசுப்பிரமணியமும் பெண் தயாநிதியின் ஆதனம்**
**மேற்கு :- ஒழுங்கை**
**தெற்கு :- தர்மலிங்கம் பெண் மகேஸ்வரியின் ஆதனம்**

தற்போது அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் செல்வதியும் இவ்வாதனத்தை தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆனமானது அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ் சைமனும் பெண் செல்வதியும் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C/5513)(11,17)

## மரண அறிவித்தல்

# நவரத்தினம் சுந்தரலிங்கம்

(சின்னராசா, NSR Industrial உரிமையாளர், புன்னாலைக்கட்டுவன்)



தோற்றம் : 19.03.1948
மறைவு : 11.01.2018

யாழ்.ஏழாலை மத்தி காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சுந்தரலிங்கம் 11.01.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (இராசமணி) நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு -பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ராணி அவர்களின் அன்புக் கணவரும், தீபா (பிரான்ஸ்), காண்டீபன் (கண்ணன் - பிரான்ஸ்), சர்மிளா (மதி - இத்தாலி), லமிரா (லமி - இந்தியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்த சாமி, விமலாதேவி (இலங்கை), தேவதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகிந்தன் (பிரான்ஸ்), சத்தியரூபன் (இத்தாலி), றஜிதா (பிரான்ஸ்), றாஜீவ் (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், கதிரவேலு, காலஞ்சென்ற காசி லிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும், தங்கவடிவேல், லோகேந்திரம், சறோஜாதேவி, சிறீமகாராணி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜனனி, அபிசா, ஆயிசா (பிரான்ஸ்), அகிசன், லகிசன் (இத்தாலி), ஈசா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 279 7119 தகவல் : குடும்பத்தினர்.

ES Printers

அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்




021 492 7471,
021 492 7472

esprintersjaffna@gmail.com

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு

advt@uthayan.com,
021 493 1111


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**ந.ரங்கநாதன்**

பிறப்பு
01.04.1951

இறப்பு
15.01.2011

திதி:
தைமாத பூர்வபக்க ஏகாதசி

குடும்ப குல விளக்காய் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஏழு சென்றாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

29/21, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி
இ.சாரதாதேவி.

(CS/12696)(11.17)

## மரண அறிவித்தல்

### கந்தையா சண்முகராஜா
**(நீராவியடி, யாழ்ப்பாணம்)**



மலர்வு 31.08.1941 உதிர்வு 10.01.2018

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும்தற்சமயம்கனடாவில் வசித்து வந்தவருமான கந்தையா சண்முகராஜா(நோர்தேன்இன்டஸ்ரீஸ்)10.01.2018 புதன்கிழமைஇறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற உரும்பிராய் கந்தன் . குத்துவாட்டி நாகலிங்கத்தின் பேரனும், யாழ். வண்ணை கலட்டி அம்மன் கோயில் மருகம்பிலா நாகதம்பிரான் கோயில் ஆலய ஸ்தபாகருமான காலஞ்சென்ற அ.சி.கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், சறோஜினி (வதனி), சந்திரிகா (வக்சலா), சாந்தினி (வனிதா) ஆகியோரின் பாசமிகுதந்தையும், தில்லைநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புமாமனாரும், காலஞ்சென்றநாகரத்தினம் மற்றும் கனகேஸ்வரி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைராசா, பூபாலசிங்கம் மற்றும் நாகம்மா (வவுனியா), சரவணமுத்து, விஸ்வ லிங்கம், சபாரத்தினம் கமலாம்பிகை, சுந்தரம்பிள்ளை, குலசேகரம் பிள்ளை, இராஜதுரை சாந்தலிங்கம், சவுந்தரநாயகி, சண்முகலிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனரும், சுருதி, துர்கா, கிருஷ்ணா, விஸ்ணு, துளசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 8911 woodbine Avenue இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் இன்று (15.01.2018) திங்கட்கிழமை மாலை 5 மணிமுதல் 9 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (16.01.2018) செவ்வாய்க்கிழமை 10 மணிமுதல் 2 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 12492 woodbine Avenue இல் அமைந்துள்ள Highland Hills Crematorium Gomley on தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மருமகன் - மகள் (வதனி) - 905 948 1620, 647 460 1900,**
**மருமகன் - மகள் (வக்சலா) - 647 760 6218**

(CS/12909)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் செல்வி **குகநாகதாசன் சாந்திநிதி** அவர்களின் அன்புத் தாயார்

### தில்லைநாயகி குகநாகதாசன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**யாழ்ப்பாணம்.**

(AJA 12915)(10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 . 03 . 1933



மறைவு
25 . 01 . 2017

### திருமதி பாக்கியம் அருமைநாயகம்

திதி : திரயோதசி (14.01.2018)

அம்மாவே தெய்வம் உலகினிலே.
அவர் இல்லாமல் இவ்வுலகில் ஒன்றுமே இல்லை.

என்றும் அம்மாவின் நினைவுகளுடன்......

மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம் ,யாழ்ப்பாணம்.

(CS/12906)(16.17)

பிள்ளைகள்

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் இரவீந்திரன் (S.N.ரவி)



மீசாலை, ஐயாகடையடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் இரவீந்திரன் 11.01.2018 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை -சத்தியபாமா தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதியின் அன்புக் கணவரும், மீரா, கபிலன், வர்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவர்ணா (Lakeland Inter American School - Colombo) அன்புச் சகோதரரும், கஜன் (கனடா), Dr. பாஜினி (எஹலியகொட) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

+1647 914 9799

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகம் இரத்தினப்பத்தர் ஐயா
(உரிமையாளர் - வதனி ஜுவல்லரி, கொடிகாமம், வதனி ஜுவல்லரி, சாவகச்சேரி)

மண்ணில் 19.01.1917
விண்ணகம் 23.02.2010

திதி:- சதுர்த்தசி




### சண்முகலிங்கம் லதுர்ஜிகாந் (லது)
(உரிமையாளர் - வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)

மண்ணில் 16.08.1976
விண்ணகம் 14.01.2010

திதி:- சதுர்த்தசி

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
எட்டு ஆண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்துவிட்டான் - நாங்களோ
ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்

**குடும்பத்தினர்.**
பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி



### இராமலிங்கம் முருகேசு

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும், திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் முருகேசு நேற்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிநாதர், கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், கிரிஜா, வனஜா, சுரேஸ்குமார், அனுஷா, ரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராசலிங்கம், மதியழகன், கலைவதனி, வாசுதேவன், கிட்ணசீலன் ஆகியோரின் அன்பு மாமனும், நிருஷ், அபிநயா, பிரித்திக்கா, கிருத்திகரன், மயூரா, சந்தோஷியா, யாதவன், மதுஷன், நிக்ஷாயினி, நிலுக்ஷாயினி, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னாலை வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

071 856 5679

(c.12914)(13.17)

facebook

Search for people, places and things



## வில்லனின் ஜோடியாக 'பிக் பாஸ்' ஓவியா

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் உலகப் பிரபல்யம் பெற்ற முன்னணி நடிகை ஓவியா, ஒரு படத்தில் வில்லனின் ஜோடியாக நடிக்கவுள்ளார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியின் மூலம் ஓவியாவை ஏகப் பட்ட வாய்ப்புக்கள் தேடிவந்தன. எனினும் பெரும் பாலான படங்களை ஓவியா தவிர்த்து வந்தார். ராகவா லோறன்சுடன் 'காஞ்சனா3' படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் பிறிதொரு படத்தில் ஓவியா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் என்றும் அந்தப் படத்தில் வில்லனுக்கு ஜோடியாக ஓவியா நடிக்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**எதிரி எம்மைவிட பலம் குறைந்தவன் என்றால் அவனை வீழ்த்த நினைப்பது கோழைத்தனம். திருத்த நினைப்பதுதான் வீரம்.**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயல்களில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்ற வேண்டும்.

**இடபம்:** குடும்பத்திலுள்ள சிரமமான சூழ்நிலை மாறும். எண்ணத்திலும், செயலிலும் புத்துணர்வு உண்டாகும். தொழிலில் தாராள இலாபம் இருக்கும்.

**மிதுனம்:** சிக்கலான பணி கூட எளிதாக நிறைவேறும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**கடகம்:** முரண்பட்டவர்களிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள நிலுவைப் பணியை நிறைவேற்றுவதால் சிரமம் குறையும்.

**சிங்கம்:** சுறுசுறுப்புடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபார நடைமுறையில் குளறுபடி வந்து சரியாகும். இலாபம் சுமார். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்கலாம்.

**கன்னி:** உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். இலாபம் உயரும். சமூகத்தில் கூடுதல் கௌரவம் பெறுவீர்கள். உபரியாக பண வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** மற்றவர் கருத்தை பொருட்படுத்த வேண்டாம். அதிக உழைப்பு தொழில் வியாபாரத்தில் புதிய வளர்ச்சியை உண்டாக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:** எதிரிகளிடம் விலகுவது மிக நல்லது. தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

**தனுசு:** குடும்பப் பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**மகரம்:** பேச்சில் வசீகரத் தன்மை அதிகரிக்கும். புதியவரின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில் வியாபாரம் செழித்து வளரும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும். நல்லோரின் நட்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபாரம் வளர தேவையான நவீன மாற்றம் செய்வீர்கள்.

**மீனம்:** வெகுநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

சந்தோசமா பொங்கி வந்தால் அது பொங்கல்...



கோபமா பொங்கி வந்தால் அது பெண்கள்

பொங்கலை ரொம்ப நேரமா கிளர்றீங்களே, பொங்கல் வேகலையோ...?



இல்லைங்க... செல்பி எடுக்கிறப்போ மொபைல் உள்ள விழுந்திருச்சு அதைத்தான் தேடிட்டிருந்தேன்.

தியாகிகள் பிறப்பதில்லை



திருமணம் மூலமாக உருவாக்கப்படுகிறார்கள்

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 2 | 1 | | | 8 | | 7 |
| | | 9 | | | | 1 | | |
| 4 | | | | | | 2 | | |
| | | 3 | | | 7 | | 2 | 1 |
| | | | | 3 | | | | |
| 2 | 9 | 4 | | | 5 | | | |
| 5 | 8 | | 7 | | | | | |
| | | | | | | 3 | | 5 |
| | | | | | | | 7 | |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 1 | 8 | 2 | 5 | 7 | 6 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 6 | 3 | 1 | 8 |
| 7 | 6 | 8 | 3 | 1 | 9 | 4 | 5 | 2 |
| 9 | 3 | 7 | 2 | 5 | 4 | 1 | 8 | 6 |
| 6 | 5 | 4 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 |
| 8 | 1 | 2 | 7 | 6 | 3 | 9 | 4 | 5 |
| 2 | 7 | 3 | 6 | 8 | 1 | 5 | 9 | 4 |
| 4 | 9 | 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 1 |
| 1 | 8 | 5 | 9 | 4 | 7 | 6 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

### காதல் மயக்கத்தில்


என் உயிரே நீதான்
ஏன் எனக்கு போன் பண்ணலை
நீ என் ரசகுல்லா
என்னைக் கல்யாணம் பண்ணிப்பீங்களா?
உங்களைத் தவிர வேற யாரையும் நான்
ஏறெடுத்துப் பார்த்ததில்லை
உங்க நினைப்பில என்னால் தூங்க முடியல
உங்களைப் பாக்கணும் போல இருக்கு

### கல்யாணமான சில வருடங்களில்

என் உயிரை எடுக்கிறதே நீதான்
ஏன் அடிக்கடி போன்போட்டு நொய் நொய்ங்கிறே..
நீ ஒரு டிராகுலா
உனக்கெல்லாம் கல்யாணம் ஒரு கேடு
சாம்பாரில ஒழுங்கா உப்பு போடுறியா...?
மூஞ்சியப் பார்த்தாலே பத்திக்கிட்டு வருது....

# நல்ல பெயரை வாங்க வேண்டும்

ஓர் ஊரில் மணியம் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் தான் எப்படியாவது மற்ற வர்களிடம் நல்லவன் என்ற பெயர் பெற வேண்டும் என விரும்பினான். ஒருநாள் அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்திருந்தார். அவர் அந்த ஊரில் சில நாள்கள் தங்கி ஆன்மிகச் சொற்பொழிவுகளை ஆற்றி வந்தார். மணியம் தினமும் அவர் சொற் பொழிவுகளைச் சென்று கேட்பது வழக்கம். அவ ரின் அருளொழுகும் முகமும், இனிமையான பார்வையும், அன்பான சொற்களும் அவனின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.



ஒருநாள் துறவியின் திருவடிகளில் விழுந்து வணங்கிய அவன் "ஐயா! நான் நல்லவன் என்று பெயர் பெற விரும்புகிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் அதை நான் செய்யச் சித்தமாக இருக்கிறேன். எனக்கு நல்வழி காட் டுங்கள்" என்று மிகப் பணிவுடன் வேண்டி னான்.

"இளைஞனே! எழுந் திரு உனக்கு நல்ல நாவும், நல்ல செவியும், நல்ல கண்களும், நல்ல உள்ளமும் இருக்குமானால் நீ எளிதில் நல்லவன் என்று பெயர் பெறலாம்" என்று அன்புடன் கூறினார். அவர் கூறியது கேட்டு குழப் பம் அடைந்த அவன் "ஐயா! நீங்கள் சொல்வது எனக்கு விளக்கவில்லையே. நல்ல நா, நல்ல செவி, நல்ல கண், நல்ல உள்ளம் என்பவை எப்படி இருக்க வேண்டும்? இவை சுத்தமாக இருக்க வேண்டும் என்பதையா குறிப்பிடுகிறீர்கள்?" அப்படியானால் நான் தினமும் காலை மாலை யென்று என் பற்களையும், நாக்கை யும், பற்பசை, பற்தூரிகை கொண்டு சுத்தம் செய்கிறேன். தினமும் குளிக் கும் போது என் செவிகளையும் கண்களையும் கழுவிச் சுத்தப்படுத்துகிறேன். நல்ல உள்ளம் என் றீர்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை.

நல்ல உள்ளம் என்பது எப்படி இருக்கும் என்பதைச் சற்று விளக்கமாகக் கூறுங்கள் என்று பணிவுடன் கேட்டான். அதற்கு அவர் "இளைஞனே! நல்ல நா, நல்ல கண், நல்ல செவி என்பவற்றுக்குக் கூட நீ கூறியது போல புறச்சுத்தம் அதாவது உடற்சுத்தம் என்பதுதான் பொருளல்ல.

இனிமையான சொற்களை எப்பொழுதும் பேசு கின்ற நாவே நல்ல நா. பிறரைப் பற்றி இன் னொருவர் புறங்கூறு வதைக் காது கொடுத் துக் கேட்காத செவியே நல்ல செவி. தீயதான, பார்க்கத்தகாத காட்சி களை அல்லது தனக்கு உரிமையில் லாத பிறரது பொருள் ஒன்றை ஆசை யோடு நோக்காத கண்களே நல்ல கண்கள். அத்தோடு எவரிடமும் பகைமை பாராட்டாது அன்பாகவும், ஒற்றுமையாகவும் பழ கும் உள்ளமே நல்ல உள்ளம்" என்று விளக்கம் கொடுத்தார். அந்தத் துறவி. "ஐயா நீங்கள் சொன்ன வார்த்தைகளின் படி நடந்து நல்லவன் என்ற பெயர் எடுப்பேன்" எனக் கூறிச் சென்றான் அந்த இளைஞன்.



# பட்டிப் பொங்கல்

- பொங்கல் தினத்துக்கு அடுத்த நாளான இன்று பட்டிப் பொங் கல் கொண்டாடப்படுகிறது.
- இது மாட்டுப் பொங்கல், கன்றுப்பொங்கல் என்றும் அழைக் கப்படும்.
- மக்களின் அன்றாட வாழ்வோடு ஒன்றிப்போன பசுவுக்கும் உழவர்களின் விவசாயத்துக்கு பெரிதும் துணை புரியும் எருது, எருமைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக வீடு களில் இருக்கும் மாட்டுத் தொழுவங்களில் இந்தப் பொங்கல் நடைபெறும்.
- இன்று தொழுவங்கள் நன்கு சுத்தம் செய்யப்பட்டு கால் நடைகளை மஞ்சள் நீரினாலும் குளிப்பாட்டுவர்.
- மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளப்பான வர்ணம் பூசப்பட்டு கூரான கொம்புகளில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டப்படும்.
- மாடுகளின் கழுத்தில் தோலினாலான வார்ப்பட்டியில் சலங்கை கட்டி அழகு பார்க்கப்படும்.
- மாடுகளின் நெற்றிப் பொட்டில் திருநீறு பூசி மஞ்சள் குங்கு மங்களால் பொட்டிட்டு புதிய மூக்கணாங் கயிறு தாம்புக் கயிறு என்பன அணிவித்து மாடுகளைத் தயார் செய்வர்.
- உழவுக் கருவிகளில் கலப்பை உட்பட சகல வற்றையும் சுத்தம் செய்து சந்தனம் குங்குமம் இடுவர்.
- தாம்பாளத்தட்டுக்களில் தோட்டங்களில் விளைந்த பயிர் பச்சைத் தானியங்களோடு தேங்காய்ப் பூ, பழம், நாட்டுச் சக்கரை என்பவற்றை எடுத்து வைப்பர்.
- பின்னர் தொழுவத்தில் பொங்கல் பொங்கி தீபாராதனையும் காட்டப்படும்.
- பொங்கல் பொங்கி முடிந்ததும் இறைவழிபாட்டின் பின் பொங்கல் சாதம் பழம் என்பவற்றை பசு, காளை, எருமை, ஆடுகளுக்குக் கொடுப்பார்கள்.
- இந்தத்தினத்தில் மாலையில் மைதானங்களில் காளை அடக்குதல் (ஜல்லிக்கட்டு)மாட்டு வண்டிச்சவாரி போன்ற விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறும்.
- சிறுவர் இளைஞர் முதியோர் என அனைவரும் இவ்விளை யாட்டுக்களில் பங்குபற்றியும் கண்டுகளித்தும் மகிழ்வர்.



# பிராணிகளின் நற்பண்புகள்

எறும்பைப் பார்த்துக் கற்றுக்கொள்
வரிசையில் செல்லும் பழக்கத்தை

காக்கையைப் பார்த்துக் கற்றுக்கொள்
கூடி உண்ணும் பண்பதனை

நாயைப் பார்த்துக் கற்றுக்கொள்
நன்றி என்னும் நற்பண்பை

தேனியைப் பார்த்துக் கற்றுக்கொள்
சேமித்து வைக்கும் பழக்கத்தை

சேவலைப் பார்த்துக் கற்றுக்கொள்
சீக்கிரம் எழுகின்ற பழக்கத்தை

சிங்கத்தைப் பார்த்துக் கற்றுக்கொள்
வீரம் வாழ்வில் வேண்டுமென்று

எருமையைப் பார்த்துக் கற்றுக்கொள்
பொறுமை என்னும் பொற்பண்பை

சிலந்தியைப் பார்த்துக் கற்றுக்கொள்
விடாமுயற்சி என்னும் நற்பண்பை

மாட்டைப் பார்த்துக் கற்றுக்கொள்
தலைவனைப் பின்பற்றும் அரிய பண்பை

# விடுகதைகள்

1. வட்டமாய் இருக்கும் ஆழமாய் இருக்கும், எட்டிப் பார்த்தால் உரு வம் தெரியும் அது என்ன?
2. உடலை உருக்கி வேலை செய் வான். அவன் யார்?
3. உருவத்தைக் காட்டும் கண்ணாடி யும் அல்ல; செய்வதைச் செய்யும் குரங்கும் அல்ல. அது என்ன?
4. கொண்டை அணிந்த ஆண் பிள்ளை. கூவி அழைத்தால் ஊரே விழிக்கும். அது என்ன?

1. கிணறு 2.மெழுகுவர்த்தி
3. நிழல் 4. சேவல்

# அகர வரிசையில் சொற்களை எழுதுவோம்

அன்பு
எலி
ஓலை
ஐந்து
ஒன்று
ஈட்டி
ஔவை
இலை
ஆமை
ஊர்
உப்பு
ஏணி

1. --------------------
2. --------------------
3. --------------------
4. --------------------
5. --------------------
6. --------------------
7. --------------------
8. --------------------
9. --------------------
10. --------------------
11. --------------------
12. --------------------



இரு படங்களுக்கும் இடையே 10 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்



# சரியான விடையுள்ள கட்டத்தை வர்ணம் தீட்டுவோம்

1. ஆமை | சுறா நீரிலும் நிலத்திலும் வாழும்.
2. புலி | பூனை காட்டில் வாழும்.
3. மீன் | கொக்கு நீரில் வாழும்.
4. சிங்கம் | பசு குகையில் வாழும்.
5. ஒட்டகம் | கரடி பாலை வனத்தில் வாழும்.

# மரபணு கீற்றுக்கள்

## உடல் உயிர்மங்கள் கொள்ளும் ஆதாரம்

பூங்குழலி

குழந்தைகள் எவ்வாறான தோற்றமுடையவராக இருப்பர் என்பது உடல் உயிர்மங்களில் (body Cells) உள்ள 46 இணைமரபுக் கீற்றுகளை (genes) அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். இந்த இணை மரபுக் கீற்றுகளில் பாதியைத் தாயிடமிருந்தும் மற்றைய பாதியைத் தந்தையிடமிருந்தும் குழந்தைகள் பெற்றுக்கொள்கின்றனர். இவற்றுள் சில இணை மரபுக் கீற்றுகளே குழந்தையின் கண் நிறத்தை தீர்மா னிக்கின்றன.

எல்லாக் கண்களும் நீல உயிர்மங்களை உடையன. ஆனாலும் சிலர் வேறு நிறங்களுடைய உயிர்மங்களை உடையவராய் இருக்கின்றனர். இவர்களுடைய கண்கள் பச்சை, சாம்பல், பழுப்பு, செம்மை கலந்த பழுப்பு (hazel) ஆகிய நிறங்களை உடையனவாய் இருக்கின்றன.

குழந்தைகள் எல்லோரும் நீலக்கண்களையே கொண்டிருப்பர். ஏனெனில் பிற உயிர்மங்கள் ஏதாவது இருக்கும் சந்தர்ப்பங்களிலே அந்த உயிர்ம்ங்கள் குழந்தைகள் இரண்டு வயதை அடையும் வரை வளர்ச்சி அடைவதில்லை. சில சந்தர்ப்பங்களிலே கண்களின் ஒரு பகுதி நீலமாகவும் மற்றைய பகுதி பழுப்பு அல்லது பச்சை நிறமாகவும் இருக்கும்.

அவர்களுடைய பாதிக்கண் வழக்கமான நீல நிறங்களைக் கொண்டமைந்தும், மற்றைய பாதி பிற நிறங்களைக் கொண்டதாயும் இருப்பதே இதற்கான காரணங்களாகச் சொல்லப்படுகிறது.

இரண்டு நீலக் கண்களைக் கொண்டுள்ளோர்க்கு நீலக்கண்கள் கொண்ட குழந்தைகள் பிறப்பர்.

ஏனெனில் நீல உயிர்ம இணைமரபுக் கீற்றுகளே (Blue cell genes) அங்குக் கடத்தப்படுகின்றன.

ஆனால் பெற்றோருள் ஒருவர் பழுப்பு நிறமும் மற்றையவர் நீல நிறம் உடையவராகவும் இருந்தால் நீலமும் பழுப்பும் கலந்த மரபுரிமை தோற்றமுறும். மரபுக் கீற்றுகளில் நீலநிறங்களை ஆதிக்கம் செலுத்தக் கூடிய அளவுக்கு பழுப்பு நிறங்கள் இருந்தாலே இரு நிறங்கொண்ட கண்களை இக்குழந்தைகள் உடையதாய் அமையும். இரண்டு பழுப்பு நிறக்கண்கள் கொண்ட பெற்றோர்களாயினும் போதுமான அளவு பழுப்பு நிறங் கொண்ட இணை மரபுக் கீற்றுகள் கடத்தப்படவில்லையானால் பழுப்பு நிறக்கண்கள் கொண்ட குழந்தைகள் பிறக்காதெனவும் போதுமான பழுப்பு நிற இணை மரபுக் கீற்றுகள் கடத்தப்பட்டாலே பழுப்பு நிறக் கண்கள் கொண்ட குழந்தைகள் பிறக்குமெனவும் ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர்.


கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 241
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.01.14
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 81,589,476/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
J 13 28 37 68
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 137
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.01.14
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,025,420/-
வெற்றி இலக்கங்கள்
05 39 46 64
ஆங்கில எழுத்து D
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Galaxy Star
வெற்றி வாரம் 229
திகதி 14.01.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
10 09 23 29 59
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2, 123, 652/-
2018.01.17 ஆம் திகதி புதன்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.01.2018
வெற்றி வாரம் 2237
வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
23 26 29 60
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 7,775,420/=
2018.01.16 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பண்ணைத் திட்டப் பணிப்பாளர்

**திரு. சு.சத்தியேந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்.

### திருமதி சரஸ்வதி சுந்தரலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி,**

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்.**

(Cs 31760,16,17)

## மரண அறிவித்தல்

### சிவஞானம் செந்தில்நாதன்



மருதனார் மடத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் செந்தில் நாதன் கடந்த (13.01.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் அம்பிகாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் மிதுளா (ஆசிரியை, யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் அபிஷ்காவின் (யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்) அன்புத் தந்தையும் இராமநாதன், ஏகாம்பரநாதன், நகுலேஸ்வரி ஆகியுாரின் அன்புச் சகோதரனும் சுரேஸ்குமார் (சுவிஸ்), றமேஸ்குமார் (ஆஸ்திரேலியா), சியாமளா (அதிபர்,யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆதித்தியா, திவாகரி ஆகியோரின் சித்தப்பாவும் சுஸ்மிதன், சுருதி, மொழியவள் ஆகியோரின் மாமனும் நிபுணாஷின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2018) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**நுணாவில் மத்தி, சாவகச்சேரி** (31764/15/16)

## மரண அறிவித்தல்

### சிங்கராஜா பயஸ் செல்வநாயகம்



பிறப்பு 13.04.1932 இறப்பு 14.01.2018

பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜா பயஸ் செல்வநாயகம் நேற்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்க ராஜா அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை ஞானரட்ணம் தம்பதியரின் அன்புமருமகனும் மேரிதிரேசாவின் அன்புக்கணவரும் சிங்கராஜா ஜோசப்அருள்நாயகம் அவர்களின் சகோதரரும் பாமலா சுரேந்திரன் (ஆசிரியை, மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம்), ஜெயபாலன் (உரிமையாளர், ஜெயா ஸ்ரோர்ஸ் பத்தாவத்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நோபிள் சுரேந்திரன் (பேராசிரியர், விலங்கியல்துறை யாழ். பல்கலைக்கழகம்), திருமதி யமுனாகுமாரி ஜெயபாலன் (ஆசிரியர், வ/ இலங்கைத்திருச்சபை தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மனோன்மரியா, மெலினா மதுரி (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புப்பேரனும் அருட்திரு ஜெயசீலன் (விரிவுரையாளர், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி) அவர்களின் பெரியதந்தையும் அருட்சகோதரி வேஜி (திருச்சிலுவை கன்னியர்மடம் கொழும்புத்துறை), அருட்திரு எட்வினாதன் (பகுதித்தலைவர், புனித பத்திரிசிரியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (16.01.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு சேந்தாங்குளம் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித ஆரோக்கியநாதர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.** (31765) (08

**தகவல்: குடும்பத்தினர் 021 225 0445**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி மிதுளா செந்தில்நாதன்**

அவர்களின் அன்புக்கணவர்

### சிவஞானம் செந்தில்நாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**ஆசிரிய நலன்புரிசங்கம்,**

**யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, மிருசுவில்.**

(c31758)(17,8)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பிறேமா வெற்றிவேல்

குப்பிளான் காளிகோயிலடியை பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமா வெற்றிவேல் நேற்று (14.01.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (இளைப்பாறிய அதிபர்) இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் (இளைப்பாறிய அதிபர்) கணேஸ்வரி தம்பதியினரின் அன்புமருமகளும் வெற்றிவேல் (சோதிடர்) அவர்களின் பாசமிகு மனைவியும் தயாளினியின் அன்புத் தாயாரும் கேதனனின் அன்பு மாமியும் திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம், மகேஸ்வரமூர்த்தி, கெங்காதரன், காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் திருமதி அசோகவதி பாலச்சந்திரன், குகனேசன், ரஞ்சன் ஆகியோரின் சகோதரியும் திருமதி சுந்தரவதனா தர்மலிங்கம், ஜெயசுந்தரம், சண்முகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மஞ்சத்தடி, இணுவில்.** (Cs 12920,16,17) **தகவல்: குடும்பத்தினர்.**



### அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ் (சிறில்)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ் (சிறில்) கடந்த (11.01.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ரகுநாதன் மற்றும் பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், றுத்சாந்தினியின் அன்புக் கணவரும், கறோலினி ஷிறோமா, நொய்லினி பிரியங்கா, ரிசோர்குமார், தானியா, சொலங்கா, தாரணி ஆகியோரின் அன்புத்தந்தையும், திவாகரன், மொர்லின் மனோஜயன் ஆகியோரின் அன்பு மாமனும் மிதுன், சேயோன், இவானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் மேரிறாணி, விமலதாஸ், மேரி ஜெசிந்தா, செபரெட்ணதாஸ், யூலியன் தேவதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 19.01.2018 அன்று 55 RUE GINCE MONTREAL QC, H4N 1J7 இல் அமைந்துள்ள AETERNA FUNERAL HOME இல் மாலை 3 மணியிலிருந்து இரவு 9 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 20.01.2018 முற்பகல் 9.30 மணியிலிருந்து 12 மணிவரை 1375 RUG POIRIER இல் அமைந்துள்ள SAINT LAURENT CHURCH இல் ஆராதனை நடைபெற்றுப் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனடா. தகவல்: அ.செபரெட்ணதாஸ் 078 914 0975**

தமிழ்நம்பி


# பங்குச் சந்தையில் ஏற்ற இறக்கங்கள்

## சந்தை அசைவின் போக்கினை இனங்காணுதல்

பங்குச் சந்தை நிலையில்லாமல் மேலும் கீழும் ஊசலாடும் தன்மையுடையது. அந்த ஊசலாட்டமே சந்தையின் உயிர்த்துடிப்பு எனச் சொல்லப்படுகிறது. இந்த ஏற்ற இறக்கங்களே பங்குச்சந்தையின் மிக முக்கிய பண்பாக கொள்ளப்படுகிறது. ஆக, இவ்வாறான ஏற்ற இறக்கங்கள் எவ்வாறான அடிப்படைகளின் கீழ் உருவாகின்றன என்பது பற்றி தெரிந்துகொள்ளுதல் நன்று. அவை பின்வருமாறு அமையப்பெறும்.

- நாட்டில் நிலவும் அரசியல் அல்லது பொருளாதாரச் சூழ்நிலைகள் (நிதி நிலை அறிக்கை வெளியிடப்படுதல், வரவு செலவுத்திட்டம்).
- மத்திய வங்கி அல்லது நிதி அமைச்சகம் கொண்டுவரும் சில நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அல்லது சில விதிமுறைகள் விலக்கப்படுதல் குறிப்பாக, தொழிற் கொள்கை குறித்த அறிவிப்புகள், வெளிநாட்டு முதலீட்டுக்கான சட்ட திட்ட வரவுகள் முதலானவற்றை குறிப்பிட முடியும்.
- உலகச் சந்தையில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக, அமெரிக்க வங்கிகளின் மோசமான நிலமை மற்றும் உலகப் பொருளாதாரத் தொய்வு.
- நிறுவனங்களின் காலாண்டு அல்லது ஆண்டு அறிக்கைகள் வெளியிடப்படுதல் மற்றும் அந்த நிறுவனங்கள் குறித்த சில தகவல்கள்.
- சில சந்தர்ப்பங்களில் எதிர்பாராத, பொய்யான வதந்திகள் கூட பங்குச் சந்தை நிலவரத்தை பாதிக்கின்றன. யூக வியாபாரம் செய்வோரில் சிலர் இத்தகைய தவறான தகவல்களை வேண்டுமென்றே பரப்பி இலாபம் காண முயல்வதாகவும் சில சமயங்களில் குற்றச்சாட்டு எழுகிறது.

ஆம், "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பது போல திறமையான, அறிவுக் கூர்மையும், சமயத்துக்குத் தக்கபடி செயற்படும் வேகமும் உள்ள முதலீட்டாளர்கள், எத்தகைய ஊசலாட்டத்திலும் இலாபம் சம்பாதித்து விடுவர். குறைந்தபட்சம் நட்டமடையாமல் தப்பித்துக் கொள்வர். ஆனால், சந்தை மிக அதிகமாக ஊசலாடிக்கொண்டே இருக்குமானால், சராசரி முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் அதில் ஈடுபடமாட்டார்கள் என்பது ஒரு குறையாக காணப்படுகிறது.



**காளையும் கரடியும்**

பங்குச் சந்தையில் பங்குகளின் விலை ஏறுமுகமாக இருப்பின் அதைக் 'காளைச் சந்தை' (Bull Markeவ)எனவும், வீழ்ச்சியடையும்பொழுது 'கரடிச் சந்தை' (Bear Market) எனவும் கூறுவது வழக்கம். ஏனெனில் காளை வேகமாகத்தாக்கக் கூடியது என்றும், கரடி மந்தமானது என்றும் கருதப் படுகிறது. எனவே, பங்கு விற்பனை சூடு பிடித்து, விலைகள் ஏறுகையில் அது காளைச் சந்தை எனவும், பங்குகளின் விலைகள் சரிந்து, விற்பனை மந்தமாகும்பொழுது அது கரடிச் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் நோக்கின், சிலர் "Bulle speculative" என்ற பிரஞ்சு வார்த்தையில் இருந்து தோன்றியது எனவும், லண்டனில் கரடித்தோல்களை விற்பவர்கள், கரடிகளைப் பிடிப்பதற்கு முன்பே அதற்கு விலை பேசிவிடுவது வழக்கம் என்பதால், 'short selling' செயற்பாட்டினைக் குறிக்க 'கரடிச் சந்தை' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது எனவும், பொதுவாக சந்தை சரியும்பொழுதுதான் 'short Selling' செயற்பாட்டினை மேற்கொள்வது வழக்கம் என்பதால், சந்தையின் தன்மை வீழ்ச்சியடையும்பொழுது அது 'கரடிச் சந்தை' என வழங்கப்படுகிறது எனவும் கருதுகின்றனர்.

பொதுவாக, பணவீக்கம் குறைவாக வும், நாட்டின் பொருளாதாரம் சீராகவும், உற்பத்தி உயர்ந்தும் இருக்கும்பொழுது காளைச்சந்தையின் போக்கு நிலவுகிறது.

இதற்கு நேரெதிரானது கரடிச் சந்தையின் போக்கு. இப்போக்கு நிலவுகையில் நாட்டில் வேலையின்மையும், பணவீக்கமும் காணப்படுகிறது.

“பங்குச் சந்தையில் பங்குகளின் விலை ஏறுமுகமாக இருப்பின் அதைக் 'காளைச் சந்தை' (Bull Market)எனவும், வீழ்ச்சியடையும்பொழுது 'கரடிச் சந்தை' (Bear Market) எனவும் கூறுவது வழக்கம். ஏனெனில் காளை வேகமாகத்தாக்கக் கூடியது என்றும், கரடி மந்தமானது என்றும் கருதப்படுகிறது. எனவே, பங்கு விற்பனை சூடு பிடித்து, விலைகள் ஏறுகையில் அது காளைச் சந்தை எனவும், பங்குகளின் விலைகள் சரிந்து, விற்பனை மந்தமாகும் பொழுது அது கரடிச் சந்தை எனவும் அழைக் கப் படுகிறது.”

**ஆலோசனை**

சந்தை எப்பொழுது ஏறும், எப்பொழுது சரியும் என்பதை சாதாரணமாக முதலீட்டாளர்கள் அறிவது கடினம். மென் மேலும் ஏறும் என்று நினைக்கும் பொழுது சரியத் தொடங்கும், சரிந்து கொண்டே போகும் என்று கணிக்கும் பொழுது திருப்பம் ஏற்பட்டு ஏறத்தொடங்கும்.

நீங்கள் ஒரு பங்கின் விலை ஏறும் என நினைத்து 200 ரூபா என ஆயிரம் பங்குகளை வாங்குவதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் வாங்கியபின் விலை சரிந்து 150 ரூபா ஆகி விடுகிறது. நீங்கள் அதை நட்டத்துக்கு விற்று விடுகிறீர்கள். மறுநாளே அது 240 ரூபாவுக்கு ஏறிவிடுகிறது. பலர் இது குறித்த அனுபவங்களைப் பெற்றிருப்பர்.

கரடிச் சந்தையில் பங்குகளை வாங்கி, காளைச் சந்தையில் விற்பதே புத்திசாலித் தனம். ஆனால், பெரும்பாலானவர்கள், சந்தை உயரும்பொழுது ஆர்வத்துடன் பங்குகளை வாங்குவர். சந்தை சரிவில் இருக்கும்பொழுது, பயந்துபோய் விற்றுவிடுவார்கள். இதனால் பெரும் நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆக, பின்வரும் விடயங்கள் குறித்து கரிசனை கொள்ள வேண்டும்.

- முதலீடு செய்ய விரும்பும் தொகை முழுவதையும் ஒரே சமயத்தில், ஒரே பங்கில் போடாதீர்கள்.
- வாங்கிய பங்கின் விலை இறங்கும்பொழுது மீண்டும் (150 ரூபா என்ற விலையில் ) நூறு அல்லது இரு நூறு பங்குகளை வாங்குங்கள்.
- இவ்வாறு பங்குகளின் விலை சரியும்பொழுது வாங்குவதை, 'அவறேயிங்' (Averaging) என்பர். விலை உயரும் போது, உங்களிடம் உள்ள பங்குகளை மொத்தமாக விற்பனை செய்யாதீர். பாதியை மட்டுமே' விற்பனை செய்யுங்கள். விலை மேலும் உயர்ந்தால், மீதியை விற்கலாம். குறைந்தால், இன்னும் கொஞ்சம் பங்குகள் வாங்குங்கள்.
- பங்காதாயம் தரும் நிறுவனங்களின் பங்குகளில் மட்டுமே முதலீடு செய்யவும். நட்டமான நிறுவனங்களின் பங்குகளை வாங்காதீர்கள்.
- அதிகளவான பணம் வைத்திருக்கிறீர்கள், துணிகரமான முதலீடுகளில் ஈடுபட விரும்புகிறீர்கள் எனில் மட்டுமே 'Z' வகை பங்குகளில் முதலீடு செய்யுங்கள். இல்லையெனில், சிறந்த தரமான நிறுவனங்களின் பங்குகளில் மட்டுமே முதலீடு செய்யவும்.
- பங்குச் சந்தை மிகுந்த மாற்றங்களுக்கு உட்படும் பொழுது, மிகவும் விழிப்புடன் சந்தை நிலவரத்தைக் கண்காணித்தல் நன்று.
- கரடிச் சந்தை நிலவும் தருணமே முதலீடு செய்யச் சிறந்த தருணம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- உயரச் செல்லும் 'ராட்டினச்சக்கரம்' (Giant wheel) கீழிறங்குவதும், கீழே உள்ள சக்கரம் மேலெழும்புவதும் இயற்கை. பங்குச் சந்தையும் அப்படித்தான். எனவே கரடிச்சந்தை நிலவரத்தின் பொழுது, பீதியடைந்து எல்லோரும் விற்கிறார்களே என்று நீங்களும் விற்க வேண்டாம். பொறுத்திருங்கள். முடிந்தால் மேலும் மேலும் நல்ல பங்குகளில் முதலீடு செய்யுங்கள்.

குறிப்பாக, அனைவரும் பின்பற்ற வேண்டிய விதி ஒன்று உண்டு. அது உங்கள் அனைத்து முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்கக் கூடாது என்பதுதான். பங்குச்சந்தை வணிகத்தில் ஈடுபடும் போது ஒரே பங்கிலோ, ஒரே விதமான தொழிற்றுறையிலோ உங்கள் பணத்தை முடக்காமல், பல விதப்பங்குகளிலும் பகிர்ந்து கொள்வது உங்கள் முதலீட்டை சந்தையின் ஏற்றத் தாழ்வு காரணமாக இழக்கும் அபாயத்திலிருந்து பாதுகாத்துக்கொள்கிறது.



## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 100 | 50 |
| கத்தரி | 140 | 200 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 35 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 200 | 120 | 120 | 160 |
| பாகல் | 270 | 240 | 300 | 200 | 250 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 130 | 140 | 140 |
| சி.வெங்காயம் | 300 | 350 | 250 | 260 | 160 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 60 |
| தக்காளி | 100 | 150 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 70 | 60 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 40 |
| பொன்னாங்கானி | 40 | 40 | 40 | 50 | 30 |
| ப.மிளகாய் | 160 | 200 | 200 | 160 | 200 |
| புடோல் | 100 | 70 | 80 | 100 | 80 |
| கோவா | 80 | 100 | 50 | 70 | 80 |
| வெண்டி | 120 | 100 | 140 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 180 | 170 | 240 | 180 |
| லீக்ஸ் | 200 | 240 | 180 | 240 | 200 |
| தேங்காய் | 85 | 75 | 90 | 100 | 70 |
| உ.கிழங்கு | 60 | 60 | 60 | 70 | 70 |
| தேசிக்காய் | 60 | 40 | 70 | 40 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 60 | 20 | 20 |
| கறிமிளகாய் | 270 | 250 | 200 | 200 | 280 |
| கரட் | 180 | 150 | 120 | 140 | 160 |
| முருங்கைக்காய் | - | - | - | - | - |

## அரிசி மா, கீரை ரொட்டி செய்வது எப்படி

**தேவையான பொருள்கள்**
அரிசி மா - கால் கிலோ
கீரை - ஒரு கட்டு
வெங்காயம் - 1
மிளகுத் தூள் - தேவையான அளவு
ப.மிளகாய் - 1
மா - மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை**
கீரையை நன்றாகச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
ப.மிளகாய், வெங்காயத்தை பொடியாக நறுக்கி கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் அரிசி மா, மைதா, நறுக்கிய கீரை, வெங்காயம், மிளகுத் தூள், ப.மிளகாய், உப்புடன் தண்ணீர் விட்டு சப்பாத்தி மா பதத்தில் நன்கு பிசைந்து கொள்ளவும்.



பிசைந்த மாவை சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து வைத்துக் கொள்ளவும்.
அவற்றை சப்பாத்திக் கல்லில் தேய்த்து, தோசைக்கல்லில் போட்டு, இருபுறமும் கொஞ்சமாக எண்ணெய் விட்டு ரொட்டிகளாகச் சுட்டு எடுக்கவும்.
அரிசி மா கீரை ரொட்டி தயார்.


## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 500 | 500 | 500 |
| கணவாய் | 600 | 900 | 800 | 1000 |
| பாரை | 500 | 600 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 300 | 300 | 400 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 100 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 200 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 250 | 250 | 250 | – |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 200 | 500 | 400 |
| வாளை | 150 | 200 | 300 | – |

## புழுங்கல் அரிசியில் சத்துக்கள் அதிகம்

சமையல் அறையில் இருந்து எழுகின்ற சோற்றின் மணம், தமிழர்களின் வாழ்க்கையோடு கலந்தது. . அரிசி வேகும்போது எழும்மணம்இல்லாவிட்டால், அந்தவீடுமுடங்கிக்கிடப்பதுபோல் தோன்றும்.
நெல்லை வேகவைத்து தயார் செய்யும் புழுங்கல் அரிசியில் சத்துக்கள் அதிகம். நெல்லில் இருக்கும் சத்துக்கள் அது வேகும் போது உள்ளே இருக்கும் அரிசியில் சேருகிறது. வேகவைக்காமல் தயார் செய்யும் பச்சை அரிசியும் தனிச் சுவை கொண்டதாக இருக்கிறது. அரிசியின் நீளம், வேகும்தன்மை, மணம், சுவை போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு அதனுடைய தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது.



பழைய நெல்லில் இருந்து எடுக்கும் அரிசிக்கும், புதிய நெல்லில் இருந்து பெறும் அரிசிக்கும் வித்தியாசம் இருக்கிறது. பழைய நெல் அரிசிக்கு விலை அதிகம். அதிக கால பழக்கமுள்ள நெல்லில் சத்து அதிகம் இருக்கிறது. அதனால் அதிக காலம்கொண்ட நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியை ஆயுள் வேத சிகிச்சையில் மருந்துபோல் பயன்படுத்துகிறார்கள். பழைய அரிசி வேகுவதற்கு சற்று தாமதமாகும். ஆனால் சாம்பார், ரசம் போன்றவைகளுக்கு அது அதிக ருசி தரும்.
பச்சை அரிசியை பெரும்பாலும் மா தயாரிக்க பயன்படுத்துகிறார்கள். பச்சை அரிசி சாதமும் பலருக்கு விருப்பமானதாக இருக்கிறது. ஒட்டாத அளவில் அந்த சாதம் இருக்கும்.
" மினுக்கப்பட்ட வெள்ளை அரிசியை தினமும் ஒரு கோப்பை அளவுக்கு சாப்பிட்டு வருகிறவர்களிடம் சர்க்கரை நோய்க்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த மாதிரியான குடும்ப வகையை சார்ந்தவர்களாக இருந்தாலும் இதில் விதிவிலக்கில்லை" என்று குறிப்பிடுகிறது அந்த ஆய்வு.
தற்போதைய அரிசி வகைகளில் சத்துக்கள் குறைந்து கொண்டே வருவதாக முன்னணி நிறுவனம் ஒன்றின் ஆய்வு தெரிவிக்கிறது. அரிசியில் மாமிசம், புரதம், கொழுப்பு போன்றவை அதிகரித்துள்ளன. விற்றமின் பி, இரும்பு, மங்கனீசு, சிங்க் ஆகியவை குன்றவதாக ஆய்வுத் தகவல் சொல்கிறது.
நல்ல அரிசி என்று சொல்லப்படுவது நாட்டு ரக நெல்லில் இருந்து எடுக்கப் படுவது. அது இயற்கையான உரங்களைப் பயன்படுத்தி விளை விக்கப் பட்டதாகவும் இருக்கவேண்டும்.
ஒவ்வொரு வகை விதையும், ஒவ்வொரு விதத்தில் சத்துக்கள் கொண்டதாக இருந்தன. 160 வகைகளில் 68 வகைகளில் 20 மில்லி கிராமுக்கு அதிகமாக இரும்புச் சத்து இருப்பதாக தெரியவந்தது. இந்தியாவில் நிறைய குழந்தைகள் இரும்புச் சத்து குறைபாட்டுடன் இருப்பது இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்க விஷயமாகும். அரிசியின் தவிட்டில்தான் நார்ச்சத்து, விற்றமின் பி காம்ப்ளக்ஸ், விற்றமின் ஈ போன்றவை உள்ளன. அதனால் தவிட்டுடன் உள்ள அரிசியே சிறந்தது.
சர்க்கரை நோய் இருப்பவர்கள் தவிட்டுடன் உள்ள அரிசியையே பயன்படுத்தவேண்டும். சர்க்கரை நோயாளிகள் தவிடு இல்லாத அரிசியை சாப்பிடும் போது அவர்கள் உடலில் க்ளைசமிக் இன்டக்ஸ் அதிகரிக்கும். இது நல்லதல்ல. சிவப்பு அரிசியாக இருந்தாலும், வெள்ளை அரிசியாக இருந்தாலும் மினுக்கப்பட்டால் அதில் இருக்கும் தவிடு நீங்கிவிடும். அளவோடு சாப்பிட்டால் அரிசி உணவும் நல்லதே!

## நீண்ட நேரம் உடற்பயிற்சி செய்தால் உடல் நிறை குறையுமா?

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடற்பயிற்சி அத்தியாவசியமானது. உடல் நிறையைக் குறைக்க, உடலில் படிந்துள்ள கொழுப்பை எரிக்க, தேவையற்ற கொழுப்பு உடலில் தேங்கிவிடாமல் செய்ய உடற்பயிற்சி அவசியமாகிறது.
உடற்பயிற்சி பற்றி பல்வேறு நம்பிக்கைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை மூடநம்பிக்கை கள். நீண்ட நேரம் கடுமையாக உடற்பயிற்சி செய்தால் உடல் நிறை குறையும் என்பது பலரது நம்பிக்கையாக உள்ளது. இது குறித்து விரிவாகப் பார்க்கலாம்.
ஒவ்வோர் உடற்பயிற்சிக்கும் நன்மைகளும் உண்டு. பக்கவிளைவுகளும் உண்டு. உதாரணமாக, ஏரோபிக் பயிற்சிகளால் கொழுப்பு மட்டும் குறையும். நாம் உண்ணும் உணவின் மூலம் ஆயிரத்து 200 கலோரி கிடைக்கிறது. உடற்பயிற்சியால் ஆயிரத்து 400 கலோரி எரிக்கப்படுகிறது என வைத்துக்கொள்வோம். இப்போது உணவிலிருந்து கிடைக்கும் கலோரியின் அளவை விட எரிக்கப்படும் கலோரியின் அளவு அதிகமாக இருக்கும்போது, மீதி 200 கலோரி உடலில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்பிலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.
இதனால் உடலுக்குத் தேவையான கலோரிப் பற்றாக்குறை ஏற்படும். சக்தி மட்டம் குறையும். அதனால் நீண்ட நேரம் கடுமையாக உடற்பயிற்சி செய்யக் கூடாது.
உடற்பயிற்சிகள் மட்டுமின்றி, எமக்கான செயல்களை நாமே செய்து பழகுவது. இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் தவிர்ப்பது போன்று எமதுவாழ்க்கை முறையை மாற்றிக்கொள்வதன் மூலமும் உடல் நிறையைக் கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்ள முடியும். அலுவலகத்தில் உயர்த்திக்குப்(lift) பதிலாக படிக்கட்டுகளைப் பயன்படுத்தலாம். வீட்டுக்கு அருகில் உள்ள கடைகளுக்கு நடந்து சென்று பொருள்கள் வாங்கலாம்.




## இது புதுசு


பெண்களுக்கான கைப்பை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 2ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# தொடரை வென்றது நியூசிலாந்து அணி

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து அணி. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலிரு ஆட்டங்களிலும் நியூசிலாந்து அணி வெற்றிபெற்ற நிலையில் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 257 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வில்லியம்சன் 73 ஓட்டங்களையும், ரெய்லர் 52 ஓட்டங்களையும், கப்ரில் 45 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ரயீஸ், ஹசன் அலி இருவரும் தலா 3 இலக்குகளையும், சடப்கான் 2 இலக்குகளையும், அஸ்ரப் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 74 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து சுருண்டு படுதோல்வியடைந்தது. ரயீஸ் பெற்ற 16 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் போல்ட் 5 இலக்குகளையும், முன்றோ, பேர்குசன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)





# ஆஸ்திரேலிய அணிக்கு இங்கிலாந்து கவனிப்பு

## ஜேசன் றோய் அதிரடியாட்டம்

ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஜேசன் றோயின் அபார சதத்தின் உதவியுடன் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்று ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து அணி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது இங்கிலாந்து அணி. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 304 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பின்ஞ் சதம் கடந்தார். அவர் 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இலக்குகள் குறைவாகச் சரிக்கப்பட்டிருந்த நிலையில் 107 ஓட்டங்களுக்காக பின்ஞ் 119 பந்துகளை எதிர்கொண்டமை சற்று கூடுதல் நிதானமே. உண்மையில் 30 பந்துகள் குறைவாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும். அவரைவிட ஸ்ரொய்னிஸ் 60 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிளங்கட் 3 இலக்குகளையும், ரசிட் 2 இலக்குகளையும், வோக்ஸ், வூட், மொயின் அலி மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி றோய் மற்றும் ரூட் இருவரினதும் மிகச் சிறந்த ஆட்டத்தால் 7 பந்துகள் மீதமிருக்க 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான றோய் 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். 151 பந்துகளில் 16 பவுண்டரிகள், 5 சிக்சர்கள் அடங்கலாக இந்தப் பெறுபேற்றை அவர் எட்டியிருந்தார். ரூட் ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்களைச் சேர்த்தார். ரூட் மற்றும் றோய் இணை, இணைப்பாட்டமாக 221 ஓட்டங்களைப் பகிர்ந்தது. இந்த இணைப்பாட்டமே வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. பந்துவீச்சில் ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஸ்ரொய்னிஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஜேசன் றோய் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

## கெர்பர் மகுடம்


சிட்னி ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றார் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஏஞ்சலிக் கெர்பரும், ஆஸ்திரேலியாவின் அஷ்லெய்க் பேர்ட்டியும் பலப்பரீட்சை நடத்தினார்கள். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றார் கெர்பர். (ம)



## வேகப்பந்துவீச்சு ஆடுகளத்தில் சாதிக்கக்கூடியவர் அஸ்வின்

### பதான் நம்பிக்கை

வேகப்பந்துவீச்சுக்குரிய ஆடுகளங்களிலும் அஸ்வினால் சாதிக்க முடியும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் வீரர் பதான். இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை என்பதால் அங்கு சுழல்பந்து வீச்சாளரான அஸ்வின் பெரியளவில் சாதிக்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே இவ்வாறு தெரிவித்தார் பதான். (ம)



## தன்னைத்தானே நீக்க வேண்டும் அணித்தலைவர் விராட் கோக்லி

### புவனேஸ்வர் குமாரை நீக்கியமையை கடுமையாகக் கண்டிக்கிறார் சேவாக்

“தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் புவனேஸ்வர் குமாரை நீக்கியமை தவறு. இந்த ஆட்டத்தில் ஓட்டங்களைக் குவிக்கவில்லையாயின் அடுத்த ஆட்டத்தில் தன்னையும் நீக்க வேண்டும் கோக்லி” என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக்.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் புவனேஸ்வர் குமார் மிகச் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தார். இதனால் அவரின் நீக்கத்துக்கு பல தரப்பிடம் இருந்தும் விமர்சனங்கள் குவிகின்ற நிலையில் இவ்வாறு தெரிவித்தார் சேவாக். “சிகர்தவான் ஒரு ஆட்டத்தில் தோல்வியடைந்ததற்காகவும், காரணமில்லாமல் புவனேஷ்வர் குமாரை நீக்கியதையும் பார்க்கும்போது, நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தில் ஓட்டங்களைக் குவிக்கத் தவறினால் அடுத்த ஆட்டத்தில் கோக்லி களமிறங்கக்கூடாது. அவர் தன்னைத் தானே நீக்க வேண்டும். புவனேஸ்வர் குமாரை நீக்கியமை நியாயப்படுத்த முடியாத செயல்” என சேவாக் மேலும் தெரிவித்தார். (ம)



## வெளி விமர்சனங்கள் கணக்கெடுக்கப்படா

### கோக்லி பதிலடி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியில் இருந்து புவனேஸ்வர் குமார் நீக்கப்பட்டமைக்காக கோக்லி மீது கடும் விமர்சனங்கள் வைக்கப்படும் நிலையில், “வெளியில் இருந்து வரும் விமர்சனங்கள் கணக்கெடுக்கப்படாது” என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.
“எங்களுக்குத் தேவையானதெல்லாம் சமச்சீரான அணியே. ஒரு வீரர் எதிர்பார்க்கப்படும் சேர்க்கைக்குப் பொருந்தினால் அவருடன் களமிறங்குவோம், நிச்சயமாக வெளியிலிருந்து உருவாக்கப்படும் கருத்துகளின் படியோ அல்லது ஊரே இதைப் பேசுகிறது என்பதற்காகவோ அதன் வழி செல்லமாட்டோம்” என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



## ரகானேவின் வெளியேற்றத்தை விரும்புகிறது தென்னாபிரிக்கா

என்கிறார் டொனால்ட்



"இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் ரகானே, விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இருந்து வெளியே இருப்பதை தென்னாபிரிக்க அணி விரும்பும்" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் டொனால்ட்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் இந்திய அணியில் ரகானே இடம்பெறவில்லை. நேற்றுமுன்தினம் ஆரம்பமான இரண்டாவது ஆட்டத்திலும் ரகானே நீக்கப்பட்டிருந்தார். இதையடுத்தே டொனால்ட் இவ்வாறு தெரிவித்தார்.

"ரகானே அணியில் இடம்பிடிக்காதது இந்திய அணிக்கு மிகவும் கடினமானது என நான் நினைக்கிறேன். கடந்த வரும் இந்திய அணி தென்னாபிரிக்கா வந்தபோது ரகானே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். கப்பலை நிலையாக வைத்திருக்க ரகானேயால் முடியும் என்பது எனது பார்வை. அவர் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தக் கூடியவர்" என்று டொனால்ட் மேலும் தெரிவித்தார். (ம)



## தமிழில் பொங்கல் வாழ்த்து ஹர்பஜன் சிங் தெரிவித்தார்

தமிழர் திருநாளாம் தைத் திருநாள் வாழ்த்தை தமிழில் வெளியிட்டு, பலரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளார் ஹர்பஜன் சிங். "வேகமும், விவேகமும், உழைப்பும், தூய்மையும் சொத்தாய் கொண்ட தமிழ் மக்கள் வாழ்வில் மகிழ்வோடு பொங்கட்டும் புதுப் பொங்கல். என் இதயம் கனிந்த தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள் என்றும் அன்புடன் உங்கள், ஹர்பஜன் சிங்" என்று தனது ருவிற்றர் பதிவில் ஹர்பஜன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். (ம)

Harbhajan Turbanator
@harbhajan_singh

வேகமும் , விவேகமும் , உழைப்பும் , தூய்மையும் சொத்தாய் கொண்ட தமிழ் மக்கள் வாழ்வில் மகிழ்வோடு பொங்கட்டும் புது பொங்கல் என் இதயம் கனிந்த தமிழர் திருநாள் நல்வாழ்த்துக்கள்

என்றும் அன்புடன் உங்கள்,
ஹர்பஜன் சிங்

10:22 AM - Jan 14, 2018

697 3,727 8,994

பங்களாதேஷுக்கு எதிரான

## இலங்கை அறிவிப்பு

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. வேகப்பந்து வீச்சாளர் லக்மல் துணைத்தலைவராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

இலங்கை அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் முதலாவதாக நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது ஆட்டம் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கை அணியே நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

**இலங்கை அணி விவரம்–** சந்திமல் (தலைவர்), லக்மல் (துணைத் தலைவர்), கருணாரத்ன, மத்தியூஸ், குணதிலக, குசல் மெண்டிஸ், தனஞ்ஜெய டி சில்வா, டிக்வெல்ல, ரோசன் சில்வா, கேரத், டில்ருவான் பெரேரா, துஷ்மந்தா சமீ, லக்சன் சண்டகன், அகில தனஞ்செஜ, லகிரு கமகே, ரகிரு குமார.

டெஸ்ட் தொடர் முடிவடைந்த பின்னர் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இரண்டு ஆட்டங்களும் முறையே பெப்ரவரி 15, பெப்ரவரி 18 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம)

## ஐ.பி.எல். ஏலத்தில் 1,122 வீரர்கள்




ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்பதற்காக இந்த ஆண்டு ஆயிரத்து 122 வீரர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இங்கிலாந்து அணித்தலைவர் ஜோ ரூட் முதல் முறையாக ஏலத்தில் கலந்துகொள்கிறார்.

ஐ.பி.எல். தொடரின் 11ஆவது சீசன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்கெடுக்கவுள்ள வீரர்கள் தம்மைப் பதிவு செய்யும் கெடு நேற்றுமுன்தினத்துடன் முடிவுக்கு வந்துள்ளது. இதன்படி ஆயிரத்து 122 வீரர்கள் இந்த ஏலத்தில் பங்கெடுக்கவுள்ளனர்.

பன்னாட்டு வீரர்களைப் பொறுத்தவரையில் கிறிஸ் கெய்ல், பென் ஸ்ரோக்ஸ் முன்னணியில் உள்ளனர். பெங்களூர் அணியில் விளையாடிய கெய்லின் ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. எனவே, அவர் மீண்டும் ஏலத்தில் பங்கேற்கிறார். இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் முதல் முறையாக ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்கிறார்.

வெளிநாடுகளில் இருந்து மொத்தம் 282 வீரர்கள் ஏலத்தில் பங்கேற்க பெயர்களை பதிவு செய்துள்ளனர். அதிகபட்சமாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 58 வீரர்கள் பதிவு செய்துள்ளனர் தென்னாபிரிக்காவில் இருந்து 57 பேரும், மேற்கிந்தியத் தீவுகள், இலங்கையில் இருந்து தலா 39 பேரும், நியூசிலாந்தில் இருந்து 30 பேரும், இங்கிலாந்தில் இருந்து 26 பேரும் ஏலத்தில் பங்கேற்கின்றனர். (ம)

# தென்னாபிரிக்காவை நெருங்க கோக்லி போராட்டம்


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

**www.ambafrance-lk.org**

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



**ஆங்கிலம்**

**உலகிலுள்ள எல்லாக்குழந்தைகளும் 2 தொடக்கம் 4 வயதிற்குள்ளேயே மொழியைப்பேசக்கற்றுக்கொள்கின்றன ஆனால் பெரியவர்களான எம்மால் இன்று வரை ஆங்கிலம் பேசப்பழகமுடியாமல் இருப்பதற்கு தவறான வழிமுறையிலான ஆங்கிலக்கற்பித்தலே காரணமாகும்.**

நேரடியான உரையாடற்பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வெறும் 48 மணிநேர வகுப்புகளில் எவராலும் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியுமென எமது 20 வருட மொழிஆராய்ச்சியில் நாம் நிரூபித்துள்ளோம்

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 20.01.2018 சனிக்கிழமை**

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.

வாரநாள் (திங்கள்,புதன்) பயிற்சி ஆரம்பம் - 17.01.2018
காலை 08.00 – 10.00

**3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.**

**SAAMSON** Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில் அருகில்) யாழ்நகர்.
☎ 077 1570 486 021 320 3313




இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில். தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸுக்காக 335 ஓட்டங்களைக் குவித்துள்ள நிலையில் தென்னாபிரிக்காவை நெருங்குவதற்கு போராட்டம் காட்டுகிறது இந்தியா.

நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் அந்த அணி 6 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பிளாசிஸ் 24 ஓட்டங்களுடனும். மகாராஜ் 10 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 18 ஓட்டங்களுடன் சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் மகாராஜ். மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் பிளாசிஸ். பின்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுக்க சகல இலக்குளையும் இழந்து 335 ஓட்டங்களைச் சேர்த்தது தென்னாபிரிக்க அணி.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், இசாந் சர்மா 3 இலக்குகளையும் சமி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப் வீரர்களாக லோகேஸ் ராகுல் மற்றும் முரளி விஜய். 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ராகுல். ஓட்டமெதையும் பெறாத நிலையில் ரண்அவுட் செய்யப்பட்டார் புஜாரா. 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியது இந்தியா. முரளி விஜய்யுடன் இணைந்தார் கோக்லி. இணைப்பாட்டம் நிலைபெற தலைதூக்கியது இந்திய அணி. அணி 107 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முரளி விஜய். ரோகித் 10 ஓட்டங்களுடனும். பார்திவ் பட்டேல் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். கோக்லி மறுமுனையில் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தார். பாண்டியாவும் தாக்குப் பிடிக்க நாள் முடிவில்.இந்திய அணி 5 இலக்குளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கோக்லி 85 ஓட்டங்களுடனும். பாண்டியா 11 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 04 . 1936



இறப்பு 13 . 01 . 2018

## சரவணை அண்ணாமலை

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் சூராவத்தை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை அண்ணாமலை 13.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் பத்மலோஜினி, மீனலோஜினி (கனடா), ஆனந்தலோஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் எழிலரசியின் பெரியதந்தையும் ஜேமஸ், ராசலிங்கம்(கனடா),சிங்கராசா(கனடா),தனஞ்சயன்(டாக்டர்)ஆகியோரின் அன்பு மாமனும் அருளானந்தம், பாக்கியம், சரஸ்வதி, கோகிலாதேவி, புஸ்பராணி, தேவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2018) செவ்வாய்க்கிழமைஏழாலைமத்தியிலுள்ளஅவரது இல்லத்தில்நடைபெற்றுமு.ப.11.00 மணியளவில்பூதவுடல்தகனக்கிரியைக்காகஏழாலை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 12923/15)



ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான லாலிகா தொடரில், இன்று இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில் ரியல் சொசைற்ரெட்டை எதிர்கொள்கிறது பார்சிலோனா. இந்த ஆட்டத்துக்காக அந்த அணி நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது. (ம)

## முத்தரப்பு தொடர் இன்று ஆரம்பம்

இலங்கை - சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகள் இன்று மோதவுள்ளன. இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணியளவில் இன்றைய ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை அணி தனது முதலாவது ஆட்டத்தில்நாளைமறுதினம் சிம்பாப்வேயை எதிர்கொள்ளவுள்ளது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.